

# ...ட்சியகம்

...சியகமா?' என்று நீங்கள்
...அது இங்கல்ல... தாய்லாந்து
...் கழகத்தில்!
...மேற்பட்ட எறும்புகள்
...ள்ளன. கிட்டத்தட்ட
...குடும்பங்கள் இருப்பதாக

...லை தராத வரை இந்த





லட்சுமி பிரபா

# பாதைகள் மாறலாம்

## 1

**ம**ழை பெய்து ஓய்ந்த காலை நேரக் குளுமையில் ஒரு கனம் இருந்தது. காற்று குளிர்வாய் சிலீரென்று தடவிவிட்டதில் தேகம் சிலிர்த்தாள் காவ்யா.

கண்ணுக்குத் தெரியாத பூஞ்சாரல் நனைத்ததால்

தார்ச்சாலையும், இருமருங்கும் அசைந்த மரம்– செடிகளும் கண்களுக்கு இதமாய் விருந்தளித்தன.

சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு கைகளை பரபரவென்று தேய்த்து, கன்னங்களில் ஒத்தடம் கொடுத்தபடி... மெல்ல அண்ணாந்து பார்த்தாள்.

வானத்தின் நடுவே பளீரிட்ட வண்ணப் பாலமாய் வானவில் அவளது கண்களைக் கட்டிப்போட்டது.

மூணாறு எஸ்டேட் 'கெஸ்ட் ஹவுஸ்' வாசலில் நின்றிருந்தவள், படிக்கட்டுகளைத் தாண்டி மெல்லப் புல்வெளியை நோக்கி நடந்தாள்.

அந்தப் பச்சைப் பரப்பின் நடுவே நின்ற பன்னீர் மரம் மிக நளினமாய் கிளை பரப்பியதோடு, தன் நிழல் விழும் இடமெங்கும் இப்போது வெண்ணிற மலர்களால் நிறைத்திருந்தது.

ரப்பர் செருப்புகளை கழற்றிவிட்டு– பனி மகுடங்களைத் தாங்கி ஜொலித்த புல் மீது பாதங்களை வைக்க– குளிர் ஜிவ்வென்று உச்சந்தலைக்குப் பாய்ந்தது.

கையடக்க காமிராவைக் எடுத்துக்கொண்டு 'கெஸ்ட் ஹவுசில்' இருந்து வெளிப்பட்ட மாதவன், காவ்யாவைக் கண்டதும் சட்டென்று நின்றான்.

காவ்யா தேவதை போன்று பேரழகுடன் மிளிர்ந்தாள். சிற்பி செதுக்காத பொற்சிலையாய் வசீகரித்தாள்.

"என்ன காவ்யா இது? எஸ்டேட் குளிருல கை, கால் எல்லாம் வெடவெடங்குது. நீ என்னடான்னா வெறுங்காலோட நிக்கிறியே?"– கேட்டபடி படிகளில் இறங்கினான்.

"ஒவ்வொரு புல்லும் வைர கிரீடம் சூட்டின மாதிரி பனித்துளியைத் தாங்கி நிக்கிறதைப் பார்த்தியா மாதவன்? நீயும் என்னை மாதிரி நின்னு பாரேன். எவ்வளவு சிலீர்னு இருக்கு தெரியுமா?

அதோ வானவில்லைப் பாரேன். எவ்ளோ அழகா இருக்கு பாரு. வானம் ஒரு மாலையைச் சூட்டிக்கிட்டது போல..."



"உம்! அபாரமாத்தான் இருக்கு. அதைவிட அழகான ஒரு கவிதையை நான் சொல்லட்டுமா? முதல்லே செருப்பை மாட்டு காவ்யா. கால்லே அட்டை ஏறிக்கும்."

அதைக் கேட்டதும் அவசரமாய் செருப்புகளைக் கால்களில் திணித்துக்கொண்ட காவ்யா, ஆர்வமாய் விழிகள் விரிய மாதவனை ஏறிட்டாள்.

"சரி... இப்ப சொல்லு! அழகான கவிதை சொல்றேன்னியே?"

"வெண்மலர்
விரிப்பில்...
ஒரு ஒற்றை ரோஜா!
கவிதை எப்படி இருக்கு?"

"ம்... நல்லா இருக்கே! உன் ரசனையே அலாதிதான். ஆமா... ஒத்தை ரோஜாவை இங்கே எங்கே பார்த்தே?"

வெகுளியாய் கேள்வி கேட்ட வண்ணம் நடையை எட்டிப்போட்டு 'கெஸ்ட் ஹவுஸ்' பின்னால் தெரிந்த சரிவில் எட்டிப் பார்த்தாள்.

"இங்கேயும் ரோஜா இல்லையே?" ஏமாற்றம் ததும்பும் விழிகளுடன் மாதவனை ஏறிட்டாள்.

"இன்னுமா புரியலை? படிப்புலே 'நம்பர் ஒன்'! கம்ப்யூட்டர் என்ஜினீயரா படிப்பை முடிச்ச கையோட எங்க கம்பெனியில வேலைக்கு வந்துட்ட திறமைசாலி. சுறுசுறுப்பா, புத்திசாலித்தனமா செயல்பட்டு எம்.டி.கிட்டேயும் நல்லபேர் சம்பாதிச்சுட்டு இருக்கிறவ. சூட்சுமமா இதை மட்டும் புரிஞ்சுக்க முடியலையே?"

"தினமும் நாலுவாட்டியாவது என்னைப் பாராட்டிப் பேசினாதான் உனக்கு தூக்கமே வரும்போல? இங்கே எஸ்டேட்டுக்கு வந்த எடத்துலேயும் ஆரம்பிச்சுட்டியா? நீ மட்டும் என்னவாம்... எந்த விதத்துல குறைச்சலாம்?

எல்லா விஷயத்துக்கும் நீதானே எனக்கு முன்னோடி?

நான் இந்த அளவுக்கு உசந்து நிக்கிறதுக்கு காரணமே உங்க குடும்பம்தானே? இதுக்கு காலத்துக்கும் நான் உனக்கு நன்றிக்கடன் பட்டிருக்கேன் தெரியுமா? சரி... சில விஷயங்களிலே நான் ஒரு 'டியூப் லைட்'னு உனக்கு நல்லாத் தெரியுமே? சூட்சுமமா பேசாம- புதிர் போடாம... தெளிவா சொல்லேன்"- வெகுளித்தனமாய் பேசியபடி அருகில் வந்து நின்றவளைப் பார்த்து மெல்ல முறுவலித்தான் மாதவன்.

"அந்தப் பன்னீர் மரத்துக்கு அடியில போய் நில்லு. உன்னை ஒருவாட்டி ஏறஇறங்கப் பார்த்துக்கிட்டு, நான் சொன்னதை திருப்பிச் சொல்லிப் பாரு... உனக்குப் புரியும்."

மலங்க விழித்தபடி பன்னீர் மரத்தடியை ஒருமுறை உற்றுப் பார்த்துவிட்டு- தன்னை கீழே மேலே பார்த்ததும்- மாதவன் தன்னைத்தான் கவிதைத்தனமாய் பாராட்டி இருக்கிறான் என்பது புரிந்து லேசாய் முகம் சிவந்தாள்.

"சின்ன வயசிலேருந்து ஒண்ணா வளர்ந்தோம். உனக்கு என் மேல அலாதிப் பிரியம், நேசம். அதான் சதா என்னை உசத்தியா பார்க்கிறே. சரி... சரி... வானவில் மறையறதுக்கு முன்னாடி சீக்கிரமா அதை ஒரு படம் எடு மாதவா."

மறுவார்த்தை பேசாமல் வானவில்லின் எழிலை தன் கேமிராவுக்குள் நேர்த்தியாய் சிறை பிடித்தான் மாதவன்.

"குடும்பக் கஷ்ட நஷ்டத்தை உணர்ந்து- அம்மாவோட மனசைப் புரிஞ்சுக்கிட்டு பொறுப்பா நடந்துக்கிற- நல்ல குணாதிசயங்கள் அமைஞ்ச பொண்ணு நீ! நான் ஒண்ணும் உன்னை உசத்திப் பேசலை... உள்ளதைத்தான் சொன்னேன்.

பார்த்த மாத்திரத்திலே சட்டுன்னு எல்லோருக்கும் பிடிச்சுப் போகுது. வேலைக்குச் சேர்ந்து கொஞ்ச நாள்லே நல்லபேர் வாங்கிட்டே பார்த்தியா? எங்க அம்மா அடிக்கடி என்ன சொல்றாங்க தெரியுமா?

'அழகு இருந்தா கண்டிப்பா ஆணவம் வந்து ஒட்டிக்கும். உலகத்துமொத்த அழகையும் சேர்த்து காவ்யாவைப் படைச்சுட்டாரு பிரம்மா. இவ்ளோ அழகான பொண்ணுக்கு



ஒரு துளிகூட கர்வம் தலைகாட்டவே இல்லையே?'ன்னு அடிக்கடி ஆச்சரியப்படுறாங்க."

"போதும் மாதவா! இன்னிக்கு என்னமோ பாராட்டுப் பத்திரம் வாசிக்கிற 'மூடு'லயே இருக்கியே? அம்மா கற்பகம், அப்பா சிவகுரு, நீ... இப்படி குடும்பத்துல இருக்கிற மூணு பேருக்கும் ரொம்ப நல்ல குணம். இதுவே எவ்ளோ அதிசயம் தெரியுமா? நல்லவங்க கண்ணுக்கு எல்லாமே நல்ல விஷயங்கள்தானே தெரியும்?

உங்க குடும்பம் மட்டும் இல்லேன்னா எங்க குடும்பமே நட்டாத்துல நின்னுருக்கும். எங்க அம்மா என்ன சொல்வாங்க தெரியுமா? 'வாழ வழி தெரியாம திக்குமுக்காடி நின்னேன். கற்பகம் கைகொடுத்து தூக்கிவிட்டா. இல்லாட்டிரெண்டு பெண் குழந்தைகளை சேர்த்துக் கட்டிக்கிட்டு கிணத்துல குதிச்சிருப்பேன்'னு சொல்லி கண்ணீர் விடுவாங்க...

அந்த செய்நன்றிக்கு நாங்க உங்களுக்கு காலத்துக்கும் கடமைப்பட்டு இருக்கோம் மாதவா. உங்க நட்பும், அன்பும் கிடைக்கிறதுக்கு போன ஜென்மத்துல ஏதோ தவம் பண்ணி இருக்கணும். ஏதோவொரு பேச்சுக்காக சொல்ற வார்த்தையில்லை மாதவா இது. என்னோட அடிமனசிலே இருந்து வர்றது!

நான் உயிரோட இருக்கற வரை இந்த நன்றியுணர்ச்சி மாறவே மாறாது. கடைசி காலம் வரைக்கும் நம்ம நட்பு நீடிக்கணும். எந்தக் கோவிலுக்குப் போனாலும் சரி... பகவான்கிட்ட நான் வைக்கிற முதல் கோரிக்கை இதுவாகத்தான் இருக்கும்."

நெஞ்சம் நெகிழ்ந்த காவ்யாவின் அகன்ற விழிகளில் கண்ணீர் கட்டியது.

காவ்யாவின் தாயார் அபிராமியும், மாதவனின் தாயார் கற்பகமும் இணைபிரியாத தோழிகள். இருவருமே சென்னையை அடுத்த குன்றத்தூரில் பக்கத்து வீடுகளில் குடியிருந்தனர்.

தூரத்து உறவு உண்டென்றாலும், ஆத்மார்த்தமான அன்பே அவர்களை சங்கிலியால் பிணைத்திருந்தது.

அபிராமியின் கணவர் பத்மநாபனுக்கு அந்தக் காலத்து பரம்பரை வீடு மட்டுமே இருந்தது. பஜாரில் காய்கறிக் கடை நடத்தி

வந்தார். வருமானம் வரவுக்கும், செலவுக்கும் போதுமானதாய் இருந்தபோதிலும்... மனைவியை உள்ளங்கையில் வைத்துத்தான் தாங்கினார். குழந்தைகள் காவ்யா, பவ்யா மீது உயிரையே வைத்திருந்தார்.

காவ்யாவுக்கு எட்டு வயதிருக்கும். மஞ்சள் காமாலையில் படுத்தவர் மீண்டும் கண் விழிக்கவே இல்லை. ஒரேடியாக போய்ச் சேர்ந்துவிட்டார். அப்போது பவ்யாவுக்கு வயது நான்குதான்!

அபிராமியைத் தேற்றி... பெரும் சோகத்தில் இருந்து மீட்டு யதார்த்தத்திற்குத் திரும்பும் வரை கற்பகம் துணையாய் நின்றாள். சிறுதொழில் தொடங்கவும் ஆலோசனை கொடுத்தாள்.

கற்பகம் அதோடு நிற்கவில்லை. சகல மளிகை சாமான்களையும் வாங்கி அபிராமியின் வீட்டில் இறக்கிவிட்டாள்.

கற்பகத்தின் கரங்கள் ராசியானவை என்றுதான் சொல்ல வேண்டும். இரண்டாயிரம் ரூபாயை முதலீடாக வைத்து–தன்னம்பிக்கையையும், வைராக்கியத்தையும் தன் இரு கரங்களாகக்கொண்டு தீவிரமாய் உழைக்க ஆரம்பித்தாள் அபிராமி.

ஆர்டரின் பேரில் பலகாரங்கள், பட்சணங்கள் செய்து கொடுத்து வருவாய் ஈட்டியவள்... ஐந்தாறு பெண்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டாள்.

சிறு வயதிலிருந்தே தாயின் கஷ்ட நஷ்டத்தை உணர்ந்ததாலோ என்னவோ காவ்யாவுக்கு படிப்பு அபாரமாய் வந்தது. கூடவே, கற்பகத்தின் குடும்பம் மீது அதீத விசுவாசம்!

நல்ல மனம் படைத்த கற்பகத்திற்கு அடிக்கடி உடம்புக்கு முடியாமல் போய்விடும். அவள் கணவன் சிவகுருநாதன், மாதத்தில் பாதி நாட்களுக்கு மேல் வியாபார விஷயமாக வெளியூர் போய்விடுவார்.

அந்த மாதிரி நேரங்களில் அபிராமியும் சரி, காவ்யாவும் சரி கற்பகத்தை கண்ணை இமை காப்பது போல் கவனித்துக்கொண்டனர். விடுமுறை நாட்களில் சதா அருகிலிருந்து பணிவிடை செய்வாள் காவ்யா.



அப்போது ஒன்றாகப் பழகியதாலோ, தாய் மீது அதிக அக்கறை காட்டுவதாலோ காவ்யா மீது மாதவனுக்கு ஈர்ப்பு ஏற்பட்டிருந்தது.

நல்ல நண்பன் என்ற வட்டத்திற்குள் இதுகாலம் வரை நின்றான். சமீபத்தில் அவனது அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்த காவ்யா, ஒரே கேபினுக்குள் அவனுக்கு உதவியாளராக பணியாற்றத் தொடங்கினாள்.

அவளது அபார திறமை, வேலையில் அவள் காட்டிய ஈடுபாடு, அவனைப் போலவே விவரங்களை விரல் நுனியில் அடக்குவதற்கு காட்டிய ஆர்வம்– இதெல்லாம் மாதவனை அசைத்துப் பார்த்தன.

அவனையும் அறியாமல் நட்பு வட்டத்தை மனதளவில் தாண்டிவிட்டிருந்தான். அவனுக்குள் காதல் அரும்பு மொட்டவிழ்ந்து மெல்ல மலரத் தொடங்கியது.

அதை வெளிப்படுத்த ஏதோ ஒன்று தடுத்தது. அந்தத் தயக்கம் இருவரது எதிர்காலத்தில் திராவகத்தை ஊற்றியது.

## 2

**தா**ய் அபிராமி மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தாள் காவ்யா.

அம்மாவைக் காணும்போதெல்லாம் மனம் பாசத்தில் பாகாய் கரைந்துவிடும். மூன்று மாதங்களுக்கு முன்பு...

வேலை நியமன உத்தரவை கைகளில் கொடுத்தவள், சட்டென்று பாதங்களில் விழுந்து பணிந்தாள்.

அபிராமிக்கு விழிகளில் நீர்த் திரையிட்டது.

'நான் பட்டபாடு வீண் போகலை'– ஆனந்தத்தில் கண்ணீர் உடைப்பெடுத்து மெல்ல வழிந்தது.

"சந்தோஷப்பட வேண்டிய நேரத்துல ஏம்மா கண் கலங்கறே?

என்னை ஆசிர்வாதம் பண்ணும்மா.”

“உன் நல்ல குணத்துக்கு அமோகமா இருக்கப்போறே காவ்யா. நீ பெரிய மலையைக் கடந்துவிட்ட மாதிரி மலைப்பா இருக்கு.”

“போதும்மா. ஒண்டி மனுஷியா குடும்பப் பாரத்தை இழுத்து நீ ஓடா தேய்ஞ்சது போதும். நிம்மதியா ஓய்வு எடு. கோவில் குளத்தைச் சுற்றிக்கிட்டு அக்கடான்னு இருந்தாப் போதும்”—என்றபடி நகரப் போனவளின் கையை இழுத்தாள் அபிராமி.

“அவசரப்படாதே காவ்யா! நம்ம தயாரிப்பு பொருட்களுக்கு நல்ல வரவேற்பு இருக்குன்னு உனக்கு தெரியுமே? பவ்யா படிச்சு முடிக்கிற வரைக்கும் நீ இதைப் பத்தி மூச்செடுக்காம இரு. எனக்கென்ன... நான் தெம்பாத்தானே இருக்கேன்? கடைசிவரை சுறுசுறுப்பா ஓடிட்டு இருந்தாத்தான் உடம்புக்கு நல்லது. சோர்ந்து உட்கார்ந்தா அது நம்மை மூலையில முடக்கிப் போட்டுடும்.

நான் என்ன முன்னே மாதிரி தனி மனுஷியாவா கஷ்டப்படுறேன்? உதவிக்கு ஆட்கள் இருக்காங்கல்ல? எனக்கு ஒரு கஷ்டமும் இல்ல காவ்யா. நான் இப்போ மேற்பார்வைதானே பார்க்கிறேன்.”

“மேற்பார்வையோட எங்கேம்மா நிறுத்திக்கிறே? முந்தானையை இடுப்புல சொருகிக்கிட்டு வேலை செய்யறவங்களுக்கு மத்தியில இறங்கிடறே... சொல்லப்போனா அவங்களுக்கும் மேல வேலைகளை இழுத்துப் போட்டுக்கறே.”

“அங்கேதான் சூட்சுமம் இருக்கு காவ்யா. நாம்ப வேறு பக்கம் நகர்ந்துட்டா ரொம்ப மெத்தனமா வேலை செய்வாங்க. தொழிலாளியோட தொழிலாளியா நாமளும் களத்துல இறங்கிட்டா... நேரத்தை வீணடிக்காம அக்கறையா செயல்படுவாங்க.

நீ என்னைச் சொல்லி குறைபட்டுக்கிறயே? படிக்கறப்போ லீவு வந்தால் போதும். நீயும் எங்கக் கூடவே வேலை செய்ய ஆரம்பிச்சுடுவியே? ‘கல்லூரியில படிக்கிற பொண்ணு... உனக்கு எதுக்கு இந்தக் கஷ்டம்?’னு கேட்டா... காதுலேயே வாங்கிக்கமாட்டியே?




பெர்னாட்ஷா

## வயது தடையல்ல..

‘ஹிஸ்டரி ஆப் தி இங்கிலீ[illegible] ஸ்பீக்கிங் பீப்பிள்’ என்ற நூலை எழுதியபோது சர்ச்சிலுக்[illegible] வயது 80.

ஒரு நாடகத்தை பெர்னாட்ஷா எழுதியபோது அவருக்[illegible] வயது 93.

— அ.சா.குருசாமி, செவல்கு[illegible]

## இருமலா?

ஊமத்தம் பூவை காயவைத்து கொளுத்தி புகையை முகர்ந்தால் போதும். இருமல் சரியாகிவிடும்.

ஆர். பிரகாசம்,
கோவிலூர்.

## மல்ல[illegible]

கோவிலில் சாமி திருவீதி உலா[illegible]போது இசைக்கப்[illegible] இசை— மல்லாரி. [illegible]து கோவி[illegible]த் தவிர, [illegible]று இடங்[illegible]ல் வாசி[illegible]ப் படுவ[illegible] நாதஸ்[illegible]ல் மட்டுமே[illegible] இசைக்[illegible]

— பா[illegible]



# நாட்டிய நன்மைகள்!

பரதநாட்டியம் மீதான காதலால் பள்ளிப் படிப்புக்கு 'குட்பை' சொல்லிவிட்டு, முழு நேர நாட்டிய பயிற்சி பெற்று வருகிறார், சென்னையைச் சேர்ந்த ஜெய்குஹேனி.

"பரதநாட்டியம் ஒரு தெய்வீக கலை. இந்தக் கலையால் உடல், மனரீதியா நிறைய நன்மைகள் கிடைக்கும். நாட்டியம் ஆடும்போது சீரான ரத்த அழுத்தம், கண்களை அங்குமிங்கும் அசைப்பதால் அதிக கண்பார்வை என்று எத்தனையோ நன்மைகள் உண்டு.

இந்த அற்புத கலையை நம் நாட்டில் வளர்ப்பதற்காக நான் நடனப்பள்ளி ஒன்றை தொடங்க உள்ளேன். மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவ- மாணவிகளுக்கு நாட்டியப் பயிற்சி அளிப்பேன்" என்கிறார், ஜெய்குஹேனி.

இவருடைய தந்தை ராஜசேகரரெட்டி, அம்மா இந்திரா லட்சுமி. இவர்கள் சென்னை அயனாவரத்தில் வசித்து வருகிறார்கள்.

**– பி. இருதயராஜ், சென்னை.**

## சதம்

கிரிக்கெட் விளையாட்டில் சதம் என்றால் 100 ஓட்டங்கள் என்று தெரியும். கேரம் விளையாட்டில் 'சதம்' என்றால் பலருக்குத் தெரியாது. ராணி காயுடன் (சிவப்புக் காய்) 9 வெள்ளைக்காய்களையோ, 9 கறுப்புக் காய்களையோ தொடர்ந்து 'பாக்கெட்' செய்வதற்குத்தான் 'சதம்' என்று பெயர்.

**– எஸ். விஜயலட்சுமி.**



அப்போ என் மனசு ரொம்பவே நெகிழும். இந்தக் காலத்து பொண்ணுங்க மாதிரி இல்லாம கஷ்டநஷ்டத்தை உணர்ந்து ரொம்பவே பொறுப்பா இருக்காளே... நம்ம மகள்னு பெருமிதமா இருக்கும்."

"தாயைப் போல பிள்ளை... நூலைப் போல சேலைன்னு சொல்லுவாங்க. அது ரொம்ப சரியாதான் இருக்கு" என்ற குரலைக் கேட்டு இருவரும் சட்டென்று திரும்பிப் பார்த்தனர்.

புன்னகை ததும்பிய முகத்துடன் வெகுஉரிமையாய் கூடத்தில் வந்து நின்றான் மாதவன்.

"வாப்பா மார்தவா? உட்காருப்பா"– உபசரித்தாள் அபிராமி.

"உங்களைப் பார்த்தா எனக்கு ஆச்சரியமா இருக்கும்மா... கடின உழைப்பு, ஈடுபாடு எல்லாமே இவளுக்கு உங்க மூலமாதான் வந்திருக்குன்னு நான் நம்பறேன். உங்க மேல எவ்ளோ பாசம் வச்சிருக்காம்மா?

உங்க கனவை அவ நிறைவேத்திட்டதா சந்தோஷப்படுறீங்க. அவ ஆசையை நிறைவேற்ற வேணாமா? அதானே நியாயம்! என்னைப் பொறுத்தவரை நீங்க ஒரு சாதனைப் பெண்மணி. காவ்யாவோட கோரிக்கைக்கு நீங்க செவிமடுத்துதான் ஆகணும். என் தோழிக்காகப் பரிஞ்சு பேசத்தான் வந்தேன். என்னோட வேண்டுகோளும் அதுதான்! தயவுசெய்து..."

"கற்பகம் எனக்கு சிநேகிதின்னு சொல்றதைவிட.... எங்க குல தெய்வம்னு சொல்வேன். அவளோட ஒரே புள்ளை நீ! என் மேல இவ்ளோ பரிவும், பாசமுமா இருக்கே. சந்தோஷமா இருக்கு. நீ ஏதாச்சும் கேட்டு நான் மறுக்க முடியுமா? வேலையை நிறுத்திட்டு, வர்ற புள்ளைங்களை சம்பளத்தைக் கொடுத்து அனுப்பிடறேன். ஆனா, 'ஸ்டாக்' தீர்ற வரைக்கும் நான் ஸ்டாலை திறந்து வச்சுதான் ஆகணும். சரியா...?"

"அப்பாடா! அது போதும். கடைசியில என் வேண்டுகோளுக்கு செவி சாய்ச்சீங்களே? ரொம்ப சந்தோஷம்மா... ஆங்... உங்க கையால பனை வெல்லம் தட்டிப்போட்ட காப்பியை குடிக்கணும் போல இருக்கும்மா. அந்த ருசிக்கு எதுவும் ஈடாகாதும்மா."

"இ... இதோ... அஞ்சே நிமிஷத்துல வந்துடறேன்..."– அபிராமி பரபரப்பாய் அடுக்களைக்குள் அடைக்கலமானாள்.

"ரொம்ப ரொம்ப நன்றி மாதவா. எனக்காக அம்மாகிட்டே பேசினதுக்கு நன்றி."

"நன்றியெல்லாம் சொல்லி என்னை வேற்று மனுஷன் ஆக்கிடாதே காவ்யா. உங்க அம்மாவுக்கு நான் மூத்த மகன் மாதிரிதானே? எத்தனையோ தடவை அவங்க எனக்கு ஊட்டி விட்டிருக்காங்க. அதையெல்லாம் எப்படி என்னால மறக்க முடியும்? அவங்களும் எனக்கு ஒரு அம்மாதான்! அதனால பிரிச்சுப் பேசாதே காவ்யா... சங்கடமா இருக்கு."

"அப்பா இறந்தப்புறம் அம்மா எந்த வெளியூருக்கும் போனதே இல்ல. உள்ளூர்லே இருக்கிற கோவில் குளத்தைச் சுத்தி வந்தாங்களே தவிர... வேற எங்கேயும் போனதில்ல. அவங்களை நாலு இடத்துக்கு அழைச்சுட்டுப் போகணும். இயற்கை எழில் வாய்ந்த பகுதிகளை சுத்திக் காட்டணும்"– கண்கள் விரிய காவ்யா பேச– ஊன்றி கவனித்தான் அவன்.

"என்கிட்டே சொல்லிட்டேல்ல? கொஞ்ச நாள் போகட்டும்... ஒரு நாலஞ்சு நாள் லீவு போட்டுட்டு நாம ரெண்டு குடும்பங்களும் ஒரு சுற்றுலா போகலாம்."

"சரி மாதவா! அம்மாவுக்கு அப்புறமா என்னை நல்லாப் புரிஞ்சுக்கிட்டது நீ ஒருத்தன்தான். அம்மாகிட்ட இதைப் பத்தி நான் பேசப் போறதைத் தெரிஞ்சுக்கிட்டு சரியான நேரத்துல பரிஞ்சு பேசினியே? ரொம்ப நன்றி மாதவா."

"கேட்கவே ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கு காவ்யா. அம்மாவுக்கு அடுத்த ஸ்தானத்தை எனக்கு கொடுத்தே பாரு... ரொம்பவே சந்தோஷமா இருக்கு."

"இதுக்கா நன்றி சொல்லணும்னு சொன்னே? நல்ல நட்புக்குள்ளே 'நன்றி', 'ஸாரி'– இந்த ரெண்டு வார்த்தைகளை உபயோகப்படுத்தவே கூடாது மாதவா!"

"நீ மட்டும் அடிக்கடி நன்றி சொல்லி மனுஷனை வெறுப்பேத்தலாமா? அந்த வார்த்தையைக் கேட்கும்போது...



அப்படியே அந்நியப்படுற மாதிரி இருக்கு காவ்யா. அதான்..."

"ஸாரி...ஸாரி! இனிமே நான் நன்றி சொல்லலை. அந்த உணர்வு மனசுலே இருந்தாப் போதுமில்லையா? ஸாரி."

"போச்சுடா சாமி"– நெற்றியில் கைவைத்துக்கொண்டான் மாதவன்.

அவனது பரிதாபமான முகத்தைப் பார்த்ததும் காவ்யாவுக்கு சிரிப்பு பீரிட்டது.

"ஓ... ஸாரி! நொந்து நூலாப் போன மாதிரி பார்க்கிறியே? ஸாரி சொன்னதுக்கு ஸாரின்னேன்."

"அதுவும் சரிதான். உனக்கு வேலை கிடைச்சிருக்கே? எனக்கு எதுவும் 'ட்ரீட்' கிடையாதா காவ்யா? பதிலுக்கு பதவி உயர்வு கிடைச்சதாலே நான் 'ட்ரீட்' தரக்கூடாதான்னு கேட்கக்கூடாது. அதுக்கும், இதுக்கும் சரியாப் போச்சுன்னு சொல்லியும் நழுவக்கூடாது. நான் திடீர்னு ஒருநாள் 'ட்ரீட்' தந்துடுவேன். உன்னோட 'ட்ரீட்' என்ன?"

"என்ன இப்படி கேட்டுட்டே? சாக்கு போக்கு சொல்லி நழுவக்கூடியவளா நான்? கண்டிப்பா நான் 'ட்ரீட்' தர்றேன் மாதவா."

"என்னை நல்லாப் புரிஞ்சுக்கிட்ட தோழி. நீ தர்ற 'ட்ரீட்' என் மனசுக்குப் பிடிச்சதா இருக்கணும்... சொல்லிட்டேன்."

"உன்னோட ரசனை என்னன்னு எனக்குத் தெரியும். உனக்கு என்னென்ன பிடிக்கும்னும் தெரியும். நான் தரப்போற 'ட்ரீட்' கண்டிப்பா உனக்குப் பிடிச்சதாத்தான் இருக்கும். ஆனா... அதுக்கு கொஞ்சம் அவகாசம் வேணும்."

"சரி. நான் அவசரப்படவேமாட்டேன். ஆனா, ரொம்ப ஆர்வமா காத்திருக்கேன். காவ்யா, என்ன திடீர்னு முகம் வாடிப் போச்சு?"

"அ... அது வந்து... நான் தரப்போற 'ட்ரீட்' உனக்குப் பிடிக்காமப் போயிட்டா? அதான் கொஞ்சம் கவலையா இருக்கு."

"சந்தோஷமான சமாச்சாரத்துக்குதான் 'டிரீட்' தருவாங்க. ஆனா, அதைப் பத்தி யோசிச்சு கவலைப்படற முதல் மனுஷி நீதான். சின்ன சின்ன விஷயத்துக்கெல்லாம் அதிகமா உணர்ச்சிவசப்படுறே... ரொம்பவே மென்மையான மனசு உனக்கு."

"மறைமுகமா தொட்டாச்சிணுங்கின்னு சொல்ல வர்றே... அப்படித்தானே?"

"அப்பாடா... புரிஞ்சா சரிதான்" என்று அவன் கூறியதும்... இருவரும் கலகலவென்று சிரித்துவிட்டனர்.

பாலைக் காய்ச்சியபடி பனை வெல்லத்தைப் பொடியாக்கி தட்டிப்போட்ட அபிராமி... தற்செயலாய் அடுக்களை ஜன்னல் வழியாகப் பார்வையை ஓட்டினாள்.

காவ்யாவும், மாதவனும் எதிர் எதிரே அமர்ந்தபடி விகல்பமில்லாமல் சிரித்த காட்சியைக் கண்டதும்... மனதுக்கு நிறைவாய் இருந்தது.

'செஞ்சு வைச்ச ஜோடி பொம்மைங்க மாதிரி... ரெண்டு பேரும் எவ்ளோ பொருத்தமா இருக்காங்க. வாழ்க்கையில இவங்க ஒண்ணு சேர்ந்துட்டா எவ்ளோ நல்லா இருக்கும்?' என்ற எண்ணம் அவளுக்குள் எழுந்தது.

'சேச்சே! இதென்ன பேராசை? இப்படியொரு எண்ணம் எனக்குள்ளே வந்தது தெரிஞ்சா கற்பகம் என்ன நினைப்பா? அவளுக்கு என்னிக்கும் நான் விசுவாசமா இருப்பேன்... இருக்கணும். அதான் நியாயம்!

கற்பகம் வசதியானவ. அவ தகுதிக்கு ஏத்தாப்பலதான் மருமகளைக் கொண்டு வருவா. காவ்யாவை அந்த வீட்டுக்கு மருமகளா அனுப்பணும்னு ஆசைப்படுறதே என்னோட மகா தப்பு!

காவ்யாவுக்கு ஏத்த மாதிரி வரன் வாய்க்காமலா போகும்? என்னிக்கும் விரலுக்கேத்த வீக்கம்தான் இருக்கணும். நம்ம தகுதிக்கு மேல ஆசைப்படவே கூடாது.

கொஞ்ச நாளா தலைச் சுற்றல் வந்துக்கிட்டு இருக்கு. அடிக்கடி



நெஞ்சு வலிக்குது. சொன்னா... பிள்ளைங்க பயந்துடுவாங்கன்னு மறைச்சுட்டு வர்றேன். கைமருந்து சாப்பிட்டுட்டு காலத்தை ஓட்டிட்டு வர்ற எனக்கு திடீர்னு ஏதாச்சும் ஆயிட்டா?

ஒரு மகளையாவது கரையேத்திட்டா... என் பாரம் குறையும். அப்புறம் எனக்கு ஏதாச்சும் ஆனால் கூட பரவாயில்லை. சின்னவளை காவ்யா பார்த்துப்பாள்.

கற்பகத்தோட நாத்தனார் அம்பிகையும் பெரிய பணக்காரிதானே? அவளும் ஒரே மகளைத்தான் வச்சிருக்கா. அண்ணன் மகனுக்கு தன் மகளைக் கொடுத்து– சொத்து வெளியே போகாம பாத்துக்கணும்னு ஆசைப்படாமலா இருப்பா?

இதெல்லாம் தெரிஞ்சும் வீணாக ஆசைப்பட்டு... பேராசை நிராசையாகும்போது ஏமாற்றம் தாளாமல் கண்ணீர்விடுவது முட்டாள்தனம் அல்லவா?

இது தேவையா? ஊஹூம்! இன்னிக்கே தெரிஞ்ச தரகர்கிட்டே சொல்லிடணும். நல்ல வரன் கிடைச்சா கரைசேர்க்க வேண்டியதுதான்.'

ஆருயிர் சிநேகிதி கற்பகத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் தனக்குத்தானே முடிவு எடுத்து காரியத்தில் இறங்கிவிட்டாள் அபிராமி.

அந்த முடிவு... காவ்யாவின் வாழ்க்கையை காரிருளில் தள்ளப் போகிறது என்பதை அவள் எப்படி அறிவாள்?

## 3

**கா**வ்யா வேலைக்குச் சேர்ந்து மூன்று மாதங்கள் ஆகி இருந்தன.

"சனி, ஞாயிறோடு சேர்த்து ரெண்டு நாட்கள் லீவு எடுத்துக்கிட்டு சுற்றுலா போயிட்டு வந்துடலாம் காவ்யா. இதுதான் நல்ல சந்தர்ப்பம். ரெயிலில் டிக்கெட் திடீர்னு கிடைக்கிறது கஷ்டம்!

அப்படியே கிடைச்சாலும் பொருட்களைத் தூக்கிட்டு போகணும்.

அதனால பேசாம இங்கிருந்தே ஏ.சி. வேன்ல போயிடலாம். நம்ம விருப்பப்படி சாவகாசமா சுத்திப் பார்க்கலாம். நினைச்ச இடத்துக்கு சரியான நேரத்துல போக வர சவுகரியமா இருக்கும். வேனுக்கு 'புக்' பண்ணிடட்டுமா காவ்யா?"

நீண்ட கூந்தலைப் தளரப் பின்னி, காதோரத்தில் ஒற்றை ரோஜாவை செருகியிருந்த காவ்யா... கணினி திரையிலிருந்து பார்வையை விலக்கினாள்.

"உன் விருப்பப்படி செய் மாதவா! நீ ஒரு முடிவெடுத்தா அது சரியாகத்தான் இருக்கும். நான் என்னிக்கு உன்னை மறுத்துப் பேசி இருக்கேன். அப்பாவும்கூட வருவார்தானே? அவர் வெளியூரிலிருந்து இன்னமும் திரும்பலையே மாதவா?" அக்கறையாய் விசாரித்தாள்.

"நாளைக்கு காலையில வந்துடுவாராம். கவலைப்படாதே. எல்லாரும் சேர்ந்துதான் போகப் போறோம். நாம முதன்முதலா போற சுற்றுலாவாச்சே? என்னிக்கும் மறக்க முடியாத நினைவுகளா மனசுல பதியணும். அதான் என் ஆசை!"

"கற்பகம் அம்மாவுக்கு மலேரியா ஜுரம். ரொம்பவே அவஸ்தை பட்டுட்டாங்க. ரெண்டு வாரங்களா நடக்க ஆரம்பிச்சுட்டாங்க. அவங்களுக்கு குளிர்காத்து ஒத்துக்காது மாதவா. ஸ்வெட்டர், மப்ளர், மாத்திரைகளை மறக்காம எடுத்துட்டுப் போகணும்.

நாம தங்கற கெஸ்ட் அவுசிலே சமைச்சுப் போடறதுக்கு ஆட்கள் இருக்காங்கன்னு சொன்னியே? கற்பகம் அம்மாவுக்கு 'டயட்' ரொம்ப முக்கியம்னு டாக்டர் சொல்லி இருக்காரு. உப்பு, புளி, காரம், எண்ணெய் அதிகம் சேர்க்காம அவங்களுக்கு தனியா சமைக்கணும்"– அவள் பேசுவதை கண் கொட்டாமல் பார்த்தான் மாதவன்.

"சரிதான்! என்னன்ன சாப்பாடுன்னு சொல்லிட்டா, அவங்களே சமைச்சுடுவாங்க. இங்கிருந்து எதுக்காகப் போறோம்? சந்தோஷமா சுத்திப் பார்த்துட்டு வரலாம்னுதானே? அங்கேயும் போயி நாம சமைச்சுக்கிட்டு ஏன் சிரமப்படணும்? எல்லாத்துக்கும் ஆட்கள் இருக்காங்க... நீ கவலைப்படாதே."

"சமைக்கிறதை ஒரு சிரமமான விஷயமா ஒரு பொண்ணு நினைச்சா அதுக்கு அர்த்தமே இல்லை மாதவா!"

"சரி! எனக்கு 'டிரீட்' தர்றேன்னு சொன்னியே... என்னாச்சு? மறந்துட்டியா...?"

"அதெப்படி மறக்கும்?"

"நான் தரப்போற 'டிரீட்' உன் மனசுக்குப் பிடிக்கணுமே... அது என்னவா இருக்கும்னு தலைக்குள்ளே வண்டு குடையுது. சீக்கிரமா யூகிச்சு உனக்குப் பிடிச்சாப்பல 'டிரீட்' தந்துடறேன்... சரியா?"

"நான் காத்திருக்கேன் காவ்யா!"– அவளருகே சுழல் நாற்காலியை திருப்பியபடி சொன்னான்.

அப்போது காவ்யா முகத்தில் சிறு தயக்கம். 'இதைச் சொல்லலாமா... வேண்டாமா?' என்று யோசித்தவள்... துணிவைத் திரட்டிக்கொண்டு மெல்ல நிமிர்ந்தாள்.

"நேத்து குன்றத்தூர் முருகன் கோவிலுக்குப் போயிருந்தோம். தரிசனம் முடிச்சுட்டு பிரகாரத்துல உட்கார்ந்து அம்மா தனக்கு தெரிஞ்சவங்ககூட பேசிட்டிருந்தாங்க. நான் ஓரமா நின்னு தூரத்து காட்சிகளை வேடிக்கை பார்த்தேன். திடீர்னு மூச்சுக்காத்து படறாப்பல யாரோ நெருங்கி பின்னாடி வந்து நிக்கவும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அந்தத் தடியன் மனோகரன் நிக்கிறான்..."

'யாரு... என்னோட காலேஜ்மேட்டா? அடிக்கடி என்னைத் தேடிக்கிட்டு நம்ம வீட்டுக்கு வருவானே? பக்கத்துத் தெருவுல இருக்கிறவன்தானே?"– மாதவன் படபடத்தான்.

"அவனைப் பார்த்ததும் பதறி சட்டுன்னு விலகிட்டேன். ஆசையா உன்கிட்ட பேச வந்தா... விலகிப் போறியேன்னு கேட்டான். 'என்கிட்டே அநாவசியமா என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு?'ன்னு முகத்துல அடிச்சாப்பல கேட்டேன்.



## கடைசியில் இனிப்பு!

விருந்தில் நாம் முதலில் இனிப்பை சாப்பிடுகிறோம். ஆனால், அமெரிக்காவில் இனிப்பைக் கடைசியாக சாப்பிடுவார்கள். இனிப்பு உடனே பசியை அடக்கிவிடும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

– மு. பெரியசாமி.

## தகவல்களம்

இந்திய அரசியலமைப்பில் தேசிய மொழிகளாக 15 மொழிகள் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. இவற்றுள் மூன்று மொழிகள் எந்த மாநிலத்திலும் ஆட்சி மொழியாக இல்லை. சமஸ்கிருதம், சிந்தி, காஷ்மீரி ஆகிய மூன்றுமே அவை. காஷ்மீர் ஆட்சி மொழி உருது.

– எஸ்.சுவாமிநாதன், மன்னார்குடி.

## 'முத்த' ஊர்

திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒரு ஊரின் பெயர் 'முத்தம்பட்டி'.

– உ. இராமநாதன், நாகர்கோவில்.

## 'மினி' யுத்தம்

உலகில் மிகக் குறைந்த நேர யுத்தம் இங்கிலாந்து– ஜான்ஷிபார் நகரம் இடையே 1896–ல் நடந்தது. மொத்தம் 38 நிமிட மோதல்தான்!

– எம்.சம்பத்குமார்.



Optimized using trial version www.balesio.com

'நான் என்ன வேத்து மனுஷனா... மாதவனோட நண்பன்தானே? அதென்ன ஓர வஞ்சனை? அவன்கூட மட்டும் பழகறியே? அவனைப் போலவே என்னையும் நினைச்சு சகஜமா பேசக்கூடாதா?'ன்னான்.

'பேச்சு வரம்பு மீறுது... இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசினாக்கூட மரியாதை கெட்டுப் போயிடும். மாதவன் எனக்கொரு நல்ல நண்பன்! இனிமே என்கிட்டே வந்து கண்டதையும் பேசி இப்படி வாலாட்ட நினைச்சா... நான் பொல்லாதவளா ஆயிடுவேன்'னு சொன்னேன். அவன் முனகிக்கிட்டே படியிறங்கிப் போயிட்டான். எனக்கு மனசு ஆறவே இல்ல மாதவா!"

"என்ன தைரியம்? சட்டையைக் கொத்தா பிடிச்சு அவனுக்கு நாலு அறை விட்டால்தான்... என் மனசு ஆறும்."

"வேண்டாம் மாதவா! விட்டுத்தள்ளு. ரெண்டு பேர் பேசினாலே காதல்னு நினைக்கிறான். நான்தான் அவனுக்கு 'டோஸ்' கொடுத்துட்டேனே. நீ அவன் மேல கை வச்சா வீண் பிரச்சினையாகும். நம்ம ரெண்டு குடும்பத்தைச் சேர்ந்தவங்களைத் தவிர மத்தவங்க நம்மளோட நட்பைப் புரிஞ்சுக்கவேமாட்டாங்க போல மாதவா!"

"மத்தவங்க புரிஞ்சுக்காம போனா நமக்கென்ன? நமக்குள்ளே... நல்ல புரிதல் இருக்கே? அது போதும். சரி காவ்யா! நீ இப்போ வருத்தப்பட்டு பேசும்போது கவனிச்சேன். காதல்னு சொன்னே... காதல் உணர்வு அப்படியென்ன தவறா? நட்பு எப்படி உன்னதமானதோ... அதேமாதிரிதானே காதலும்?"

"ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் காதல் உணர்வு கல்யாணத்துக்கு அப்புறமா வரணும். கணவன்– மனைவிக்குள்ளே காதல்ங்கற புரிதல் வந்தாத்தான் அவங்களுக்குள்ளே காலத்துக்கும் விரிசல் ஏற்படாம இருக்கும்."

"காதல் உணர்வை நான் வெறுக்கலை. ஆனா, திருமணத்துக்கு முந்தி வர்ற காதல் நல்லதுக்கு இல்லை. அதை ரொம்பவே வெறுக்கிறேன். அதனாலதான் அப்படிப் பேசினேன்.

பேச்சு சுவாரசியத்துல நேரம் பறந்ததே தெரியலை. 'லஞ்ச்

டைம்' முடியப் போகுது. வா! சாப்பிடலாம். இன்னிக்கு நான்தான் சமைச்சேன். மாங்காய் சாதமும், வெங்காயச் சட்னியும் உனக்கு ரொம்பப் பிடிக்குமே? காரசாரமா நார்த்தங்காய் ஊறுகாயும் இருக்கு"– பேசியபடியே 'டிபன் பாக்ஸை' திறந்தவளை இமை கொட்டாமல் பார்த்தான் மாதவன்.

தனது டிபன் பாக்ஸை திறந்தவன், "தோசையும், இட்லிப்பொடியும் வச்சிருக்காங்க" என்றான்.

"தோசை சாப்பிட்டா அடிக்கடி தாகமெடுக்கும்னு சொல்வியே. நான் இதைச் சாப்பிட்டுக்கிறேன். நீ உனக்குப் பிடிச்ச மாங்காய் சாதத்தை சாப்பிடு" என்று தனது டிபன் பாக்ஸை அவன் முன் நகர்த்தினாள்.

தன் மனதைத் திறந்து– அதில் அரும்பிய காதலை அவளிடம் வெளிப்படுத்திவிட வேண்டும் என்ற ஆவலை அடக்கிக்கொண்டான். அவள் பேசியது... மனதில் இனம்புரியாத வலியைத் தந்தது.

சுவையும், மணமுமாக இருந்த மாங்காய் சாதம் அவனது தொண்டைக்குள் இறங்க மறுத்தது.

## 4

சிந்தனையில் மூழ்கியிருந்த மாதவன் அருகே மெல்ல வந்து நின்றாள் காவ்யா.

"மாதவா...! மா...த...வா."

"ஆங்... சொ... சொல்லு காவ்யா"– சிந்தனை கலைந்து திரும்பிப் பார்த்தான்.

"அப்படியென்ன பலத்த யோசனை? எனக்கும் எப்படியோதான் இருக்கு. இன்னும் ரெண்டு, மூணு நாள்லே... இயற்கை அழகு கொட்டிக் கிடக்கிற பூலோக சொர்க்கத்தை விட்டுட்டு நாம கிளம்பணுமேன்னு நினைச்சாலே மனசு கனத்துப்



போகுதுல்ல?"

"சரியா சொன்னே காவ்யா! எனக்கும் கஷ்டமாதான் இருக்கு..." பூசி மெழுகினான்.

"அதான்... பார்த்தாலே தெரியுதே? முகத்துல ஏதோவொரு பரிதவிப்பு அலைபாயுதே."

"அப்படியா? அப்பட்டமா தெரியுதா?"– குறுஞ்சிரிப்பை மென்றபடி கேட்டவனை... விழிகள் விரிய ஏறிட்டாள்.

"இத்தனை வருஷமா உன்கூடப் பழகறேன். நீ எதையாவது நினைச்சா... அது எனக்கு பளிச்சுன்னு தெரிஞ்சுடும்"– பெருமிதமாய் பேசியவளை ஊன்றிப் பார்த்தான்.

"என்னைப் புரிஞ்சுக்கிட்ட நல்ல சிநேகிதி நீ! சரி காவ்யா, எல்லாரும் கிளம்பிட்டாங்களா? சீக்கிரமா போனாத்தான் எல்லாத்தையும் பார்க்க முடியும்..."

"எல்லோரும் குளிச்சு உடை மாத்தி தயாரா இருக்காங்க. சாப்பிட்டு உடனே கிளம்ப வேண்டியதுதான். வா மாதவா! உன்னைக் கூப்பிடத்தான் வந்தேன்..."– அவளிடம் குறுநகை பூத்தது.

'காவ்யா... என் ஆருயிர் சிநேகிதியே! உன்னை எந்த அளவுக்கு நேசிக்கிறேன் தெரியுமா?

நான் உன்னோட நண்பனா இருந்தவன்தான். இப்ப என்னையும் அறியாமல் என் இதயம் உனக்கு காதலியா பதவி உயர்வு கொடுத்திருக்கு. என் மனசுல நீ சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து ஆசை தேவதையா என்னை ஆட்டிப் படைக்க ஆரம்பிச்சுட்டே...

நீ முகத்தைச் சுருக்கி வெறுப்பா ஒரு பார்வை பார்த்தா போதும். நான் சுக்கல் சுக்கலா நொறுங்கிடுவேன். என் மனசுல மலர்ந்திருக்கிற காதலை நீயாக புரிஞ்சுகிட்டா எவ்ளோ நல்லா இருக்கும்?

நான் தைரியசாலிதான்! ஆனா... தயக்கம் தடுக்குது. காதலை வெளிப்படுத்தற துணிவு எனக்குள்ளே துளிர்க்கவே

மாட்டேங்குது.

ஆனா, ஒண்ணு மட்டும் நிச்சயம். என் காதல் ஆத்மார்த்தமானது... தெய்வீகமானது. நான் உன்னை உயிருக்கும் மேலா நேசிக்கிறேன். உண்மையான காதல் எப்படியும் வெற்றி அடையும்னு கேள்விப்பட்டு இருக்கேன். அது நிஜம்னா... இந்தக் காதலும் நிறைவேறும். ஆமாம்... அந்த நம்பிக்கை நூறு சதவீதம் எனக்கு இருக்கு.

காவ்யா! நீ என்னைப் புரிஞ்சுப்பே... அதுவரைக்கும் நான் காத்திட்டிருப்பேன். இது சத்தியம்!’– மனதளவில் பேசிக்கொண்டிருந்தான் மாதவன்.

இரு குடும்பங்களும் சிநேகமாய் பழகி வருவதால் காதலுக்கு பச்சைக்கொடி காட்டி, மேளதாளம் கொட்டி– அட்சதை தூவுவார்கள் என்ற நம்பிக்கை அவனுள் இருந்தது.

ஆனால், விதி வேறுவிதமாக சிரித்தது.

## 5

**அ**ந்தக் குட்டி பேருந்து மலைப்பாதையில் மெல்ல முன்னேறியது. ஜன்னலோரமாய் அமர்ந்திருந்த காவ்யாவின் கரங்களை இறுகப் பற்றி இருந்தாள் தங்கை பவ்யா.

ஆனாலும், மலைக் காற்றில் காவ்யாவின் உடல் மெல்ல வெடவெடத்தது. முன் இருக்கையில் அமர்ந்திருந்த மாதவன் புன்னகைத்தபடி திரும்பிப் பார்த்தபடி சொன்னான்.

“கொஞ்சம் சிரமம் பார்க்காம மேலே போனா பலதையு ரசிக்க முடியும். சில்லுன்னு நீர்த் திவலைகளை சிதறடிச்சுட்டு... ‘ஹோ’ன்னு பேரிரைச்சலோடு உச்சியில இருந்து குதிக்கி காட்டருவியையும், மலைப்பாதையில் பதுங்கி மேய வரையாடுகளையும், சரிவுல பூத்திருக்கிற குறிஞ்சிப் பூக்களையு பார்த்துட்டா... அந்த இடத்தைவிட்டு திரும்பறதுக்கே... மன





வராது.”

எராவிக்குளம் இயற்கை எழில் ராணி கோலேச்சும் ரம்மியமா பிரதேசம். மாதவன் வர்ணித்தது முற்றிலும் உண்மையே என்ப அங்கு சென்றபின்தான் தெரிந்தது.

“மலைப்பாதையில எங்களால ஏற முடியாது. நீங்க போயிட் வாங்க”– சோர்ந்து அமர்ந்துவிட்டாள் கற்பகம்.

“கற்பகத்துக்கு துணையா நானும் இங்கேயே இருக்கேன். மன வேற தூறுது. என்னாலேயும் உச்சியில ஏற முடியாதும்மா” அபிராமியும் பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

“மாதவன் சிலாகிச்சுப் பேசினதைக் கேட்டதும்... மேலே ஏறிப்போய் பார்த்துடணுங்கிற ஆசை எனக்கும் வந்துடுச்சு. நீங் ஓய்வா இங்கேயே உட்காருங்க... நான் இந்தப் பசங்க கூடப்போ பார்த்துட்டு வந்துடறேன்.”

மாதவனின் தந்தை சிவகுருநாதனும் இவர்களைத் தொடர்ந் மலைப்பாதையில் ஏறத் தொடங்கினார்.

மாதவனின் பைனாகுலரை வாங்கிக்கொண்டு, அவனிட சுவாரசியமாகப் பேசியபடி பவ்யா முன்னே சென்றாள்.

மூச்சிரைக்க ஏறிவரும் சிவகுருநாதனுக்கு இணையா நிதானமாக நடந்தாள் காவ்யா. இருபுறமும் வேடிக்கை பார்த்தப அவர்கள் நடந்தனர்.

“என்ன காவ்யா... ஒண்ணுமே பேசாம ஸ்தம்பிச்சுட்டே?”

“இதோ... இந்தக் குறிஞ்சிப் பூக்களோட அழகைப் பார்த்தேன் குறிஞ்சுப்பூன்னா கொடைக்கானல்லே மட்டும்தான் பூக்கும்னு நெனைச்சுக்கிட்டிருந்தேன். அதான் யோசிக்கிறேன்ப்பா.”

“இதுவும் அதே மேற்குத்தொடர்ச்சி மலைதானேம்மா அதான் இங்கேயும் குறிஞ்சி பூத்திருக்கு. எனக்கொரு சந்தேகம் பூக்கள்னு சொன்னாலே அழகுதானே? இல்ல... இந்த குறிஞ்சிப்பூ மட்டும்தான் பேரழகா? இப்படி லயிச்சுப் போ பார்க்கிறியே?”

“குறிஞ்சிப்பூ மட்டுமல்ல... நெருஞ்சிப் பூக்கள்கூட அழகுதான்



நான் ஒத்துக்கிறேன். ஆனா, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கிறதாலே... குறிஞ்சிப்பூவுக்கு தனி மகத்துவம்னு நினைக்கிறேன்.”

இவள் பேசுவதை சற்று எட்ட நின்று கேட்ட மாதவன் “ரொம்ப சரி! எதுவுமே சட்டுன்னு கைக்கு கிடைச்சுட்டா அதுக்கு மதிப்பே இல்ல. காத்திருந்து... தவமிருந்து கிடைக்கிறதுக்குத்தான் அலாதி மதிப்பு” என்று முறுவலித்தான்.

பக்கத்தில் நின்ற சிவகுருநாதனின் முகம் சட்டென்று சுருங்கியது.

‘செல் கேமிரா’வில் அழகிய காட்சிகளைப் பதிவு செய்தபடி பவ்யாவுடன் சென்றான் மாதவன்.

பள்ளத்தாக்கில் பார்வையைப் பதித்தவாறு யோசனையில் மூழ்கிவிட்ட சிவகுருநாதனை திகைப்புடன் ஏறிட்டாள் காவ்யா.

“அப்பா! நாம மேலே போகலாமா? அவங்க ரொம்ப தூரம் போயிட்டாங்க... உங்களுக்கு களைப்பா இருக்கா? ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?” கரிசனமாய் கேட்டவளை ஊன்றிப் பார்த்தார் சிவகுருநாதன்.

“இல்லம்மா... உன்கிட்ட விவரம் கேட்கணும். அதை எப்படி கேட்கிறதுன்னுதான் தயங்கிட்டு இருக்கேன்...”

“என்கிட்ட எதுக்குப்பா தயக்கம்? நீங்க பார்த்து வளர்ந்த பொண்ணு நான். என்னத்துக்கு தயங்கறீங்க? உங்களுக்கு என்ன விவரம் தெரியணும்... சொல்லுங்க?” படபடத்தாள் காவ்யா.

“சமீபகாலமா மாதவனோட போக்கே சரியில்லைம்மா. வேளை சரியா சாப்பிடறதில்லை... சரியா தூங்கறதில்லை... வேலை முடிஞ்சு வீட்டுக்கு வந்தா முன்ன மாதிரி எங்ககூட கலகலப்பா பேசறதில்லை. அளவோடுதான் பேசறான். சதா தனிமையை நாடிமொட்டைமாடிக்குப் போயிடறான்.

ரெண்டொரு தடவை நானும் பின்தொடர்ந்து போய் கவனிச்சேன். ஏதேதோ கவிதை வரிகளை முணுமுணுத்துக்கிட்டு... நிலா, நட்சத்திரங்களை வெறிச்சுப் பார்த்துக்கிட்டு... தானாக

ரிச்சுக்கிறான். இதையெல்லாம் பார்க்கும்போது... மாதவ காதல் வலையில விழுந்துட்டான்னுதான் நினைக்கிறேன். அவனோட சிநேகிதி. இப்போ கூடவே வேலை பார்த்துட் பர்றே... இதைப்பத்தி உனக்கு ஏதாச்சும் தெரிஞ்சிருக்கு ல்லையா?"– தயங்கி நிறுத்தினார்.

"அப்படி எதுவும் இருக்கிறதா எனக்கு தெரியலைப்பா. ஆபீஸ்லே ஒரு நிமிஷத்தைக்கூட வீணாக்கமாட்டான். வேலையிலே அவ்ளோ ஈடுபாடு. அவன் சொக்கத்தங்கம்! பெத்தவங்க மன நோகடிக்கும்படி நடந்துக்கவே மாட்டான். அதனால வீண ங்க மனசைப்போட்டு குழப்பிக்காதீங்க."

"அம்மாடி காவ்யா! இப்போதான் மனசுல இருக்கிற பெரி பாரம் இறங்கி இருக்கு. இந்தக் குழப்பத்துல நான் சரியாவே ங்கலை. கீழே இறங்கியதும் என் தங்கச்சி அம்பிகைக்கு போன் பாட்டு பேசிடணும்.

தன் பொண்ணு நிர்மலாவை நம்ம மாதவனுக்கு கட்டி கொடுத்திடணும்னு அவ ரொம்பவே பிரியப்படறா. எனக்கு அதுலே பரிபூரண சம்மதம்தான். ஆனா... மாதவன் மனசுல என்ன இருக்கோ?ன்னு அம்பிகை பயந்துட்டிருந்தா. இப்போ நீதா தெளிவா சொல்லிட்டியே... இனிமே எந்தக் கவலையும் இல்லை. - நிம்மதிப் பெருமூச்சு விட்டார் சிவகுருநாதன்.

ஆனால், எதிர்காலம் இப்படி இருக்கும் என்று கனவிலு நினைக்கவில்லை அவர்!

## 6

"டேய் வசந்த்! எழுந்துக்கோ கண்ணா... மணி ஒன்பதாக போகுதுப்பா. அந்தத் தரகர் இன்னும் பத்து நிமிஷத்து வந்துடுவாராம்... போன் பண்ணிச் சொன்னார்டா"– என்றா கங்கம்மாள்.

மகனை 'திருப்பள்ளி எழுச்சி' செய்வதற்குள் அவளுக்



போதும் போதும் என்றாகிவிடும்.

இரவில் மூக்கு முட்டக் குடித்து– நண்பர்களுடன் ஊரைச் சுற்றிவிட்டு வெகு தாமதமாகத்தான் வீடு வந்து சேருவான் வசந்த். இவன் சதாசிவம்–கங்கம்மாள் தம்பதிக்கு மூத்த மகனாய் பிறந்தவன்.

வசதியாக வாழ்ந்த குடும்பம்தான்! வசந்துக்கு அடுத்து ஆனந்த், உமா பிறக்கும் வரை குடும்பச் சக்கரம் சீராய் சுழன்றுகொண்டுதான் இருந்தது.

திடீரென அதில் கொஞ்சம் சரிவு ஏற்பட்டால் அதற்கு ஏற்றாற்போல் வாழ பழகிக்கொள்ள வேண்டும். ஆனால், கங்கம்மாளோ வறட்டு கவுரவம் பிடித்தவள். ஆடம்பர செலவுகளை இம்மியளவும் குறைப்பதற்கு அவள் தயாராக இல்லை.

விளைவு...! பரம்பரை நிலபுலன்களை விற்று சில காலம் குடும்ப வண்டியை ஓட்ட நேர்ந்தது.

சதாசிவமும் மனைவிக்கு சற்றும் சளைத்தவர் அல்ல. அவருக்கு பேச்சு சாமர்த்தியம் அதிகம். அதோடு, செல்வாக்கான பெரும்புள்ளிகளுடன் சகவாசமும் உண்டு. அவரைப் பார்த்தவுடன் யாருக்கும் சட்டென்று ஒரு பிடிப்பு வந்துவிடும்.

அதை மிகச் சரியாக பயன்படுத்திக்கொண்டார். பெரும்புள்ளிகளைப் பிடித்தார். மனைவி பெயரில் மாங்காட்டில் துணிக்கடை தொடங்கினார்.

எப்படியோ கஷ்ட நஷ்டத்தின் சாயல் தங்கள் மீது படியாமல் நாட்களை ஓட்டினர்.

அவர்கள் குணத்துக்கு தப்பாமல் பிறந்திருந்தான் வசந்த். கல்லூரிப் படிப்பை முடித்தான். பணக்கார நண்பர்களுடன் சகவாசம் வைத்தான். அப்பா சதாசிவத்தின் செல்வாக்கைப் பயன்படுத்தி வேலையில் அமர்ந்தான்.

அலுவலகம் சார்பாக ஊர் ஊருக்கு அலைய வேண்டும். உடம்பு வளையாமல் எக்கச்சக்க வருமானம் வரவேண்டும் என்று எதிர்பார்த்த அவனுக்கு அந்த வேலை மிகவும் பிடித்திருந்தது.

அதற்கு முதல் காரணம்... கம்பெனி சார்பாக லட்சக்கணக்கில் பணத்தை எடுத்துக்கொண்டுதான் அவன் வெளியூர்களுக்குப் பயணப்பட வேண்டியது இருந்தது.

ஆரம்பத்தில் நாணயமாக நடந்து நம்பிக்கைக்குப் பாத்திரம் ஆனவனுக்கு மெல்ல குளிர்விட்டுப் போய்விட்டது.

ஆடம்பர பிரியன்! லட்சக்கணக்கில் பணம் புரளும்போது அவன் மனமும் தடம் புரண்டுவிட்டது.

போதாதற்கு அம்மா கங்கம்மாள் வேறு அவ்வப்போது அவனுக்கு தூபம் போட்டாள்.

துணிக்கடை வியாபாரம் படுத்துவிட்டதால் கம்பெனி கணக்கில் புகுந்து விளையாடிவிட்டான் வசந்த். மேலிடத்திற்கு சந்தேகப்பொறி தட்டியது. அவனை அழைத்து கணக்கு வழக்கை விசாரித்து– குடைந்து தள்ளிவிட்டார்கள்.

பெரும்புள்ளியின் சிபாரிசு என்பதால் அவனுக்கு 'மெமோ' கொடுத்து எச்சரித்து– வேலையில் நீடிக்க வைத்தது மேலிடம்.

இப்போது அவன் மனம் கட்டுக்குள் அடங்க மறுத்து சண்டித்தனம் செய்தது. உள்ளங்கையில் சதா ஒரு நமைச்சல்.

'நிரந்தர வருமானத்திற்கு என்ன வழி?' என்று மூளையைக் கசக்கிப் பிழிந்தான்.

எதிர்காலம் அவன் கண்முன்னே சூனியமாய் இருண்டு- மிரட்டியது.

'வீட்டுக்கு மூத்த மகன் நான். குடும்பப் பொறுப்பை நான்தான் சுமந்தாக வேண்டும். தங்கை உமாவை நல்ல இடத்தில் கட்டிக்கொடுக்க வேண்டும். தம்பி ஆனந்தை மேற்படிப்பு படிக்க வைத்து, வேலையில் அமர்த்த வேண்டும்.அந்தஸ்து குறையாமல் குடும்பத்தை நடத்திச் செல்வதைப் பார்த்து அம்மா சந்தோஷப்பட வேண்டும்...' என்று சதா கவலைப்பட்டாலும் நண்பர்களுடன் கூடி கும்மாளமிடுவதை நிறுத்தவில்லை.

மகாபலிபுரத்திற்குச் சென்று நண்பர்களுடன் உற்சாகமாகப் பேசி, குடித்து பொழுதைக் கழித்துவிட்டு பைக்கில் வீடு



திரும்பும்போது... கண்மண் தெரியாமல் படுவேகத்துடன் ஓட்டி... எதிரே வந்த காரில் மோதி விபத்துக்கு ஆளானான்.

பலத்த அடி. முன் நெற்றி, கை– கால்களில் ஏகப்பட்ட காயங்கள்.

போதையில் இருந்து மீண்டு கண் விழித்தவன்... தான் ஆஸ்பத்திரியில் இருப்பதைக் கண்டு அதிர்ந்தான். 'நல்ல வேளையாக பலமாக அடிபடவில்லை' என்று நிம்மதி அடைந்தவனின் தலையில் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார் தலைமை மருத்துவர்.

அவர் சொன்ன செய்தியைக் கேட்டு உறை(டை)ந்துபோனான் வசந்த்.

விஷயத்தைக் கேள்விப்பட்டு முந்தானையால் வாயை மூடி கேவிக் கேவி அழுதாள் கங்கம்மாள். மகன் ஆஸ்பத்திரியில் இருந்து வீடு வந்து சேரும்வரை துக்கத்தில் துவண்டிருந்தவள், அதன்பிறகு எதுவும் நடக்காதது போல் சாதாரணமாக நடமாடினாள்.

மகனுக்கு தீவிரமாய் பெண் பார்க்கும் படலத்தைத் தொடங்கினாள்.

"அ... அம்மா! எ... எனக்குப் போய் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு ஆசைப்படறியே...? அது பிரச்சினை... விஷயம் தெரிஞ்சா பொண்ணு வீட்டுக்காரங்க நம்மை சும்மா விடுவாங்களா?"– தயங்கியபடி கேட்டான் வசந்த்.

"அடப் போடா பைத்தியக்காரா... உனக்கென்னடா குறைச்சல்? நீ சிங்கம்டா. உன் முன்னாடி நின்னு யாரும் கேள்வி கேட்க முடியாது. இதுக்கெல்லாம் பயந்துகிட்டிருந்தா நாம நிம்மதியா இருக்க முடியுமா? உமாவைக் கரையேத்தணும். ஆனந்துக்கு ஒரு வழி பண்ணணும்.

காலத்துக்கும் நாம வசதியா இருக்கணும்னா... நான் சொல்றபடி கேளு. நல்ல பணங்காய்ச்சி மரமா பார்த்து கட்டிவைக்கப் போறேன். அம்மா நான் இருக்கேன்ல? எல்லாத்தையும் பாத்துக்கிறேன். நீ எதைப் பத்தியும் கவலைப்படாம இருடா" என்று அவனது தோளில் தட்டிக்கொடுத்து– மகனின் வாயை

அடைத்துவிட்டாள் கங்கம்மாள்.

ஒரு அப்பாவிப் பெண்ணின் எதிர்காலத்தை குழிதோண்டி புதைக்க ஆயத்தமானாள்.

# 7

**மா**ங்காடு காமாட்சி அம்மன் கோவிலில் பெண்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது.

மகள்கள் இருவரும் கிளம்பிப் போனதும்... காலையி சாப்பிடாமலே கோவிலுக்கு வந்திருந்த அபிராமி, பிரகாரத் ஒன்பது முறை வலம் வந்தாள்.

"அம்மா தாயே! காவ்யாவோட குணத்துக்கும், அழகுக்கு தகுந்த மாப்பிள்ளை வாய்க்கணும்"– மனமுருக வேண்டியப நடந்தவளுக்கு மெல்ல தலைச் சுற்றுவது போலிருந்தது.

கண்கள் இருட்டிக்கொண்டு வந்தன. தொய்ந்து இரண்டா மடங்கி– சரிந்து விழுந்தாள்.

"ஐயோ... யாரோ ஒரு அம்மா மயங்கி விழுந்துட்டாங்க..."

"அட... இவங்களா! வாரம் தவறாம வெள்ளிக்கிழமை கோவிலுக்கு வர்றவங்களாச்சே?"

"சீக்கிரம்... தண்ணி இருந்தா குடுங்க..."

"உடம்புக்கு முடியாதவங்க துணைக்கு யாரையாச்சு கூட்டிட்டு வராம ஏன் இப்படி தனியா வர்றாங்க...?"

அரை வட்டமாய் கூட்டம் கூடி ஆள் ஆளுக்குப் பேசினார்க தவிர யாரும் அபிராமியை நெருங்கவில்லை,

"இப்படி கூடி நின்னு வேடிக்கை பார்த்துட்டிருக்கீங்க? கொ சம் விலகி நில்லுங்க... காத்து வரட்டும். அந்தத் தண்ணிை இப்படி கொடுங்க..."– உரிமையாய் அதட்டினான் வசந்த்.

அதை வாங்கி முகத்தில் தெளித்ததும் மெல்ல விழிகளை மலர்த்தினாள் அபிராமி.



கூட்டம் கூடி தன்னை வெறிப்பதைக் கண்டதும் சங்கோஜத்துடன் எழுந்துகொள்ள முயற்சித்து முடியாமல் தடுமாறினாள்.

"மெல்ல... பார்த்து மெதுவா எந்திரிங்கம்மா..."– கைத்தாங்கலாக அவளைப் பிடித்து தூக்கிய இளைஞனை வியப்புடன் ஏறிட்டாள்.

"ரொம்ப நன்றி தம்பி"– மெல்ல முணுமுணுத்தாள்.

"அட... என்னம்மா நீங்க? இந்த சின்ன விஷயத்துக்குப் போய் நன்றியெல்லாம் சொல்லிக்கிட்டு? மனுஷுக்கு மனுஷன் இந்த உதவிகூட செய்யலைன்னா... நாம பிறந்ததுக்கு அர்த்தமே இல்லாமே போயிடுமே? ஆமா... நீங்க எங்கே இருந்து வர்றீங்க? காலையிலே சாப்பீட்டீங்களா... இல்லையா?"

"இங்க... பக்கத்துல குன்றத்தூர்லே இருந்துதான். தரிசனம் பண்ணுறதுக்கு முன் சாப்பிடற வழக்கம் இல்ல..."

"நினைச்சேன். பக்தி இருக்க வேண்டியதுதான். ஆனா, நம்ம உடம்பையும் கொஞ்சம் கவனிச்சுக்கணும்.

இன்னிக்கு எனக்குப் பிறந்த நாள். மாங்காடு காமாட்சி அம்மனை தரிசனம் பண்ணிட்டு, அப்படியே குன்றத்தூர் முருகனையும் வழிபடுறது வழக்கம். நான் குன்றத்தூருக்குத்தான் போறேன். உங்களைப் பார்த்தா... எங்க அம்மாவைப் பார்க்கிற மாதிரி இருக்கு. எனக்கு அம்மான்னா உயிர். இன்னிக்கு எழுந்ததுமே அவங்ககிட்ட ஆசீர்வாதம் வாங்கிட்டேன். உங்களை நமஸ்காரம் பண்ணுறேன். பெரியவங்க நீங்க... மனசார என்னை வாழ்த்துங்க..." சட்டென்று அவள் எதிர்பாரா தருணத்தில் பாதங்களைத் தொட்டு வணங்கியதும்... அபிராமி ஆச்சரியத்தில் திக்குமுக்காடித்தான் போனாள்.

"ந... நல்லா இருங்க தம்பி... உங்க நல்ல மனசுக்கு நீங்க அமோகமா இருப்பீங்க. பெத்த தாயையும், பெரியவங்களையும் மதிக்கிறவங்களுக்கு என்னிக்கும் குறை வராது..." அவனது உச்சந்தலையில் கைவைத்து மனதார ஆசீர்வதித்தாள்.

அந்தக் கணமே அபிராமி மனதில் உயர்ந்த ஸ்தானத்தில்

அமர்ந்துவிட்டான் வசந்த்.

"என் பிறந்த நாளில் உங்க ஆசீர்வாதம் கிடைக்க நான் குடுத்து வச்சிருக்கணும். உங்களை உங்க வீட்டுலே 'டிராப்' பண்ணிட் கோவிலுக்குப் போறேன். வாங்கம்மா..." உரிமையாய் அவளு கையைப் பற்றிக்கொண்டான்.

உடம்பு தெம்பில்லாமல் தள்ளாடியது. கூடவே, அந் இளைஞன் மீதான நல்ல அபிப்பிராயத்தால் அதற்கு மே மறுக்க மனமில்லாமல்... மவுனமாக் அவனுடன் கோவிலைவிட் வெளியேறினாள்.

"ஏறிக்கோங்கம்மா... ஆபீசே எனக்கு கார் கொடுத்திருக் உங்களை விட்டுட்டு, முருகனை தரிசனம் பண்ணிட்டு அப்படிே போயிடுவேன்."

'இந்தக் காலத்துல இவ்ளோ பவ்வியமா, பக்தியா இருக்கி இளைஞனைப் பார்க்கிறது ரொம்ப அபூர்வம்!' மெல்ல மனதுக்கு முணுமுணுத்தாள் அபிராமி.

பத்தே நிமிடங்களில் வீட்டு வாசலில் காரை நிறுத்தினா வசந்த்.

"அட! குன்றத்தூர் கோவிலுக்கு பக்கத்துலதான் உங்க வீ இருக்கு போல...?"– எதிரே தெரிந்த கோபுரத்தை அண்ணாந் பார்த்தபடி கேட்டான்.

"ஆமா... கூப்பிடு தொலைவிலதான் கோவில். உள்ளே வா தம்பி! ஒரு வாய் காப்பி குடிச்சிட்டுட்டு கிளம்பலாமே?"

"இல்லம்மா. ஆபீசுக்கு நேரமாகிடும். கொஞ்சம் தாமதமானாலு வேலை ஸ்தம்பிச்சுப் போயிடும். இனிமே முருகன் கோவிலுக் வரும்போதெல்லாம் உங்க வீட்டுக்கும் வரேன். வந்து ஆசீர்வா வாங்காம போகமாட்டேன்.

உடம்பைப் பார்த்துக்கோங்க. கூடுமானவரை தனி போகாதீங்க. வரேன்ம்மா" கை எடுத்துக் கும்பிட்டுவிட்டு கா கிளம்பினான் வசந்த்.

"சரிங்க தம்பி! இந்தப் பக்கம் வர்றப்ப அவசியம் வரணும்



வாசலில் நின்றபடி கார் சென்ற திசையையே வெகுநேரம் வெறித்துப் பார்த்தாள்.

தாழிடப்பட்டிருந்த கதவைத் திறந்து– யோசனையுடனே உள்ளே நுழைந்தாள்.

குன்றத்தூர் மலையடிவாரத்தில் காரை நிறுத்திய வசந்த் தனது செல்போனை எடுத்து உற்சாகமாகப் பேசத் தொடங்கினான்.

"ஹலோ! நான்தான் பேசறேன்ம்மா... காமாட்சி அம்மன் கோவிலுக்குப் போயிருந்தேன். நான் நெனைச்ச காரியம் 'சக்ஸஸ்'தான். அவங்களுக்கு என்னை ரொம்பவே பிடிச்சுப் போச்சு தெரியுமா?"

"நிஜமாவா? நீ பார்த்தது அந்தப் பொண்ணோட அம்மாதானா? ஒருவேளை வேற யாரோவா இருந்தா?"– கங்கம்மாவின் குரலில் கவலை தொனித்தது.

"ஊகூம்... நிச்சயமா அவங்களேதான். காவ்யாவோட படத்தை தரகர் கொடுத்தாரே? அப்போதான் தெளிவா சொன்னாரே? பொண்ணோட அம்மா பேரு அபிராமி. அச்சு அசலா இதே ஜாடையிலதான் இருப்பாங்க. அந்த அபிராமி அம்மா மனசு வச்சா போதும். இந்தக் கல்யாணம் நடந்த மாதிரிதான். அவங்க வாரம் தவறாம காமாட்சி அம்மன் கோவிலுக்கு வந்து அர்ச்சனை செய்துட்டுப் போவாங்க. மாப்பிள்ளை சொக்கத்தங்கமா இருக்கணும்னு எதிர்பார்க்கிறாங்க.

ஒரேயொரு விஷயத்தை மட்டும் நல்லா தெரிஞ்சுக்கோங்க. பொண்ணுக்கும் சரி, அபிராமி அம்மாளுக்கும் சரி... வரதட்சணை எதிர்பார்த்தா பிடிக்கவே பிடிக்காது. பாடுபட்டு சம்பாதிச்சு குருவி சேர்க்கிற மாதிரி பொண்ணுக்கு நகை சேர்த்து வச்சிருக்காங்க. கவுரவத்தை விட்டுக்கொடுக்காம நிறைவா செய்வாங்கன்னு சொன்னாரே?

அவங்களை அந்தக் கோவில்லே அத்தனை கூட்டத்திலேயும் சுலபமா கண்டுபிடிச்சுட்டேன். காவ்யா படத்தைப் பார்த்ததுமே அவ உருவம் மனசுல பதிஞ்சு போச்சே? அவளுக்கு நெற்றியோரம் நரை இருந்தா எப்படி இருக்கும்? அப்படித்தான் அவங்க

இருந்தாங்க. அதனால சுலபமா அடையாளம் தெரிஞ்சுடு
அவங்ககிட்ட எப்படி பேசறதுன்னு தவிச்சுட்டிருந்தேன்.

பழம் நழுவி பால்லே விழுந்தாப்பல... அந்தம்மா தலை சுத்தி மயங்கி விழுந்தாங்க. அதான் சாக்குன்னு காரியத்தி இறங்கிட்டேன்.

என் மனசுல உள்ளூர ஒரு பட்சி சொல்லுது. அ காவ்யாதான் எனக்கு மனைவி! இந்தக் கல்யாணம் இப்ப நடந்தது மாதிரிதான். நீ கவலைப்படாம இரும்மா. எல்ல நாம நினைச்சபடிதான் நடக்கும்... சரியா?"

"எப்படியாவது இந்த வரனை வளைச்சுப் போட்டுடனு வசந்த்! இதைவிட நமக்கு வேற நல்ல வரன் கிடைக்கி கஷ்டம்..."– மறுமுனையில் அம்மா பீடிகை போட்டதும், வச புருவங்கள் மேலேறின.

## 8

"எதுக்கு அப்படி சொல்றே?"

"நீதான் அப்பப்போ சந்தேகமா கேட்கறியே? விஷ வெளிப்பட்டா பிரச்சினை வந்துடமோன்னு தயங்கறியே? இ வரன் அமைஞ்சா நமக்கு எந்தப் பிரச்சினையும் வராது..."

"எதை வச்சு அப்படி சொல்றே?" குரலில் எரிச்சலுட கேட்டான் வசந்த்.

"பொண்ணுக்கு அப்பா இல்ல... அண்ணன்– தம்பிங்கள் ஆம்பளைத் துணை இல்லாத வீடு. யாரும் வந்து தட்டிக்கே முடியாது. வயசான விதவைத் தாயால நம்மை என்ன பண் முடியும்? காவ்யாவுக்கு ஒரு தங்கச்சி இருக்காளே... அ நமக்கொரு 'பிளஸ் பாயிண்ட்' தெரியுமா?"

"சுத்தி வளைக்காம விஷயத்துக்கு வாம்மா. எனக்கு ஒண்ணு புரியலை...?"



"டேய்... என்னடா இது? அந்தக் காலத்து மனுஷி நான். நாலும் நமக்கு சாதகமா இருக்கான்னு தோண்டித் துருவி பார்த்துட்டிருக்கேன். நீ என்னடான்னா இப்படி இருக்கியே?

காவ்யா அடக்க ஒடுக்கமா வளர்க்கப்பட்டிருக்கா. குடும்ப கவுரவத்தை விட்டுக்கொடுக்காம இதுவரைக்கும் அவளோட அம்மா கவனமா காலத்தை ஓட்டி இருக்கா. அதனால, இவ எடுத்தேன் கவிழ்த்தேன்னு முடிவு எடுக்கமாட்டாள்னு நம்பறேன். நம்ம வீட்டைவிட்டு வெளிநடப்பு செய்து... ஒரு வாழாவெட்டியா அவ அம்மா வீட்டுக்குப் போய் அண்டியிருக்க அச்சப்படுவா...மீறி போனாலும்... அவ தங்கச்சியோட எதிர்காலம் கேள்விக்குறி ஆகிடுமே?


ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.


காவ்யா பணங்காய்ச்சி மரம், பொன்முட்டை இடுற வாத்து. அவளை வச்சுத்தான் நாம பல காரியங்களை சாதிக்கணும். ஆளும் பறிச்செடுத்த மஞ்சள் கிழங்காட்டம் அழகா இருக்காளே! நீங்க ரெண்டு பேரும் ஜோடியா நடந்து போனா... தெருவுலே அத்தனை பேரும் பொறாமையில பொசுங்கிப் போயிடுவாங்கடா...

வர்ற புதன்கிழமை நாள் நல்லா இருக்கு. தரகர்கிட்டே சொல்லி அனுப்பி இருக்கேன். சாயந்தரமா பொண்ணை பாத்துட்டு அப்படியே ஒப்புக்கு தாம்பூலத்தை மாத்திட்டு வந்துடலாம். சரியா...?"

"சரிம்மா. உன் இஷ்டப்படி செய். உனது வார்த்தையை நான் என்னிக்காவது மீறி இருக்கேனா? வச்சிடட்டுமா?" என்று

கேட்டுவிட்டு 'செல்'லை அணைத்தான் வசந்த்.

'பறிச்செடுத்த மஞ்சள் கிழங்கு மாதிரி...'– அம்மாவின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் எதிரொலித்தன.

'காவ்யா அழகுதான். அம்மா ஓரளவு சரியாக சொல்லி இருக்கிறாள்.

காவ்யாவை அழகு வெள்ளம் என்று சொல்வதைவிட அழகு சமுத்திரம் என்று சொல்லலாம். என் வருங்கால வாழ்வு வளமாக– குடும்பத்தை செழிப்பாக நடத்த கண்டிப்பாக அவளை மனைவியாக்கிக்கொள்ள வேண்டும்.

ஆனால்... தாலிகட்டிய ஒருசில நாட்களில் எல்லாம் வெட்டவெளிச்சம் ஆகத்தான் போகிறது. அதன்பின் நான் எப்படி அவளது முகத்தில் விழிப்பேன்?

திருமண வாழ்க்கை என்றாலே... அது எங்கள் இருவரது வருங்காலத்தை அடிப்படையாகக் கொண்டது. உறவுகள் எல்லாம் மூன்றாம்பட்சம்தானே?

கணவன் என்ற பதவிக்கு நான் தகுதியுடையவன் இல்லைதான்... அதனால் காவ்யா என்னை மதிக்காமல் போய்விட்டால்...?

என்னைவிட அதிகம் படித்தவள். கைநிறைய சம்பாதிக்கவும் செய்கிறாள். என்னை அடிமட்டமாக நினைத்துவிட்டால்...? உண்மைகளை தன் வீட்டில் கூறிவிட்டால்...?

என் அம்மாவுக்கு பிரச்சினை இல்லை. 'நினைத்ததை சாதித்துவிட்டோம்' என்று நிம்மதியாக இருந்துவிடுவாள். எனக்குத்தான் வேறுவிதமான பிரச்சினை காத்திருக்கிறது.

கத்தி மீது நடப்பது போல் நாட்களைக் கடத்தியாக வேண்டும். தாலி கட்டிய கணவனிடம் நெருங்கிப் பழகும் வரை... எந்தப் புதுப்பெண்ணுக்கும் ஒருவித பயம் இருக்கும். அன்னியோன்னியம் ஏற்பட்ட பின்பு அது சூரியனைக் கண்ட பனி போல விலகிவிடும். பயத்திற்கு பதிலாக அங்கு காதல் கனியத் தொடங்கிவிடும்.

காவ்யாவின் மனதில் இம்மியளவும் அந்தப் பயம் விலகாதபடி நான் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் எனக்கு



நல்லது.

அம்மா சொல்வதுபோல் எனக்கென்ன குறைச்சல்? வாட்டசாட்டமாக ஒரு கதாநாயகனைப் போலல்லவா நான் இருக்கிறேன்...

காவ்யா திறமைசாலிதான்... பேரழகிதான். ஆனால், அவள் ஒரு பெண்! சகலத்தையும் என் காலடியில் சமர்ப்பித்துவிட்டு... எனக்கு அடங்கிக் கிடந்துதான் ஆகவேண்டும்.

அவளுக்கென்று தனிப்பட்ட விருப்பு வெறுப்பு என்று எதுவும் இருக்கவே கூடாது. அவளை என் வழிக்கு கொண்டுவந்து... சதா என் காலைச் சுற்றியே கிடக்கும்படி செய்துவிடுகிறேன்...'

வசந்த் நரித்தனமாக யோசித்தபடி காரைக் கிளம்பினான். அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருந்தது. அட்சரம் பிசகாமல் அனைத்து எதிர்பார்ப்புகளும் அவனுக்கு சாதகமாக நிறைவேறின.

## 9

காவ்யாவுக்கு உள்ளூர எரிச்சல் மண்டியது.

அலுவலகம் மாதவனை சிங்கப்பூருக்கு அனுப்பி இருந்தது.

நான்கு மாதங்களுக்கு ஒருமுறை அவன் வெளிநாட்டுக்குச் சென்று வருவது சகஜமாகி இருந்தாலும்... இந்த முறை அவன் வெளிநாடு சென்றது நெருடலாகவே தெரிந்தது.

'சிங்கப்பூர் சென்று ஒரு வாரமாகிவிட்டதே? ஏன் எனக்கு போனே செய்யலை? அவனுடைய எண்ணுக்கு பல முறை முயற்சித்தும் இணைப்பு கிடைக்கவில்லையே?'

உடனே அவனுக்கு மின்னஞ்சல் அனுப்பும் முயற்சியில் இறங்கினாள் காவ்யா.

**'மாதவா!**

**அம்மா எனக்கு கல்யாண ஏற்பாடு செய்துட்டிருக்காங்க. மாப்பிள்ளையை அம்மாவுக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு.**

அம்மன் கோவில்லே அம்மா மயங்கி விழுந்தப்போ... அவர் கைத்தாங்கலா அழைச்சுட்டு வந்தாராம். கார்லே கொண்டு வந்து வீட்டு வாசல்லே இறக்கிவிட்டுப் போனாராம். 'இப்பேர்பட்ட தங்கமான மாப்பிள்ளை கிடைக்க கொடுத்து வச்சிருக்கணுமே?'ன்னு அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம்.

பெண் பார்க்கத்தான் வந்தாங்க. பரஸ்பரம் ரெண்டு வீட்டுக்காரங்களுக்கும் ஒத்துப் போனதால... தாம்பூலமே மாத்திக்கிட்டாங்க.

அடுத்த மாசமே கல்யாணம். இன்னும் ரெண்டு வாரங்கள்தான் இருக்கு. என்னோட நண்பன் நீ! என் கல்யாணத்துக்குள்ள வரப்பாரு?

நம்ம நட்பு காலத்துக்கும் நீடிக்கணும். அதுதான் என் ஆசை. அவர் பேரு வசந்த். நல்லா வாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவங்களாம்.

அவங்க வீட்டு மனுஷங்க எல்லாருமே ரொம்ப கலகலப்பாக பேசறாங்க. எல்லாருமே நல்லவங்களா தெரியறாங்க. இன்னிக்கு காலையில வசந்த் எங்க வீட்டுக்கு வந்துட்டாரு. அம்மாகிட்ட ஏற்கெனவே பரிச்சயமானதால... உரிமையா பேசறாரு. 'நான் இந்த வீட்டு மாப்பிள்ளை கிடையாதும்மா. உங்களுக்கு மூத்த மகன்'னு சொன்னாருன்னா பார்த்துக்கோயேன்! வரதட்சணை எதுவும் வேண்டாம்னும் சொல்லிட்டாங்க.

நம்ம குன்றத்தூர் முருகன் கோவில்லே வச்சுதான் கல்யாணம். மாங்காடு சிவன் கோவிலுக்குப் பக்கத்துல அவங்க வீடு! பக்கத்துல வரவேற்பு வச்சிருக்காங்க. நான் தொடர்ந்து வேலை பார்க்கலாமாம்.

பிரிவுங்கிறதே நம்ம நட்புக்கு கிடையாது மாதவா. நான் அறிமுகப்படுத்தி வைக்கிறேன். உன்னை நிச்சயமா அவருக்கு ரொம்பவும் பிடிச்சுப் போயிடும். நீங்க ரெண்டு பேரும் ரொம்ப 'குளோஸ்' ஆயிடுவீங்க. நான் உன்னோட சிநேகிதிதானே? ஒண்ணுகேட்டா நீ கோவிச்சுக்கமாட்டியே...? வீட்ல கல்யாணப் பேச்செடுத்தா... நீ ஏன் பிடிகொடுக்கமாட்டேங்கிற?



அப்பா ரொம்ப வருத்தப்படறாரு. உங்க அத்தை அம்பிகை அம்மாளோட பொண்ணு நிம்மியை உனக்கு கட்டி வைச்சுடணும்னு அவரு பிரியப்படறாரு. அம்மாவுக்கு அடிக்கடி உடம்புக்கு முடியாம போகுது. பெரியவங்க உன்னைக் கல்யாண கோலத்துல பார்க்க ஆசைப்படறாங்க மாதவா!

ஊர் வந்ததும்... நிம்மியைக் கட்டிக்க சம்மதம் தெரிவிச்சுடு. நீ அப்படி செய்தா பெத்தவங்க மனசுல பாலை வார்த்தாப்பல அப்படியே குளிர்ந்து போவாங்க. நேரம் வரும்போது இதைப் பத்தி உன்கிட்ட சொல்லணும்னு இருந்தேன்.

நாம சுற்றுலா போயிட்டு வந்ததும் திடுதிடுப்புன்னு சிங்கப்பூருக்குப் பறந்துட்டே. எப்பவும் வெளிநாட்டுக்குப் போனா... நீ திரும்பி வர்றதுக்கு ரெண்டு, மூணு மாசமாவது ஆகும். இந்தத் தடவையும் அதேமாதிரிதானா? என் கல்யாணத்துக்கு கண்டிப்பா நீ வந்துடுவேங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு.

நீ ஆசைப்பட்டபடியே நிறைய சாதிக்கப் போறே... பெரிய சிகரத்தைத் தொடப்போறே. உன்னோட முன்னேற்றத்துக்காக எப்பவும் பகவானைப் பிரார்த்தனை செய்துகிட்டே இருப்பேன்."

உன் அன்பு சிநேகிதி,
காவ்யா!

அலுவலகத்தில் உணவு இடைவேளையின்போது மின்னஞ்சல் அனுப்பிவிட்டு நிமிர்ந்தபோது... செல்போன் சிணுங்கியது.

எடுத்தாள். "ஹலோ."

"நான்தான்ம்மா கற்பகம் பேசறேன்..."

"சொ... சொல்லுங்கம்மா... என்ன விஷயம்? உங்க உடம்புக்கு ஒண்ணுமில்லையே?"– பதற்றமாய் கேட்டாள்.

"நான் நல்லாத்தான் இருக்கேன் காவ்யா. பதறாதே. இன்னிக்காச்சும் மாதவன் போன் பண்ணினானா? சிங்கப்பூருக்குப் போய்ச் சேர்ந்ததும் ஒரே ஒருவாட்டி பேசினான். அவ்வளவுதான்! அதுக்கப்புறம் போனே பண்ணலை... மனசுக்கு சங்கடமா

இருக்கும்மா.”

“கவலைப்படாதீங்கம்மா. வேலை மும்முரத்துல இருந்திருப்பான். வெளிநாட்டுக்குப் போனாலே... அவன் இப்படித்தான் நடந்துக்கிறான். எனக்கு அவன் போனதிலே இருந்தே போன் பண்ணலை.

‘புராஜெக்டை’ முடிக்கிற வரைக்கும் அவனுக்கு தூக்கமே வராதே? அதே நினைப்புலே இருக்கான்போல... நான் கூட இப்போதான் அவனுக்கு ‘இ-மெயில்’ அனுப்பி இருக்கேன். அதைப் படிச்சதும் உடனே போன் பண்ணுவான். பார்த்துட்டே இருங்க...”

“தவமாய் தவமிருந்து ஒத்த பிள்ளையைப் பெத்து வச்சிருக்கேன். எனக்கு அப்பப்போ உடம்புக்கு ஆகாம போயிடுது. ‘வெளியூருக்கு எங்கேயும் போகாதேப்பா’ன்னு தலைப்பாடா அடிச்சுக்கிறேன். கேட்கிறானா? என்னோட தவிப்பு அவனுக்குப் புரியமாட்டேங்குதே காவ்யா. சரிம்மா... நான் வச்சிடட்டுமா?”– போனை வைத்த கற்பகம் கட்டிலில் சரிந்து படுத்து தலையணையில் முகம் புதைத்து முதுகு குலுங்க விசும்பினாள்.

‘டேய் மாதவா! சிங்கப்பூருக்கு ஏன்டா போய் தொலைஞ்சே? நம்ம காவ்யாவுக்கு கல்யாண ஏற்பாடு நடக்குதடா... அபிராமி இப்படி நடந்துக்குவாள்னு நான் எதிர்பார்க்கவே இல்லையேடா...

தரகர் மூலமா வரன் பார்க்கச் சொல்லியிருக்கா. எதையும் என்கிட்ட சொல்லவே இல்லையேடா. டேய் கண்ணா! உன் மனசுல நீ என்ன நினைச்சுகிட்டு இருக்கியோ தெரியலை... ஆனா, காவ்யா இன்னொருத்தர் வீட்டுக்கு மருமகளா போகப் போறாளேடா? இதை என்னால ஜீரணிக்கவே முடியலைடா...’ கற்பகம் மனம் அடித்துக்கொண்டது.

‘நான் ஆசைப்பட்டா போதுமா? வாழப்போறவன் நீ... உன்னோட மனசுல ஒரு பிடித்தம் வரணுமேன்னு எனக்குத் தயக்கம்... அதான் என்னை ஊமையாக்கிடுச்சு. இல்லேன்னா அபிராமிகிட்டே முன்பே பேசி ஒரு முடிவெடுத்திருப்பேனே?



காவ்யா மருமகளா வர்றதுல உங்க அப்பாவுக்கு விருப்பம் இல்லைடா. தன்னோட தங்கை பொண்ணை இந்த வீட்டுக்கு கொண்டு வரணும்னு பிரியப்படறாரு. நிம்மி படிச்சவளா இருக்கலாம். உன்னோட ரசனைக்கும், குணத்துக்கும் சரிப்பட்டு வரமாட்டா.

விலை மதிக்க முடியாத கோஹினூர் வைரம் நம்ம கையைவிட்டுப் போகுதே? என்னால தாங்க முடியலையே...? மாதவா, நீ திறமைசாலியா இருக்கலாம். ஆனா, என்னைப் பொறுத்தவரை ஒரு முட்டாள்டா...

காவ்யா ஒரு பொக்கிஷம். அவளோட அருமையை என்னைத் தவிர இந்த வீட்லே யாருமே உணராம போயிட்டீங்களே?’ – மனதிற்குள் மருகிய கற்பகத்திற்கு துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைத்தது.

## 10

குன்றத்தூர் முருகன் கோவில் பின்புறம்... மலையடிவாரத்தைச் சுற்றிக்கொண்டு சென்றால் பச்சைப் பசேலென்ற வயல்வெளிகளுக்கு மத்தியில் ஒரு விசாலமான தெப்பக்குளம்– ஏராளமான அல்லி மலர்களோடு காண்போரைக் கொக்கி போட்டு ஈர்க்கும்.

விடுமுறை நாட்களில் ஏதாவது ஒரு கவிதைப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு சுவாரசியமாய் பேசியபடி மாதவனும், காவ்யாவும் அங்கே செல்வதுண்டு. தெப்பக்குளத்தின் படிக்கட்டுகளில் அமர்ந்தபடி மணிக்கணக்காக சிலாகித்துப் பேசுவது வழக்கம்.

பவ்யா கூடவே வந்தாலும், இவர்களது வாதத்தில் கலந்துகொள்ளமாட்டாள். மெல்லக் கழன்றுகொள்வாள். இன்றும் அப்படித்தான் செய்தாள்!

காவ்யா, தெப்பக்குளத்தின் படிக்கட்டுகளில் இறங்கத் தொடங்கினாள்.



"என்ன மாதவா... அங்கேயே நின்னுட்டிருக்கே?"

"இந்தா... இந்த கவிதைப் புத்தகத்துக்குள்ளே ஒரு கடிதம் வச்சிருக்கேன். படிச்சு பாரேன்" – தயக்கமாய் இறங்கிக்கொண்டே அதை நீட்டினான்.

அந்தக் கடிதத்தில்... தன் உள்ளத்தில் இருந்ததை மிகத் தெளிவாக எழுத்தில் வடித்திருந்தான்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

"சாரி... சாரி காவ்யா! கடந்த நாலு மாதமாகவே எனக்குள்ளே... உன்கிட்ட சொல்லவும் முடியாம... முழுங்கவும் முடியாம நான் பட்டபாடு... ஐ லவ் யூ ஸோ மச்டா...

'நிம்மியைக் கல்யாணம் பண்ணிக்கணும் மாதவா'ன்னு கேட்டே பாரு... என்னால அவளை மட்டுமல்ல... வேற எந்தப் பொண்ணையும் என்னோட மனைவி ஸ்தானத்துல வச்சுப் பார்க்க முடியாது.

என் மனசுல விஸ்வரூபம் எடுத்து நீ வியாபிச்சு நிக்கிறியே காவ்யா... ப்ச்! என்னோட தயக்கம்– கோழைத்தனத்தால... எல்லாமே கையைவிட்டுப் போயிடுச்சு. விரக்தியோட விளிம்புல நான் நின்னுட்டிருக்கேன் தெரியுமா?

உன்னோட இ–மெயிலைப் பார்த்ததும் என்னோட பயணத்தை பாதியில ரத்து பண்ணிட்டு ஓடி வந்திருக்கிறேன். 'காவ்யாகிட்ட நான் எதையும் மறைச்சதில்லை'ங்கிற மனநிறைவு எனக்கு வேணும்.

இதுக்கு மேலயும் நான் இங்கே இருக்க விரும்பல. கண்காணாம எங்கேயாவது போயிடலாம்னு இருக்கேன். அதான் எல்லோருக்கும் நல்லது. நீ எங்கே இருந்தாலும் நல்லா இருக்கணும் காவ்யா. நா வரேன்" என நகர எத்தனித்தான்.

"நில்லு மாதவா! நான் உன்னோட சிநேகிதிப்பா. சின்ன வயசிலேருந்து இப்பவரைக்கும் ஒண்ணா பழகினவ. உன் கடிதத்தைப் படிச்சேன். உன் மன உணர்வுகளை என்னால புரிஞ்சுக்க முடியுது.

நம்ம நட்பு ஜென்ம ஜென்மத்துக்கும் தொடரணும்னு விரும்பறவ நான். இந்த ஒரு காரணத்துக்காக அதை முறிச்சுக்குவேன்னு பயந்து செத்திருக்கே?

எவ்ளோ கண்ணியமானவன் நீ! இதை ஆரம்பத்துலேயே சொல்லி இருக்கலாமே? உன்னை மறுக்க யாருக்காவது மனசு வருமா?

அம்மாகிட்ட வந்து பேசு. அவங்களுக்கு எப்பவும் உன் மேல தனி மரியாதை உண்டு. மேற்கொண்டு என்ன செய்யணுமோ அதைப் பெரியவங்களே பார்த்துக்கட்டும்.

நாங்க கவுரவமா வாழறதுக்கு காரணமே நீங்கதானே? உங்க குடும்பத்துக்கே மருமகளா வர்றது என்னோட அதிர்ஷ்டம் மாதவா! 'கண்காணாம எங்கேயாவது போயிடப் போறேன்'னு சொல்லி... என் மனசை ஏன் நோகடிக்கிறே?" என்று கேட்டபடியே மேல் படிக்கட்டில் நின்றிருந்த மாதவனை நெருங்கினாள்.

சமீபத்தில் பெய்த அடைமழையில் தெப்பக்குளத்தின் படிக்கட்டுகளில் லேசாக பாசி படர்ந்திருந்தது. பேச்சு மும்முரத்தில் காவ்யா அதைக் கவனிக்காமல் ஏறியதால், கால்கள் நழுவி பின்பக்கமாய் சரக்கென்று விழப்போனாள்.

அவளது கையிலிருந்த கவிதைப் புத்தகம் தவறியது.

"காவ்யா... பார்த்து..."– பதறியபடி சட்டென்று வலக்கரத்தால் அவளது இடுப்பை வளைத்து தாங்கிப் பிடித்தான்.

"என்ன காவ்யா? தடுமாறி படிக்கட்டுலே விழுந்திருந்தா என்ன ஆகியிருக்கும்? கவனமா இருக்க வேண்டாமா?"– அவனது கரிசனத்தைக் கண்டு நெகிழ்ந்து அவசரமாய் விலக நினைத்து– மீண்டும் பாசியில் காலைப் பதித்து மறுபடியும் வழுக்கி விழப்போனவளை– கண் இமைக்கும் நேரத்தில் இரு கரங்களாலும் இறுகப் பற்றி தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டான்.

அதிர்ச்சியில் அவள் உடல் மெல்ல நடுங்கியது.

அவளது பயத்தைப் போக்கும் விதமாக தன் பிடியை இறுக்கியவன் மெல்லிய குரலில்–



"ஐ லவ் யூ ஸோ மச் காவ்யா" என்று முணுமுணுத்தான்.

"நான் ஒரு முட்டாள் மாதவா. எப்போ நீ கண்காணாம போயிடப் போறேன்னு சொன்னியோ... அப்பவே பகீர்னு ஆகிடுச்சு. என் குடல் முடிச்சுப் போட்டுக்கிட்டாப்ல பதறிட்டேன். அப்பதான் எனக்கே ஒரு விஷயம் புரிஞ்சுச்சு.

அடிமனசுல எனக்கும் உன் மேல காதல் இருந்திருக்கும் போல! நான்கூட உ... உன்னை... நேசிக்கிறேன். ஐ லவ் யூ மாதவா" கண்கள் கசிய உணர்ச்சிவசப்பட்டு பேசியதில் குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட... அவனது அணைப்பில் இருந்து விலகத் தோன்றாமல் விழிகளை மூடினாள்.

இதுவரை கட்டுக்குள் வைத்திருந்த காதலும், அன்பும்– அணை உடைப்பெடுத்த வெள்ளம் போல் குபீரென்று வெளிப்பட்டு... அந்த இரு இளம் உள்ளங்களைத் திணறடித்தன.

"காவ்யா! இதைக் கேட்டதும் எனக்கு எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா?"– என்றபடி அவளது பிறை நெற்றியில் மென்மையாக இதழ் பதித்தான்.

இருவரின் உருவங்களும் தெப்பக்குளத்து நீரில் ரம்மியமாய் பிரதிபலித்தன.

அதைக் கண்கொட்டாமல் பார்த்த மாதவன், "காவ்யா! குளத்து தண்ணியில பாரு... சுற்றிலும் இருக்கிற லில்லிகளுக்கு நடுவே உன் முகம் தாமரை பொலிவோடு தெரியுதுல்ல?"

விழிகளை மெல்ல மலர்த்தி அங்கே பார்வையைப் பதித்தாள். பட்டு ரோஜா வண்ணச் சேலையில் இன்று தான் அதீதப் பொலிவுடன் மிளிர்வதையும், கதகதப்பான அவன் அணைப்பில் இன்னமும் கட்டுண்டு கிடப்பதையும் கண்டு குங்குமப்பூவாய் கன்னம் சிவந்தாள் காவ்யா.

நீரின் தெளிவில்– இருவர் விழிகளும் நேசமாய் மோதி, விலகத் தோன்றாமல் லயித்துக் கிடந்தன.

திடுதிப்பென்று வானம் தூற ஆரம்பித்தது.

மழைத்துளிகள் குளத்தில் விழ, நீரில் வளையங்கள் உருவாகி

இவர்களின் பிரதிபிம்பங்களைக் கலைத்தன.

"அக்கா...! பெரிய மழையா வரும் போலிருக்கு. நாம கிளம்பலாமா?"– அரக்க பரக்க ஓடி வந்தபடி குரல் கொடுத்தாள் பவ்யா.

உலகையை மறந்து நின்றவர்கள்... திடுக்கிட்டு அவசரமாய் விலகினார்கள்.

## 11

"**மா**தவன் சார்... மிஸ்டர் மாதவன்! நான் டாக்டரை அழைச்சுட்டு வந்திருக்கேன். கொஞ்சம் இங்கே பாருங்களேன்..."– அறைச் சிப்பந்தி டேவிட் பரிவுடன் அவனது தோளைத் தொட்டு எழுப்பியதும்– காய்ச்சலில் அக்கினித் துண்டங்களாய் தகதகவென்று எரிந்த விழிகளை மெல்ல மலர்த்தி ஏறிட்டான்.

"நான் எங்கே இருக்கேன்?"– பார்வையால் அந்த விசாலமான அறையை வலம் வந்தான் மாதவன்.

"இந்தியாவில் இருந்து நீங்க எப்ப சிங்கப்பூருக்கு வந்தாலும் நம்ம ஓட்டல்லேதான் தங்குவீங்க. நான் டேவிட்! உங்க 'வெல்விஷர்'. ஒரு வாரத்துக்கு முன்னதான் வந்தீங்க. இரவு பகல் பார்க்காம தீவிரமா 'ஒர்க்' பண்ணிட்டு இருந்தீங்க. நேத்தைக்கும் நம்ம கார்லே ஆபீசுக்குப் போனீங்க. போன வேகத்துல திரும்பி வந்தீங்க. முகம் பேயறைஞ்ச மாதிரி இருந்தது. அப்படியே அறைக்குள்ளே வந்து படுத்தவர்தான்.

சாப்பாடு எதுவும் வேணுமான்னு நான் ரெண்டு, மூணுவாட்டி இன்டர்காம்லே கேட்டேன். 'தயவுசெய்து தொந்தரவு செய்யாதீங்க'ன்னு சொல்லீட்டீங்க. இன்னிக்கும் அறைக் கதவைத் திறந்து நீங்க வெளியே வரலைன்னதும் எனக்கு சின்னதா ஒரு சந்தேகம் வந்தது. மேனேஜர்கிட்டச் சொல்லி, ரெண்டு பேரும் உங்க அறைக்கே வந்து பார்த்தோம். நாங்க சந்தேகப்பட்டாப்பல நீங்களும் அடிச்சுப் போட்ட மாதிரிபடுத்துக் கிடந்தீங்க.



காய்ச்சல் அனலாய் கொதிச்சதும் டாக்டருக்கு போன் பண்ணி வரவழைச்சோம்"– டேவிட் மேற்கொண்டு பேசியது எதுவும் மாதவனின் செவிகளில் விழவில்லை.

'ஐயோ... நான் கண்டது கனவா? கடவுளே! இது நிஜமாகவே நடந்திருக்கக் கூடாதா?

இது கனவு மாதிரி தெரியலையே? யதார்த்தமா நடந்தது மாதிரி இருந்ததே? என்ன அழகான கனவு? கலைந்துவிட்டதே?

நேற்று காவ்யா அனுப்பிய இ-மெயிலைப் படித்ததும் என் இதயம் தூள் தூளாய் நொறுங்கிப் போய்விட்டதே?

என்றாவது காவ்யாவிடம் மனதைத் திறந்து காட்டி அவளது சம்மதத்தைப் பெற்று அவளுக்கு மாலை சூட்டலாம் என்றிருந்தேனே? எல்லாம் கனவாய் போய்விட்டதே?

காவ்யா... என் ஆருயிரே... என் இதயத்தில் அழியாத ஓவியமாய் பதிந்தவளே? நீ என்னைவிட்டுப் போகப் போகிறாயா? அதுவும் இன்னொருவருக்கு சொந்தம் ஆகிறாயா? ஐயோ... என்னால் தாங்க முடியலையே?

நீ இல்லாத வாழ்க்கையை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாதே?'

கவலையும், அதிர்ச்சியும், ஏமாற்றமும் எவ்வளவு பெரிய திடகாத்திரமான மனிதனையும் நெடுஞ்சாண் கிடையாகப் படுக்கையில் சாய்த்துவிடும் என்று பெரியவர்கள் சும்மாவா சொல்லி வைத்தார்கள்?

சுருட்டிப் போட்ட விரிப்பாக பத்து நாட்களுக்கும் மேலாக முடங்கிக் கிடந்தான் மாதவன். டேவிட் அவனைப் பரிவுடன் கவனித்துக்கொண்டார்.

காய்ச்சல் கட்டுப்பட்டு மெல்ல எழுந்து அமர்ந்தவன், அம்மாவுக்கு போன் செய்தான்.

"டேய் மாதவா! ஏன் போனே பண்ணலை? நான் என்னவோ ஏதோன்னு ரொம்பவே பதறிப்போயிட்டேன் கண்ணா. நீ நல்லா இருக்கியாப்பா?"– மகனின் குரலைக் கேட்டதும் கண்களில் நீர்

துளிர்க்கப் பேசினாள் கற்பகம்.

"எனக்கு ஒண்ணுமில்லைம்மா. வேலை மும்முரத்துல அப்படியே இருந்துட்டேன். நீங்க என்னைப் பத்தி கவலைப்படாம இருக்க வேண்டியதுதானே? மாத்திரை– மருந்து எல்லாம் சரியா எடுத்து உடம்பைப் பார்த்துக்கோங்க.

காவ்யாவோட இ–மெயிலைப் பார்த்தேன். 'ரொ...ரொம்ப சந்தோஷப்பட்டேன்'னு சொல்லுங்க. அவ 'செல்'லுக்கு முயற்சி பண்ணினேன். இணைப்பு கிடைக்கலை..."

"மா... மாதவா! காவ்யா வேற இடத்துல வாழ்க்கைப்படப் போறதை என்னால ஜீரணிக்க முடியலைப்பா. உன் மனசுல என்ன இருக்கோ எனக்குத் தெரியாது. எதிர்காலத்துல அவளை உனக்குப் பேசி முடிக்கணும். அவ இந்த வீட்டுக்கு வந்து விளக்கு ஏத்தணும்னு கனவு கண்டுகிட்டு இருந்தேன்ப்பா... எல்லாம் போச்சே?"

மாதவனுக்கு உள்ளூர என்னவோ என்றிருந்தது.

'ஐயோ... அம்மா! உனக்கும் அப்படியொரு ஆசை இருந்துச்சா? இதுதான் விதியின் விளையாட்டா? ஆளாளுக்கு மனசுல ஆசையைப் புதைச்சு வச்சுக்கிட்டு, அநியாயமா இப்படி கோட்டை விட்டுட்டோமே? எல்லாம் என் தலையெழுத்து...'

போட்டா போட்டி போட்டுக்கொண்டு ஓடிவந்த வார்த்தைகள் தொண்டையைத் தாண்டாமல் மவுனம் காத்தன.

"எ... என் மனசுல அப்படி எந்த எண்ணமும் இல்லையே! உங்களைப் பெத்த பொண்ணுக்கும் மேலாக காவ்யா கவனிச்சிருக்கா. அதனாலதான் உங்க மனசு இப்படி பரிதவிக்குதுன்னு நெனைக்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் உங்க வருத்தத்தை வெளிக்காட்டாதீங்க.

காவ்யாவின் பணிவிடையை நாம ஒருநாளும் மறந்துடக் கூடாது. உங்க நினைவா நல்ல திருமணப் பரிசு கொடுங்க. அவளுக்கு எவ்வளவு செய்தாலும் தகும்.

நான் கல்யாணத்துக்கு வரமுடியாது. 'புராஜெக்ட்' முடிஞ்சதும் என்னை பதவி உயர்வோடு பெங்களூருக்கு மாத்திடுவாங்கன்னு



தகவல் வந்துருக்கும்மா. அப்பா வெளியில போயிருக்காரா? சரி! நேரம் கிடைக்கும்போது பேசுறேன். அபிராமி அம்மாவை நான் ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லு. வச்சுடட்டுமா?"

காய்ச்சலில் விழுந்ததால் அவனது நாக்கு ஏகத்திற்கும் கசந்து தொலைத்தது. மனமும் விரக்தியிலும், வேதனையிலும் தவித்துக் கிடந்தது.

'சாரிம்மா... உன்கிட்ட பொய் சொல்லிட்டேன். பெங்களூர்லே இருக்கிற கிளைக்கு என்னை மாத்தச் சொல்லி நான்தான் கேட்டிருக்கேன். நம்ம வீட்டுக்கு வர்றதுக்கே எனக்கு சங்கடமா இருக்கும்மா. என் மனசுல சூறாவளி வீசிட்டிருக்கு. கொஞ்ச காலம் கழிச்சு என் மனம் அமைதி அடைஞ்சதும் என்னை நானே தேத்திக்கிட்டு ஊருக்கு வர முயற்சிக்கிறேன்...'

மானசீகமாக அம்மாவிடம் பேசி முடித்தான் மாதவன்.

தூக்க மாத்திரையை விழுங்கிவிட்டு... தன் பர்ஸில் இருந்த காவ்யாவின் சிறிய புகைப்படத்தை உற்றுப் பார்த்து– அவளது அழகிய உருவத்தை விழிகளில் நிரப்பிக்கொண்டு தூக்கத்தை மெல்ல தழுவினான்.

## 12

மனோகரன் குட்டி போட்ட பூனையாய் குறுக்கும் நெடுக்குமாய் அலைந்துகொண்டிருந்தான். காவ்யா வீட்டு வாசலில் பந்தக்கால் நடப்பட்டிருந்ததைப் பார்த்ததுமே அவனுக்கு உள்ளுக்குள் திகுதிகுவென்று எரிந்தது.

தெருவில் கிரிக்கெட் விளையாடிய சிறுவர்களில் ஒருவனை மடக்கினான். விஷயத்தைக் கறந்தான்.

அது முதலே மனோகரனுக்கு ஆத்திரம் பொங்கியது. உள்ளுக்குள் உலை கொதித்தது.

'ஏய் காவ்யா! ஆசையா அன்னிக்குப் பேச வந்தா... என்னை

எப்படி தூக்கி எறிஞ்சே? நாளைக்கு உனக்கு கல்யாணமா? இந்த மனோவை மட்டம் தட்டிப் பேசினதுக்கு, அவமானப்படுத்தியதுக்கு உனக்கு வைக்கிறேன்டி ஆப்பு.

அதுல இருந்து நீ மீளவே முடியாம கிடந்து துடிக்கணும். அதைப் பார்த்து நான் ரசிக்கணும். அந்த மாதவனும் அணுஅணுவா நொந்து சாகணும்...'– உள்ளூர கொந்தளித்தவன், பிரயத்தனப்பட்டு வசந்த் முகவரியை சேகரித்தான்.

மாலையும், கழுத்துமாய் கல்யாணக் கோலத்தில் மலர்ந்த முகத்துடன் காவ்யா அவனது மனக்கண்ணில் மீண்டும் மீண்டும் தோன்றினாள்.

வெறி தலைக்கு ஏறியவனாய்... அபாண்டம் சுமந்த வார்த்தைகளை எழுத்தில் வடித்தான்.

ஒரு அப்பாவிப் பெண்ணின் மீது சேற்றை வாரி இறைத்து அநியாயமாய் அபாண்டத்தையும், பழியையும் சுமத்தி– கண்டபடி கடிதம் எழுதியதும்... மனோகரனுக்கு மலை போல் மனதை அழுத்திய பாரம் மறுகணமே மாயமாய் மறைந்தது.

வஞ்சம் தீர்த்துவிட்ட நிம்மதியில்... தனிமையில் கெக்கலிட்டுச் சிரித்தான் அந்த மகாபாவி.

## 13

முதலிரவு! தலைநிறைய பூச்சூடி, பால் சொம்பைக் கைகளில் ஏந்தி மெல்ல நடந்து வந்தாள் காவ்யா.

பால் சொம்பை மோடாவில் வைத்துவிட்டு அவனது கால்களில் விழுந்து பணிந்தாள்.

"உன்கிட்ட மனசுவிட்டுப் பேசணும்னு பிரியப்படறேன். முதல்ல நாம ஒருத்தரை ஒருத்தர் நல்லாப் புரிஞ்சுக்கணும். இல்லையா...?"

"கண்டிப்பா... சொல்லுங்க" நாணத்தால் பார்வையைத் தழைத்தபடி முணுமுணுத்தாள்.



"பார் காவ்யா! எங்க அம்மாதான் இந்த வீட்டுக்கு தெய்வம். நான் அவங்க மேல உயிரையே வச்சிருக்கேன். அவங்க கிழிச்ச கோட்டை இதுவரை நான் தாண்டியதே இல்லை. நீயும் அதுமாதிரிதான் நடந்துக்கணும்.

தம்பி ஆனந்துக்கு இந்த வருஷத்தோடு என்ஜினீயரிங் படிப்பு முடியும். மேற்கொண்டு எம்.பி.ஏ. படிக்கணும்னு ஆசைப்படறான். அப்பத்தான் அவனுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

உமா பி.ஏ. கடைசி வருஷத்துல இருக்கா. படிப்பை முடிச்சதும் சீர்செனத்தியை சிறப்பா செஞ்சு கவுரவமான இடத்துல அவளை கட்டிக் கொடுக்கணும். அதோடு, இந்தப் பரம்பரை வீட்டை காலத்துக்கு ஏத்தபடி நவீனமா மாத்தி அமைச்சுடணும்னும் நான் ஆசைப்படறேன்.

வாழ்க்கையில சீக்கிரமாக முன்னேறி உசந்து காட்டணுங்கிற வெறி இருக்கு. அதான் 'சைட் பிஸினஸ்'லே இறங்கலாம்னு இருக்கேன். இந்தக் கடமைகளை முடிக்கிறதுக்கு முன்னாடி நம்ம வாழ்க்கையைத் தொடங்கறதுக்கு பயமா இருக்கு காவ்யா.

அழகான மனைவி எனக்கு வாய்ச்சிருக்கா. நாளைக்கே குழந்தை குட்டின்னு குடும்பம் பெரிசாகும்போது... எனக்கு ஒரு சுயநலம் வந்துட்டா? நம்ம மனைவி, குழந்தைங்கன்னு தோண ஆரம்பிச்சுட்டா என்னோட பொறுப்புகளை நான் உதறத் தொடங்கிடுவேன் இல்லையா?"

விருட்டென்று நிமிர்ந்து விழிகள் விரிய அவனைப் பார்த்தாள் காவ்யா.

"எ... எங்க அம்மா என்னை அந்த மாதிரி வளர்க்கலைங்க. கூட்டுக் குடும்பங்கறது ஒரு அழகான குருவிக்கூடு மாதிரி. அந்தக் கூட்டை கலைக்கிறது மகாபாவம்னு எனக்குத் தெரியும். அம்மா, அப்பா, தம்பி, தங்கச்சிங்க.. அத்தனை பேரையும் அனுசரிச்சுப் போறதும் என் கடமை இல்லையா?

கணவரைக் கைக்குள்ளே போட்டுக்கிட்டு தனியா பிரிச்சுக் கூட்டிக்கிட்டு போற சின்ன புத்தி எனக்கு இல்லைங்க. நான் இந்த

வீட்டுக்கு மருமகள் இல்ல. மூத்த மகள். என்னோட கடமையில் இருந்து என்னிக்கும் நான் தவறவேமாட்டேன்..." அழுத்தம் திருத்தமாக அவள் பேசியதும் முறுவலித்தான் வசந்த்.

"நான் உன்னை அந்த மாதிரி நினைக்கவே இல்லை காவ்யா! நாளடைவில் நானே சுயநலமா சிந்திக்கத் தொடங்கிட்டா?

நீ படிச்சவ... புத்திசாலி! என்னோட மன உணர்வுகளை மிகத் துல்லியமாக புரிஞ்சுப்பேன்னு நம்பறேன். இப்படி இந்த முடிவிலே இருந்தாத்தான் நமக்கே ஒரு உத்வேகம் வரும். நம்ம கடமைகளை வெகு சீக்கிரமா முடிக்கணுமேங்கிற வெறி வரும். அதுவரைக்கும் நாம..." மிடறு விழுங்கியபடி ஒரு குற்ற உணர்வுடன் அவளது விழிகளைத் தயக்கமாய் ஊடுருவினான்.

அவளது அழகிய விழிகளில் ஆச்சரியம் மிதந்தது.

"கல்யாணமானதுமே மனைவியை சாக்கு வச்சு தன் கடமைகளை உதறிட்டுத் தனியா பிரிஞ்சு போற கணவன்மார்களுக்கு மத்தியில... கோபுரமா உசந்து நிக்கிறீங்க. உங்க கடமை உணர்ச்சியை மதிக்கிறேன். நீங்க எந்த முடிவெடுத்தாலும் சரி! எனக்கு சம்மதம்தான். கடமைகளை நிறைவேத்த நான் உறுதுணையா இருப்பேன்."

"தேங்க்ஸ் காவ்யா! இ... இந்த விஷயத்தை நமக்குள்ளே வச்சுக்கணும். அதாவது, நாம எடுத்த முடிவு உங்க வீட்டுக்கோ, எங்க வீட்டுக்கோ தெரியாம பார்த்துக்கணும். ஏன்னா..."

அவன் பேசி முடிப்பதற்குள் சட்டென்று இடைமறித்தாள் காவ்யா.

"சேச்சே! இது நமக்குள்ளே எடுத்த அந்தரங்க முடிவு. நிச்சயமா நான் மூச்சு விடமாட்டேன்..."– என்றபடி மோடாவில் வைத்திருந்த பால் சொம்பை எடுத்து அவனிடம் நீட்டிவிட்டு... ஒரு போர்வையை எடுத்து தரையில் விரித்து தலையணையை எடுத்துப் போட்டு நிமிர்ந்தவளின் அருகில் வந்து நின்றான் வசந்த்.

உச்சி முதல் பார்வையால் அளவெடுத்தான். நெருங்கிப் பார்க்கும்போது... ஒப்பற்ற பேரழகியாய் மிளிர்ந்தவளைக் கண்டு



அவனது இதயம் தடதடத்தது.

"கா... காவ்யா! இனிமே என்னை அத்தான்னு கூப்பிடு! கு...குட் நைட்"– மனம் தடுமாறியவனாய் அதற்கு மேல் பேசத் தோன்றாமல் கட்டிலில் படுத்தான்.

"குட் நைட் அத்தான்"– தரையில் சரிந்து ஒருக்களித்து அவனுக்கு முதுகு காட்டிப் படுத்துக்கொண்டாள் காவ்யா.

'எப்படியோ இன்னும் கொஞ்ச காலத்துக்கு இவளுக்கு சந்தேகப்பொறி தட்டாம இருக்கும். அப்புறம் என்ன சொல்லி சமாளிக்கப் போறேன்?

காவ்யா என்னை மதிக்கிறாள். கடைசி வரைக்கும் இவளுக்கு உண்மை தெரியவே கூடாது. அதற்கு என்ன செய்யலாம்? இவளைக் கொத்தடிமை ஆக்குகிறேன். அதனால் நான் தப்பிக்கலாம்'– இடைவிடாமல் யோசித்துக்கொண்டே இருந்தான் வசந்த்.

மறுநாள் கூரியரில் வந்த மொட்டைக் கடிதத்தைக் கண்டதும் அவனது விழிகள் வியப்பில் விரிந்தன.

'நல்ல துருப்புச்சீட்டு கிடைத்துவிட்டது' என்று மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்.

## 14

ஈரக்கூந்தலை பூத்துவாலையால் சுற்றிக்கொண்டு பூஜை அறைக்குள் நுழைந்தாள் காவ்யா.

பிறந்தவீட்டு சீதனமாக கொண்டு வந்திருந்த வெள்ளிக் காமாட்சி விளக்கை ஏற்றிவைத்து வணங்கினாள். நெற்றி வகிட்டில் செந்தூரத்தைத் தீற்றிக்கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தாள்.

பாலைக் காய்ச்சி இறக்கி கமகமக்கும் காப்பி தயாரித்து ஆறு தம்ளர்களில் ஊற்றி முடித்த வேளையில்... அவிழ்ந்த கூந்தலை முடிச்சிட்டபடி மாமியார் கங்கம்மாள் அடுக்களைக்குள் புகுந்தாள்.



"காப்பி போட்டாச்சா?"

கண்களை இருக்கியபடி ஏற இறங்கப் பார்த்தாள்.

"ம்... காப்பி குடிங்க அத்தே..."- ஒரு தம்ளரை எடுத்து பவ்வியமாய் நீட்டினாள்.

"இங்க எல்லாரும் தாமதமாத்தான் எழுந்திருப்பாங்க. உன்னோட சவுகரியத்துக்கு மொத்த காப்பியைப் போட்டு வச்சுட்டா எப்படி? அவங்கங்க எழுந்து வர்ற நேரத்தைப் பார்த்துட்டு... சூடா காப்பி போட்டுக் கொடு... சரியா?"

"ச...சரிங்க அத்தே! நீங்க சொல்றபடியே செய்றேன். எங்க வீட்டு சமையலுக்கும், உங்க சமையல் முறைக்கும் வித்தியாசம் இருக்கும். சமையல்லே உங்க பக்குவத்தைத் தெரிஞ்சுகிட்டு... அதே ருசியில சமைக்கலாம்னு இருக்கேன். காலையில டிபனுக்கு, மதியத்துக்கு என்னென்ன செய்யணும்னு சொல்லுங்க அத்தே."

"இனி உன் சமையலைத்தானே நாங்க சாப்பிடணும். செய்முறை எப்படி இருந்தா என்ன? ருசியா இருக்கணும்... அவ்வளவுதான். டிபனுக்கு இட்லி, வெங்காய சாம்பார், கொத்தமல்லி சட்னி வச்சுடு.

உமாவுக்கு மூணு தோசை வார்த்துடு. அவளுக்கு இட்லி பிடிக்காது. குழந்தை முகத்தைச் சுளிப்பா. இட்லிப் பொடியும், எள்ளுப் பொடியும் வச்சா ரொம்பவே பிடிக்கும்.

மதியத்துக்கு காலிபிளவர் சாம்பார், வாழைத்தண்டு கூட்டு, சேனைக்கிழங்கு வறுவல், அப்பளம் வச்சிடு.

ஆங்! அப்படியே எலுமிச்சை ரசம் வச்சுட்டா நல்லது. உங்க மாமாவுக்கு சாம்பார்தான் பிடிக்கும். வசந்துக்கு ரசம்னா உயிர். ஒரு வாரத்திற்கு இருக்கிற மாதிரி எண்ணெய் நிறைய ஊத்தி காரசாரமா தக்காளி ஊறுகாயோ, இஞ்சி ஊறுகாயோ செய்து வச்சுட்டா... எல்லோரும் கூடுதலாக ஒருபிடி சாப்பிடுவாங்க. சரியா?"

"சரி அத்தே"- தலையாட்டிவிட்டு மவுனமாய் குக்கரில் பருப்பைப் போட்டு அடுப்பில் வைத்தாள் காவ்யா.

"காவ்யா! ஆபீசுக்கு எத்தனை நாளு லீவு போட்டிருக்கே?"



"ரெண்டு வாரம் அத்தே... மறுவீடு, விருந்துன்னு அங்கேயும் இங்கேயுமாக போக வேண்டியது இருக்கும். குலதெய்வம் கோவிலுக்கும் போகணும்."

"என்னத்துக்கு அனாவசியமா இவ்ளோ நாளு லீவு எடுக்கணும்? நீ பேசாம நாளைக்கே வேலைக்கு போயிடு. டிபன், மதியச் சமையலை காலையிலேமுடிச்சி வச்சுட்டு கிளம்பு.

ராத்திரி டிபனுக்கு கண்டிப்பா எனக்கு சப்பாத்தி இருந்தாகணும். குருமா இல்லேன்னா சென்னா மசாலா பண்ணிட்டு, சட்னி செஞ்சுடு. உமாவுக்கு 'மூடு' இருந்தாத்தான் சப்பாத்தி சாப்பிடுவா. இல்லேன்னா ரவா பொங்கலோ, குழாய் புட்டோ வேணும்னு அடம் பண்ணுவா.

எதுக்கும் அவளுக்கு என்ன வேணும்னு ஒரு வார்த்தை கேட்டுக்கோ. அப்புறம் தினமும் எனக்கு காய்கறி சூப்போ, கீரை சூப்போ வச்சுக் கொடுத்திடணும்..."

"சரி அத்தே."

"நாம வேலைக்குப் போறோம், சம்பாதிக்கிறோம்னு மெத்தனமா இருந்துடக் கூடாது. வீட்டுக் காரியங்களிலே கவனமா இருக்கணும். அதான் ஒரு நல்ல பொம்பளைக்கு லட்சணம்... சரியா?"

"ச... சரிங்க அத்தே" தலை குனிந்தபடி சின்ன வெங்காயத்தை நறுக்கிக்கொண்டே செவிமடுத்தாள்.

"காலையில நாலு மணிக்கு எழுந்துக்கிறேல்ல? குளிச்சுட்டு வந்த உடனே வீட்டைப் பெருக்கிட்டு- ஹாலையும், சமையல்கட்டையும் சுத்தமா துடைச்சுடு. அப்புறம், விளக்கேத்திட்டு சமையலை ஆரம்பி. சமையல் முடிஞ்சதும் நீயும் சாப்பிட்டுட்டு எட்டரைக்கு ஆபீசுக்கு கிளம்பு.

சாயந்தரம் வீட்டுக்கு வந்ததும்- பாத்திரம் தேய்ச்சுட்டு ராத்திரி டிபன் வேலையை கவனி. வார லீவு நாட்கள்லே எல்லோருடைய அழுக்குத் துணிகளையும் துவைச்சு இஸ்திரி போட்டு வச்சுடு..."

"ஒரு வாரத்துல நிறைய துணிங்க சேர்ந்துடுமே அத்தே.தினமும் காலையிலும், சாயந்தரத்திலுமா துவைச்சுடறேனே? லீவுலே

'அயர்ன்' பண்ணிடுறேன்..."

"ஹாய்! இன்னியிலே இருந்து அண்ணியோட சமையலை சாப்பிடப் போறோம் நாங்க. எனக்கு சூடா காப்பி கிடைக்குமா?" சிரித்தபடி அருகில் வந்து நின்ற உமா... காவ்யாவை ஏற இறங்கப் பார்த்தாள்.

"அண்ணி! இந்த ஒற்றை வளையல் ரொம்ப அழகா இருக்கு. தடிமனா புதுமாதிரி இருக்கே?"– அண்ணியின் வலக்கை வளையலை ஆசையாய் தொட்டுத் தடவினாள்.

"அட... ஆமா! நானும் இப்பத்தான் கவனிக்கிறேன். இது கடையிலே வாங்கினதா? இல்ல செய்தீங்களா காவ்யா?"– கண்கள் பளபளக்க வினவினாள் கங்கம்மாள்.

"இதை எனக்கு கற்பகம் அம்மா அன்பளிப்பா கொடுத்தாங்க அத்தே. அவங்களுக்கு என் மேல தனி ஆசை! பொண்ணுங்க யாரும் இல்ல... ஒரே ஒரு மகன் மட்டும்தான்..."

"ஓ... பரவாயில்லையே? இந்த வளையல் மூணு, நாலு பவுனுக்கு மேல தேறும் போலிருக்கே? தங்கம் விலை ராக்கெட் மாதிரி எகிறிப் போய் கிடக்கிற காலத்துல... இதை அவங்க அன்பளிப்பா கொடுத்தது ஆச்சரியமாத்தான் இருக்கு"– மோவாயில் ஆள்காட்டி விரலை வைத்தபடி மருமகளை ஊன்றிப் பார்த்தாள் கங்கம்மாள்.

"கற்பகம் அம்மா உங்களுக்கு என்ன உறவு வேணும் அண்ணி?"

வம்பு தும்புகளில் உமாவுக்கு எப்போதும் ஆர்வம் அதிகம்.

"உறவுன்னு பார்க்கப் போனா... தூரத்து சொந்தக்காரங்கதான். அவங்க எங்க அம்மாவோட நெருங்கின சிநேகிதி. சுருக்கமா சொன்னா... இருண்டு கிடந்த எங்க வீட்டுல விளக்கேத்தி வச்சவங்க.

எங்களைப் பொறுத்தவரை மனித ரூபத்துல நடமாடற தெய்வம். பெத்த பொண்ணு மாதிரி என்கிட்ட ரொம்பவே பாசமா இருப்பாங்க."



உமாவும், கங்கம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

அதற்குப்பின் காவ்யாவுக்கு ஒரு நிமிடம்கூட நிற்க நேரமில்லை. அடுத்தடுத்து சங்கிலித் தொடராய் வேலைகள் காத்திருந்தன.

மதியச் சமையலை முடித்துவிட்டு, கியாஸ் அடுப்பை ஈரத்துணியால் துடைத்தாள். நெற்றியோரம் பூத்திருந்த வியர்வையை சேலைத் தலைப்பால் ஒற்றிக்கொண்டு திரும்பியபோது உமா உரத்துக் குரல் கொடுத்தாள்.

"அண்ணி! வாங்க... எல்லாரும் டைனிங் டேபிளுக்கு முன்னாடிதான் உட்கார்ந்திருக்கிறோம். வந்து பரிமாறுங்க. வசந்த் அண்ணா நண்பர்களைப் பார்க்கப் போயிருக்கிறான். வர்றதுக்கு நேரமாயிடும். நீங்க வாங்க..."

மறுகணம் ஆர்வமாய் அனைவருக்கும் பரிமாறினாள்.

"வாவ்! காலிபிளவர் சாம்பார் ரொம்பப் பிரமாதம். மாங்காய்–இஞ்சி ஊறுகாய் காரசாரமா டேஸ்ட்டா இருக்கு அண்ணி. எங்க அம்மாவுக்கு இன்னும் ஊறுகாய் சரியா போடவே வராது. ஊறுகாய் போடறதிலே உங்க அம்மா மாதிரியே நீங்களும் 'எக்ஸ்பர்ட்' போலிருக்கே?" மனதாரப் பாராட்டினான் ஆனந்த். உமாவோ வெகு அலட்சியமாய் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள்.

"ஏண்டா கூறுகெட்டப் பயலே! உனக்கு கொஞ்சமாச்சும் நன்றி இருக்காடா? இதுவரைக்கும் இந்த அம்மாவோட சமையலைத்தானே சப்புக்கொட்டி சாப்பிட்டே? நேத்து வந்த அண்ணி முன்னாடி அம்மாவை மட்டந்தட்டிப் பேசறியே?

அறிவுகெட்டவனே! கொஞ்சம்கூட விவஸ்தை இல்லாத ஜென்மம்... வாயை மூடிக்கிட்டு போட்டதைத் தின்னுட்டு போய்கிட்டே இரு."

"வாயை மூடிக்கிட்டு எப்படிம்மா சாப்பிட முடியும்?" நமட்டுச் சிரிப்புடன் கேட்டான் ஆனந்த்.

"இப்படியே எதிர் கேள்வி கேட்டுட்டு நையாண்டி பண்ணிக்கிட்டே இரு... உருப்பட்டமாதிரிதான்."

இருண்டுபோன முகத்துடன் தலையைக் குனிந்தபடி சாப்பிட்டார் சதாசிவம். உமா, அண்ணியை நிமிர்ந்துகூட பார்க்கவில்லை.

‘பல ஆண்டுகள் சமைத்துப் பழகியவளைப் போன்று அருமையாக சமைத்திருக்காளே? நளபாகம் மிக அற்புதமாக வருகிறதே? கெட்டிக்காரிதான்!’– உள்ளூர பொறாமையால் வெந்தாள், கங்கம்மாள்.

## 15

“கூரியர் வந்திருக்கு காவ்யா. வசந்துக்கு பதிலாக கையெழுத்துப்போட்டு வாங்கி வைம்மா”– மாமனார் சதாசிவம் உத்தரவிட்டதும். ஈரக்கைகளை முந்தானையில் துடைத்தபடி வாசலை நோக்கி விரைந்தாள்.

கடித உறையை வாங்கி அறையில் பத்திரமாக வைத்துவிட்டு, அடுக்களைக்குள் நுழையப் போனவளை... சதாசிவத்தின் குரல் தடுத்தது.

“எதுக்கும் அவனோட செல்லுக்கு போன் போட்டு... கடிதம் வந்திருக்கிற விபரத்தை சொல்லிடும்மா. ஏதாவது முக்கியமான தபாலா இருந்துட்டா? உடனே சொல்லிடறது நல்லது இல்லையா?”

“சரிங்க மாமா... சொல்லிடறேன்.”

அவனது தொடர்புகொண்டாள்.

“ஹலோ.”

“அத்தான்! உங்களுக்கு கூரியர்ல ஒரு கடிதம் வந்திருக்கு. அனுப்பியவரோட பெயர் எதுவும் அதுலே இல்லை...”

“என் நண்பர்கள்ல எவனாவது ஒருத்தன் வாழ்த்துக் கடிதம் அனுப்பி இருப்பான்னு நெனைக்கிறேன். ராத்திரி நீ எனக்காக



காத்திருக்காதே... நான் வர்றதுக்கு நேரமாயிடும்.”

“சரிங்க.”

புதிய சூழ்நிலை... புதிய உறவுகள்... அதிலும் மாமியார் கங்கம்மாளின் அதிகார தோரணை, நாத்தனார் உமாவின் அலட்சியம், எதிலும் ஒட்டாமல் இருக்கும் மாமனாரின் அசட்டையான போக்கு– அவளுக்கு இனம்புரியாத கலவரத்தை உண்டு பண்ணின.

திகிலும், பயமும் அவளை ஆட்டிப் படைத்ததில் தலைவலி ‘விண் விண்’ என்று தெரித்தது.

ஒப்புக்கு சாப்பிட்டுவிட்டு தட்டைக் கழுவி வைத்தாள்.

வீட்டு வேலைகள் தொடர்ந்தன.

‘வீட்டில் இருக்கும்போதே இத்தனை வேலைகள் இடைவிடாமல் நெட்டித் தள்ளும்போது... நாளையில் இருந்து ஆபீசுக்குச் செல்ல வேண்டுமே? எப்படி சமாளிக்கப் போகிறேன் நான்?’– நினைக்கும்போதே மிகவும் மலைப்பாக இருந்தது.

மாலையில் அனைவருக்கும் மசாலா டீ தயாரித்துக் கொடுத்தாள். வியர்வை கசகசப்பு நீங்க– ஒரு குளியல் போட்டு வேறொரு பருத்திச்சேலை உடுத்தி, கூந்தலைப் பின்னலிட்டு ‘பளிச்’சென்று வெளிப்பட்டாள்.

பூஜை அறையில் மீண்டும் விளக்கேற்றி வணங்கிவிட்டு... அடுக்களைக்குள் புகுந்தாள்.

கோதுமை மாவை மெல்ல சலித்து வெதுவெதுப்பான பால் ஊற்றி– உப்பு, எண்ணெய் சேர்த்து பிசைந்தாள்.

மாமியார் கங்கம்மாள் டி.வி. தொடரில் சுவாரசியமாக மூழ்கிக் கிடந்தாள்.

உமா படுக்கையில் குப்புறப்படுத்து நகத்தைக் கடித்தபடி கதைப் புத்தகம் வாசித்தாள்.

உருளைக்கிழங்கு குருமாவை இறக்கிவிட்டு சட்னிக்கு தாளித்துக் கொட்டியபோது... தொலைபேசி அலறியது. முந்தானையை வரிந்து சொருகியபடி அவசரமாய் ரிசீவரை

எடுத்தாள் காவ்யா.

"ஹலோ."

"ஹலோ நான்தான் அம்மா பேசறேன்டா... உன்கிட்டப் பேசணும் போல இருந்துச்சு. நீ இல்லாத வீடு வெறிச்சுன்னு இருக்கு காவ்யா. நாளைக்கு நீயும், மாப்பிள்ளையும் எப்ப வருவீங்கன்னு காத்திருக்கேன். நம்ம வீட்டுல விருந்து இருக்குல்ல... அதான்!"

"எ...என்னம்மா இது? பஸ்லே ஏறினா பத்தே நிமிஷத்துல வீட்டுல இருப்பேன். ரொம்ப தூரத்துல பொண்ணைக் குடுத்துட்ட மாதிரி ஏங்கிப்போய் பேசறியே? நாளைக்கே நான் ஆபீசுக்குப் போலாம்னு இருக்கேன்.

அத்தைதான் போகச் சொல்லிட்டாங்க... அவர் வந்ததும் எந்த நேரம் அவருக்குத் தோதுப்படும்னு கேட்டு போன் பண்ணுறேன்."

"கற்பகம் கூட உனக்கும், மாப்பிள்ளைக்கும் விருந்து வைக்கணும்னு பேசிட்டிருந்தா. ரெண்டு பேருக்கும் புதுத் துணிமணி எடுத்து தயாரா வச்சிருக்கா. சரி! மாப்பிள்ளைக்கிட்டப் கேட்டுட்டு எனக்கு சொல்லு. பவ்யாவுக்கு சதா உன் ஞாபகம்தான். வீட்டுல எல்லோரையும் நான் விசாரிச்சதா சொல்லு?"

"சரிம்மா"– ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தாள்.

"போன்ல யாரு?"

"அம்மா பேசினாங்க... நாளைக்கு விருந்துக்கு வர சவுகரியப்படுமான்னு கேட்டு சொல்லச் சொன்னாங்க. உங்க எல்லாரையும் விசாரிச்சாங்க அத்தே."

"அப்படியா? சரி... நான் சர்க்கரை நோய்க்காரி! பசி வயித்தைக் கிள்ளுது. சூடா சப்பாத்தி போட்டுக்கொண்டு வா. மசமசன்னு நிக்காதே."

"இ...இதோ வந்துடறேன் அத்தே"– அடுக்களைக்குள் விரைந்தாள்.

இரவு பத்தரை மணி வாக்கில்... தரையில் விரிப்பை விரித்துப் படுத்தவுடன் தூக்கம் கண்களைத் தழுவியது.



"டிங் டாங்... டிங் டாங்"– அழைப்பு மணி அலறலைக் கேட்டு வாரிச் சுருட்டி எழுந்தாள்.

கதவைத் திறந்ததும் லேசான தள்ளாட்டத்துடன் உள்ளே நுழைந்த வசந்தைக் கண்டு... அவளுக்கு திக்கென்று இருந்தது.

'இவருக்கு குடிப் பழக்கம்கூட உண்டா? ஐயோ... குடி குடியையே கெடுத்துடும் என்று சொல்வார்களே?'– மளுக் என்று அவளது விழிகளில் கண்ணீர் கட்டியது.

"சாப்பிட்டியா காவ்யா?" கரிசனமாய் கேட்டான் வசந்த்.

"ம்... சாப்பிட்டேன்... ரொம்ப நேரம் 'பெல்' அடிச்சிங்களா? சாரி! அசந்து தூங்கிட்டேன்."

"அதனாலென்ன? எப்பவும் அம்மாதான் வந்து கதவைத் திறப்பாங்க... மருமகள் வந்துட்டாங்கற திருப்தியில் நிம்மதியா தூங்கிட்டாங்களா?"

"ஆ... மா...."

'அப்படியென்றால் இவர் தினமும் இப்படித்தான் குடித்துவிட்டு தாமதமாக வருவாரா?'

அறைக்குள் வந்ததும் கதவை சாத்திவிட்டு திரும்பியபோது...

"காவ்யா! அந்தக் கடிதத்தை எங்கே வச்சே?" ஞாபகமாய் கேட்டான்.

"அதோ... அலமாரியில இருக்கு"– என்றவள் கடிதத்தை எடுத்து வந்து கொடுத்தாள்.

"காவ்யா! இங்கே வாடி... வந்து இந்த கடிதத்துக்கு பதில் சொல்லுடி"– வசந்த் கத்தியதில் அந்த வீடே அதிர்ந்தது.

குடித்துவிட்டு வந்திருக்கும் கணவன்... இரவு நேரத்தில் கோபமாய் கத்தியதும் காவ்யாவுக்கு இன்னும் தூக்கிவாரிப் போட்டது.

"பேரைப் பாரு... காவ்யாவாம். உன்னைப் பத்தி ஒருத்தன் ரொம்ப கண்றாவியா எழுதி இருக்கானே? வா... வந்து வாசிச்சிப் பாரு..."

# மாயாஜால சிறுமி

பெங்களூரைச் சேர்ந்த சிறுமியின் பெயர் தேஜஸ்ஸ்ரீ. 12 வயதான அவளது சாகசங்களின் சாதனைக்கோ வயதில்லை.

பெங்களூர் அருகே உள்ள தொட்டபள்ளாபூரில் மக்கள் வெள்ளத்தால் நிறைந்த அரங்கம். சிறுமி தேஜஸ்ஸ்ரீ, தண்ணீர் நிரம்பிய பால்கேனில் அடைத்து வைக்கப்படுகிறாள். நமக்கு மூச்சு நின்றுபோய்விட்டது.

ஆனால், என்ன ஆச்சரியம்... அரை நிமிடத்துக்கு பிறகு பால்கேனில் இருந்து முகத்தில் எந்த பதற்றமும் இல்லாமல், பால் முகம் மாறாத தேஜஸ்ஸ்ரீ வெளியே வர– அரங்கத்தில் ஒரே கைதட்டல்.

அடுத்து, சுக்குநூறாக உடைத்து போடப்பட்ட கண்ணாடி துண்டுகள் மீது தேஜஸ்ஸ்ரீயின் பிஞ்சு கால்கள், மலர் மெத்தையில் ஆடியதுபோல் எளிதாக நடனம் புரிகின்றன. என்றாலும், எந்த காயமும் ஏற்படவில்லை. பார்வையாளர்கள் அனைவருக்கும் பிரமிப்பு.

தேஜஸ்ஸ்ரீ, படிப்பிலும் படுசுட்டி. தொட்டபள்ளாபூரில் உள்ள விவேகானந்தா பள்ளியில் படித்து வருகிறாள். நன்றாக படிக்கக்கூடியவள்.

"அவளது பெயரை சாதனை புத்தகத்தில் இடம்பெற செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு உள்ளேன்" என்கிறார், அவளுக்கு மாயாஜாலம் கற்றுத்தரும் தந்தை ஜூலிகல் நடராஜ்.

– குரிப்பன்குளம் எஸ்.ஜெபரி.



காவ்யாவின் இதயம் எகிறித் துடிக்க ஆரம்பித்தது. உள்ளுக்குள் உதறல் எடுத்தது. மழையில் நனைந்த புறா போல் வெட வெடவென்னு நடுங்கியபடி மெல்லச் சென்றாள்.

"டேய் வசந்த்... என்னடா அலர்றே... என்னாச்சு? தீர விசாரிக்காம ஒரு புதைகுழியிலே நாம விழுந்துட்டோமா? விவரமா சொல்லுடா"– காவ்யாவை நெட்டித் தள்ளிக்கொண்டு அறைக்குள் புகுந்தாள் கங்கம்மாள்.

## 16

காவ்யாவின் கைகள் இரண்டும் பனிக்கட்டியாய் சில்லிட்டன. சூறாவளியில் சிக்குண்ட மலரிதழ்களாய்... கைவிரல்கள் நடுங்கின.

பதற்றமாய் அந்தக் கடிதத்தைப் பிடித்து, பார்வையை ஓட்டினாள்.

நீர்த் திரையிட்ட விழிகள் பார்வையை மங்கலாக்கின. விம்மலை அடக்கியபடி ஒருவழியாக வாசித்துவிட்டு நிமிர்ந்தாள்.

"இது சுத்தப்பொய்... அபாண்டம். வீணா என் மேல பழி சுமத்தி இருக்காங்க. தயவுசெய்து இதை நம்பாதீங்க."

"யாரு அந்த மாதவன்?"

"எங்க அம்மாவோட நெருங்கின சிநேகிதி கற்பகம் அம்மா. அவங்களோட மகன். பக்கத்து வீட்டுக்காரங்க– பல வருஷங்களா ஒண்ணாப் பழகினவங்க. கல்யாணத்துக்கு வந்து நம்மை வாழ்த்தினாங்களே? எங்களுக்குள்ள உண்மையான நட்பு மட்டும்தான் இருக்கு..."

"ஓ... மொட்டைக் கடிதத்துலே இருப்பதில் பாதி உண்மைதானே? மீதியை நீ மறைக்கிறே...? எங்களுக்குள்ளே எதுவும் இல்லைன்னு நீ சொல்லிட்டா ஆச்சா? ஊரே காறித் துப்பும்படி பல இடங்களில் ஒண்ணா சுத்தி இருக்கீங்க?

மாதவனோட தாலி கட்டாத பொண்டாட்டியா இருந்தியா? நந்தவனத்துக்கும், குளத்தங்கரைக்கும் போவீங்களா?"

"ஐயோ! நாங்க ரெண்டு பேர் மட்டும் தனியாக போனதில்லை. கூடவே பவ்யா வருவா. இல்லைன்னா மாதவனோட அம்மா வருவாங்க. 'வாக்கிங்' போனா உடம்புக்கு நல்லதுன்னு நாங்க வற்புறுத்தி அழைச்சுட்டுப் போவோம். அதான் நிஜம்!"

"டேய் வசந்த்! இவ கையில போட்டிருக்காளே வளையல்... எவ்ளோ கனிசமா இருக்கு பாரு? இதை அந்த கற்பகம் அன்பளிப்பா கொடுத்தாளாம்டா... நம்ப முடியுதா? மூணு, நாலு பவுனுக்கு வளையல் செஞ்சு போட்டிருக்காளே? இதுக்குப் பின்னாடி பெரிய அசிங்கமே இருக்கு"– கங்கம்மாள் தன் மகனுக்கு கொம்பு சீவிவிட்டாள்.

"ஐயோ! இது அபாண்டம் அத்தே! பகவானுக்கே அடுக்காது. எவனோ வேண்டாத ஒருத்தன் இந்தக் காரியத்தை செய்திருக்கான். ஒரு மொட்டைக் கடிதாசியை நம்பி, இந்த வீட்டுக்கு வாழ வந்த என்னோட நெஞ்சில நெருப்பை அள்ளிக் கொட்டாதீங்க... நான் ஒரு பாவமும் அறியாதவள்.

மாதவன் ரொம்ப கண்ணியமானவன். அவன் சுண்டுவிரல்கூட என் மேல பட்டதில்லை. இது சத்தியம் அத்தே! நீங்களும் ஒரு பெண்ணைப் பெத்தவங்க. இவர் குடிச்சிட்டு வந்து நியாய தர்மம் இல்லாம பேசறாருன்னா... நீங்களும் இதை நம்பலாமா? நீங்க எனக்கு ஆதரவா இருக்கணும். அவருக்கு எடுத்துச் சொல்லணும்" கேவியபடி மண்டியிட்டு அமர்ந்து மாமியாரின் முழங்கால்களைப் பற்றிக்கொண்டாள்.

"ச்சீ... தள்ளிப் போ! டேய்... வசந்த்! இவ என்ன பேச்சு பேசறா பார்த்தியா? மாதவன் உத்தமனாம். ஆனா, நீ குடிகாரனாம். குடிச்சிட்டு வந்து நியாய தர்மம் இல்லாம பேசுறியாம். என்ன சொல்றா பார்த்தியா?"

"அதான் பார்த்துட்டே இருக்கேனே? அந்தக் கடிதத்துல அவன் தெளிவா எழுதி இருக்கானே? உன் புது மனைவிகிட்ட மாதவனைப் பத்திக் கேட்டுப்பாரு... அப்படியே உருகி மருகிடுவாள்னு... அதே மாதிரிதானே பேசறா?

புனிதம்னு நெனைச்சு இறங்கிட்டோம். ஆனா, இது பெரிய சாக்கடைன்னு இப்பத்தானே தெரியுது? ஒழுக்கமான பொண்ணைப் பெத்துட்ட மாதிரி இவளோட அம்மா கிராக்கி பண்ணினாளே? கோவில்லே உதவுகிற மாதிரி நாடகமாடி, நான் மெனக்கெட்டேனே?

நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி நாலு கேள்வி கேட்கப் போறேன். 'ஒழுக்கம் கெட்டப் பொண்ணை என் தலையில ஏன் கட்டினீங்க?'ன்னு வீட்டு வாசல் முன்னாடி நின்று கேட்கிறேன். கத்தி அசிங்கப்படுத்தினாத்தான் என் மனசு ஆறும்..."– வெறிகொண்டவனைப் போல் உரத்த குரலில் கத்தினான் வசந்த்.

"அ... அப்படியெல்லாம் எதுவும் செஞ்சுடாதீங்க அத்தான். எங்க அம்மா உடம்புக்கு முடியாதவங்க. மான அவமானத்துக்கு ரொம்ப அஞ்சுவாங்க. நீங்க அசிங்கப்படுத்தினா... அடுத்த நிமிஷமே உயிரை விட்டுருவாங்க.

ஒரு மொட்டைக் கடிதத்துக்கு தர்ற மரியாதையை... உங்க மனைவிக்கு தரமாட்டீங்களா? என்னை நம்பமாட்டீங்களா? நீங்க படிச்சவங்க, நாலும் தெரிஞ்சவங்க. என்னைப் பார்த்தா அப்படிப்பட்ட பொண்ணு மாதிரியா தெரியுது?"

"உங்க அம்மாகிட்டே நான் எதையும் கேட்காம இருக்கணும்னா... நான் சொல்றபடி நீ நடக்கணும். எதிர்த்துப் பேசினா இன்னும் அசிங்கப்படுத்திட்டு... 'காலத்துக்கும் உங்க பொண்ணை வாழாவெட்டியா வச்சுக்கோங்க'ன்னு உன்னை உங்க அம்மாகிட்டே விட்டுட்டு வந்துடுவேன்..."

"இல்ல... நான் நீங்க சொல்றபடி கேட்கிறேன். பழிச்சொல்லை சுமந்துக்கிட்டு எங்க அம்மா வீட்ல வாழாவெட்டியா உட்கார தயாரா இல்லை. நான் சுத்தமானவள்னு நீங்க இன்னிக்கு இல்லாட்டியும் என்னிக்காவது புரிஞ்சுப்பீங்க. அதுவரைக்கும்





காத்திட்டிருப்பேன். ஆங்... இப்பத்தான் எனக்கு ஒண்ணு தோணுது. உங்க சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறதுக்கு ஒரே ஒரு வழி இருக்கு. நான் களங்கம் இல்லாதவள்னு நிரூபிப்பதற்கு... அதுதான் சரியா இருக்கும்.

நீங்க எந்த ஆஸ்பத்திரிக்கு கூப்பிட்டாலும் நான் வரத் தயார். 'டெஸ்ட்' எடுத்துடலாம். நான் இன்னும் கன்னிப் பொண்ணுதான்னு தெரியவரும். இந்தப் பிரச்சினைக்கு உடனடியா ஒரு முற்றுப்புள்ளி வச்சுடலாம் இல்லியா? நாளைக்கே நாம ஆஸ்பத்திரிக்குப் போலாம். என்ன சொல்றீங்க?"

வசந்திற்கு பகீர் என்றிருந்தது.

'பரிசோதனைக்குச் சென்றால்... இவள் பரிசுத்தமானவள் என்று நிரூபணம் ஆகிவிடுமே? கிடைத்த துருப்புச்சீட்டு வீணாகிவிடுமே? இப்போது இவள் என் பிடியில் இருக்கிறாள். விட்டுவிட்டால் பிடிக்க முடியாமல் ஆகிவிடுமே? என் குட்டு வெளிப்பட்டுவிடுமே?'- மனதுக்குள் திருதிருத்தான்.

'நான் இன்னும் கன்னிப்பெண்தான்' என்று காவ்யா கூறியதும், கங்கம்மாவுக்கு 'சுரீர்' என்றிருந்தது.

"கல்யாணம் பண்ணி வச்சோம். வீட்டுக்கு விளக்கேத்த மருமக வந்துட்டாங்கற நிம்மதி இல்லாம... என்ன பொழைப்புடா இது? கண்ட கண்ட கண்றாவியை காது கொடுத்துக் கேட்க வேண்டியது இருக்கு. எல்லாம் என் தலையெழுத்து"- என்று புலம்பிவிட்டு நைசாக அறையைவிட்டு வெளியேறினாள்.

கையாலாகாத தனது செயல் மீது வசந்துக்கு கோபம் கோபமாக வந்தது.

"சொல்லுங்க அத்தான்! நாளைக்கே போயிடலாம்... இதனால உங்களுக்கும் திருப்தி, எனக்கும் நிம்மதி கிடைக்கும் இல்லையா?"- அவள் பேசப் பேச அவனுக்குள் எரிமலை பொங்கியது.

குடிபோதையும், வெறியும் அவனது கண்களை மறைத்தன. மிருகத்தனமாய் அவளை நெருங்கியவன், ஓங்கி அறைந்தான்.

காவ்யாவின் கன்னம் ரத்தமாய் கன்றிச் சிவந்து, ஜிவுஜிவு என்று எரிந்தது.

## 17

'இது கனவாக இருந்தால் நன்றாக இருக்குமே... ஒருவேளை நிஜம்தானா?'

திருமணமாகி இந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைத்து முழுதாக ஒரு வாரம்கூட ஆகவில்லை. அதற்குள் யாராவது கைநீட்டி அடிப்பார்களா?

போயிற்று... எல்லாமே போய்விட்டது? நாங்கள் நம்பி ஏமாந்துவிட்டோமே?

என் அம்மாவுக்கு உதவுவது போல் நாடகமாடி இருக்கிறார். அது தெரியாமல் மாப்பிள்ளையைப் பற்றி நொடிக்கு ஒருதரம் சொல்லிச் சொல்லி சிலாகித்தாளே? அத்தனையும் வேஷம் என்று தெரிந்தால் தாங்கிக்கொள்வாளா?

அம்மாவின் மனதில் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தி ஏமாற்றி இருக்கிறார்கள். எதற்கு இந்த வேலை? இதில் ஏதோ தவறு இருக்கிறது. எதையோ மறைத்து நல்லவர்களைப் போல் தங்களை காட்டுவதற்காக ஒட்டுமொத்தக் குடும்பமே சதி செய்திருக்கிறது.

'குடிப்பழக்கம், சந்தேகப் புத்தி இருக்கிறது. கைநீட்டி அடித்தும்விட்டார். இன்னும் என்ன பாக்கி இருக்கிறது? 'பிறந்த வீட்டிற்குச் சென்று உன் அம்மாவையும் அவமானப்படுத்துவேன்' என்கிறாரே?

மனதால்கூட யாருக்கும் நான் கெடுதல் நினைத்ததில்லையே? எனக்குப் போய் இப்படியொரு வாழ்க்கை அமைந்துவிட்டதே? திருமணம் என்றதும் முதலில் மறுத்தேன். அம்மாவின் வற்புறுத்தலுக்காகத்தானே சம்மதித்தேன்.

திருமணம் நிச்சயமானதும் நானும் சராசரிப் பெண்களைப் போல நூறாயிரம் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தேனே?என்



கற்பனைக்கோட்டை சரிந்துவிட்டதே!'– அவமானத்திலும், அதிர்ச்சியிலும் கண்ணீர் பொங்கி வழிந்தது.

கீழுதட்டை அழுந்தக் கடித்து விம்மலை அடக்கினாள். வேதனையில் துவண்டாள்.

"என்ன தைரியம் உனக்கு? முதலிரவுலே நாம முடிவெடுத்த விஷயத்தை எக்காரணம் கொண்டும் பெரியவங்களுக்குத் தெரியப்படுத்தாதேன்னு நான் சொன்னதை மறந்துட்டியா? சொல்லு... வாயைத் திறந்து பதில் சொல்லப் போறியா... இல்லையா?"

"நான்... நா... உங்க... வா... வார்த்தையை மீறவே இல்லையே? நமக்குள் எடுத்த முடிவை அத்தை முன்னாடி சொல்லணுங்கிறது என் நோக்கம் இல்ல... அதை நீங்க புரிஞ்சுக்கணும்."

"எதுவா இருந்ததாலும் நம்ம வீட்டுல நடக்கிற சமாசாரங்களைப் பத்தி உங்க அம்மாகிட்ட மூச்சு விட்டுடாதே. இதனால வயசுக்கு வந்த உன்னோட தங்கச்சி எதிர்காலம்தான் கேள்விக்குறியாகும்.

எல்லாத்தையும் நிதானமாக யோசிச்சுப் பாரு. 'டெஸ்ட் எடுக்கப் போகலாமா?'ன்னு கேட்கறியே? உனக்கு எவ்ளோ திமிர் இருக்கணும்?

'இவ என் அருமைப் பொண்டாட்டி. சுத்தமானவளா? இல்லையா?ன்னு நான் தெரிஞ்சுக்கணும்'னு டாக்டர் முன்னாடி என்னை நிக்கச் சொல்றியா? இது எவ்ளோ கேவலம் தெரியுமா?

"ஆபீசுக்குப் போனோமா... வந்தோமான்னு இருக்கணும். எனக்குத் தெரியாம உங்க வீட்டுக்கு போன் பண்ணி கண்ணைக் கசக்கிட்டு... இங்கே நடந்ததை நீ சொன்னா நஷ்டம் உனக்குத்தான்.நிரந்தரமா உன் அம்மா வீட்டோட உட்கார்ந்துட வேண்டியதுதான்! ஆபீஸ்லே அந்த மாதவன்கூட நல்லா கொட்டம் அடிக்கலாம்னு நெனச்சுடாதே... அடங்கி ஒடுங்கி நடக்கக் கத்துக்க.

நீ இப்போ என் மனைவி! அதை நல்லா நெனப்புல வச்சுக்க. உன் நடவடிக்கைகளை கண்காணிச்சு சொல்றதுக்கு

ஒரு ஆள் இருக்கான்... விலாவாரியா மறுபடியும் கடிதம் போட்டுருவான்.

தெரிஞ்சோ தெரியாமலோ உனக்கு தாலி கட்டிட்டேன். எங்களுக்குன்னு ஒரு கவுரவம் இருக்கு. அது பாதிக்கும்படியா நீ நடந்துக்கிட்டா நான் ரொம்பப் பொல்லாதவன் ஆயிடுவேன்... ஜாக்கிரதை"– என்றான்.

அதைக்கேட்டு விக்கித்துப் போய் நின்றாள் காவ்யா.

'இவரது முகத்தைப் பார்த்தால்... கோபத்தைத் தாண்டி சின்னதாய் ஒரு சந்தோஷம் தெரிகிறதே? இந்தக் கடிதம் வந்ததை நினைத்து உள்ளூர ஆனந்தப்படுவது போல் இருக்கிறதே?'– என கணித்தாள் காவ்யா.

அவளை உறுத்துப் பார்த்தான் வசந்த். "நான் பேசிக்கிட்டே இருக்கேன். நீ திமிரா நிக்கிறியே? உனக்கு படிச்ச தெம்புடி... வாயைத் திறந்து பதில் பேசமாட்டியா?"

அவளது கூந்தலை இறுகப் பற்றி வெடுக்கென்று இழுத்தான்.

"ஸ்... ஆ..." சுரீரென்ற வலி தாளாமல் இரு கைகளாலும் உச்சந்தலையைப் பற்றிக்கொண்டாள்.

"வலிக்குதுல்ல...? இதேமாதிரிதான் எனக்கும். பார்த்து... புத்திசாலித்தனமா நடந்துக்கோ. இல்லேன்னா நான் மனுஷனாவே இருக்கமாட்டேன். உன்னை வெட்டிக் கூறு போடக்கூட தயங்கமாட்டேன்"– சுட்டு விரலை நீட்டி எச்சரித்தான்.

'இப்ப மட்டும் மனுஷனாவா நடந்துக்கிறீங்க?'– கேட்கத் துடித்த நாக்கை சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

மவுனமாய் கண்ணீர் வடித்தாள் காவ்யா.

## 18

திருமணமாகி ஆறு மாதங்கள் உருண்டிருந்தன. அதற்குள் ஆறு ஆண்டுகள் கழிந்துவிட்ட மலைப்பு தோன்றியது காவ்யாவுக்கு!



அவளை மாதம் இரு முறை பிறந்தகம் அழைத்துச் செல்வான் வசந்த். செயற்கையாய் புன்னகைத்து அளவளாவிவிட்டு, ஒப்புக்கு சாப்பிடுவான். அரை மணி நேரத்திற்குள் தொண்டை கமறுவது போல் மெல்ல இருமுவான். சட்டென்று அந்தக் குறிப்பை புரிந்துகொள்வாள் காவ்யா.

"அம்மா! நாங்க கிளம்பறோம்"– என விடைபெற்றுச் செல்வாள். துக்கம் தொண்டையை அடைக்கும்.

திருமணமானதும் கணவனின் அனுமதியுடன் தனது சம்பளத்தில் பாதியை அம்மா கையில் தந்துவிட ஆசைப்பட்டாள்.

'அம்மா அரும்பாடுபட்டு என்னை ஆளாக்கி இருக்காங்க. காலம் முழுக்க உழைச்சு தேய்ஞ்சு போயிட்டாங்க. இப்போ நான் தலையெடுத்துட்டேன். நான்தானே மூத்த மகள். குடும்பத்தைக் காப்பாத்த வேண்டியது என் கடமை இல்லையா? நீங்க இதுக்கு சம்மதிப்பீங்கன்னு நம்பறேன். 'உங்களுக்கு நான் மருமகன் இல்ல... மகன்'னு நீங்க அன்னிக்கு எங்க அம்மாகிட்ட சொன்னீங்களே? அதை நான் மறக்கலை...' என்று வசந்திடம் கனிவாகப் பேசி அவனது சம்மதத்தைப் பெற காத்திருந்தாள் காவ்யா.

மொட்டைக் கடிதம் வந்து ஒட்டுமொத்தக் காரியத்தையே கெடுத்துவிட்டது.

அதற்குமேல் இந்தப் பேச்செடுக்கவே அவளுக்கு திராணியில்லை.

பிடித்தம் போக கிடைக்கும் சம்பளப் பணத்தை அப்படியே வாங்கிக்கொள்வாள் கங்கம்மாள்.

காய்கறி மற்றும் இதர செலவுகளுக்கு கையேந்திதான் நிற்க வேண்டும்.

அம்மா அபிராமிக்கு மருத்துவச் செலவு அதிகரித்திருந்தது. அதை சமாளிப்பதற்குள் விழி பிதுங்கித்தான் போனது.

மீண்டும் சுயதொழிலில் இறங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

போனில் இதை கூறியபோது... துடித்துப் போனாள்

காவ்யா.

"இந்த வயசுல உழைக்கணும்னு சொல்றியேம்மா? உன் உடம்பு பாதியா போச்சு தெரியுமா?"– தழுதழுத்தாள்.

"என்னம்மா செய்யறது? இடையில உன் சம்பளம் வந்ததால... நீயும் வற்புறுத்தினதால கொஞ்சம் ஓய்வா இருந்துட்டேன். இன்னும் கொஞ்ச காலத்துக்கு என் உடம்புல தெம்பு இருக்கிற வரை உழைச்சுட்டுப் போறேன்."

"அவருகிட்டேயும், அத்தைகிட்டேயும் பேசி... என்னோட சம்பளத்துல இருந்து..."

"இல்ல காவ்யா! எப்போ உன்னைக் கட்டிக் கொடுத்தாச்சோ... நீ அவங்க வீட்டுப் பொண்ணாயிட்டே. மாப்பிள்ளை கல்யாணத்துக்கு முன்னாடி பேசினதுக்கும், இப்ப நடந்துக்கிறதுக்கும் ரொம்ப வித்தியாசம் தெரியுது. எங்களுக்கு அது எவ்ளோ வருத்தமா இருக்கு தெரியுமா? சரி! காலப்போக்குல ஒரு மாற்றம் வரும்னு நம்பிட்டு இருக்கோம்.

நீ ஏன்ம்மா இப்படி கறுத்து, கன்னமெல்லாம் வத்தி மெலிஞ்சி போயிட்டே? மனசுவிட்டு ஒண்ணுமே சொல்லமாட்டேங்கற? மாப்பிள்ளை உன்னை சந்தோஷமாக வச்சிருக்காரா... இல்லையா? சீர்செனத்தியில குறை வச்சுட்டோம்னு நெனக்கிறாங்களா காவ்யா?

உங்க மாமியார் உன்கிட்ட அன்பாக நடந்துக்கிறாங்களா? எதுவா இருந்தாலும் சொல்லும்மா. வீட்டுக்கு வந்தாலும் மாப்பிள்ளை பக்கத்துல இருக்கறதால... நீ எதையும் சொல்றதில்லை.

நான் அவசரப்பட்டு தப்பான முடிவு எடுத்துட்டேனா? எனக்கு இரவெல்லாம் தூக்கமே வரமாட்டேங்குது. அம்மாகிட்ட எதையும் மறைக்காதே! உண்மையைச் சொல்லும்மா."

பெற்றவளிடம் மனதில் உள்ளதையெல்லாம் கொட்டிக் கதற வேண்டும் போலிருந்தது.

'வேண்டாம். அம்மா தாங்கமாட்டாள். அது மட்டுமா? பவ்யாவின் எதிர்காலமும் பாதிக்கக்கூடாது...' என்று சகலத்தையும்



மனதிற்குள் புதைத்துக்கொண்டாள் காவ்யா.

"நான் நல்லாத்தான் இருக்கேன்ம்மா! எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. நீ ஏன் மனசைப் போட்டு குழப்பிக்கிறே?" என்றாள்.

கணவனின் சித்திரவதை ஒரு பக்கம், பிறந்த வீட்டு கவலை மறுபக்கமாய் அவளைப் பிடுங்கித் தின்றன.

இரவில் தனக்குத்தானே புலம்பியபடி தலையணை நனையும் வண்ணம் வெகுநேரம் அழுது தீர்த்தாள் காவ்யா.

## 19

வெளிநாட்டு பணி முடிந்ததும் பெங்களூர் கிளையில் வேலைக்குச் சேர்ந்த மாதவன், இரு மாதங்களுக்கு ஒரு முறை பெற்றோரைப் பார்த்துவிட்டு பறந்துவிடுவான்.

அப்பா சிவகுருநாதன் குளியலறையில் வழுக்கி விழுந்து கால் முறிந்துவிட்டது என்று கேள்விப்பட்டதும் அவனது மனம் கரைந்துவிட்டது.

சென்னை அலுவலகத்திற்கே மாற்றல் வாங்கி வந்தான். பல மாதங்களுக்குப் பிறகு காவ்யாவைக் கண்டதும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அலுவலகம் சம்பந்தப்பட்ட பேச்சைத் தவிர வேறு எதற்கும் காவ்யா வாயே திறக்கவில்லை. நேருக்கு நேர் ஏறிட்டுகூடப் பாராமல் தவிர்த்தாள்.

உரிமையாய் விசாரிப்பதற்கு இவனது மனம் துடித்தாலும், ஏதோ ஒன்று தடுத்தது.

"அவ புகுந்த வீட்டுல பெரிய பிரச்சினை இருக்குன்னு எனக்குப் படுது மாதவா. தாய் வீட்டுக்கு வந்தாலும் கால்லே வெந்நீர் ஊத்திக்காத குறையாக ஓடிப் போயிடறாள்னு அபிராமி வேதனைப்படறா. மனசுவிட்டு எதையும் சொல்ல மாட்டேங்கிறாளாம். நம்ம வீட்டுக்கு காவ்யா இத்தனை மாசத்துல ஒரு தடவைகூட எட்டிக்கூட பார்க்கலைடா.

## தெய்வ வடிவம்...

வெற்றிலை தளிருடல்
விழிகரு வண்டுகள்
முற்றிய தீங்கனி
முழுமதி ஒளிமுகம்

அமுதினை தோய்த்து
ஆக்கியச் சித்திரம்

யாழ் நரம்பின்
நல்லிசை நாதம்
ஆழ்கடல் தோன்றும்
அழகிய முத்து

கன்னல் சாரு
கனியுமிழ் செந்தேன்
மின்னலில் நெய்த
மெல்லிய பூந்துகில்

ஈரைந்து மாதம்
இயற்றிய தவப்பயன்
சீரார்ந்த குழந்தை
தெய்வத்தின் வடிவம்

*– சித்தமல்லி ஜெகந்நாதன்,*
*ஒரத்தூர்.*





கடைசியில அவளும் சுகப்படலை. நீயும் சந்தோஷமா இல்ல. காவ்யா ஒரு பொக்கிஷம்டா. காலாகாலத்துல நான் பேசி இருக்கணும். அபிராமி என் சிநேகிதிதானே! மெதுவா பேசி முடிக்கலாம்னு அசட்டையா இருந்துட்டேன். அது மகா தப்புன்னு இப்ப புரியுது. கண்ணை மூடித் திறக்கிறதுக்குள்ளே விதி விளையாடி... அந்தப் பொக்கிஷத்தை தவற விட்டுட்டோம். காவ்யாவை மருமகளா அடைய அவங்க குடுத்து வச்சிருக்கணும். அவளோட அருமையை அவங்க உணரலை போலிருக்கு..." மகனிடம் புலம்பித் தீர்த்தாள் கற்பகம்.

தாங்க முடியாத மாதவன் பக்கத்து வீட்டிற்குள் நுழைந்தாள். கூடத்திலும், வராந்தாவிலும் ஐந்தாறு பெண்கள் பழையபடி வேலை செய்துகொண்டிருந்தனர்.

"அடடே... வாப்பா மாதவா! வா, உட்காருப்பா"– உபசரித்த அபிராமியின் விழிகளில் கண்ணீர் தளும்பியது.

"காவ்யாவைப் பத்தி... அம்மா சொன்னாங்க."

"இந்தப் பொண்ணு எதுக்காக பெத்த தாய்கிட்ட மறைக்கிறாள்னு ஒண்ணும் புரியலைப்பா! அவ ஏதோ கஷ்டத்துல இருக்கா... அது மட்டும் நிச்சயம். நான் அவசரப்பட்டுட்டேனான்னு மனசாட்சி அறுக்குது மாதவா."

"அவ படிச்சவ, புத்திசாலி! இன்னும் எதையும் சொல்லாததுக்கு ஏதாச்சும் காரணம் இருக்கும். நீங்க தைரியமா இருங்க. பகவான் மேல பாரத்தைப் போடுங்க. அதை மீறி எதுவும் நடக்காது"– ஒப்புக்கு ஆறுதல் கூறினானே தவிர... உள்ளூர பொடிப் பொடியாக உடைந்தான் மாதவன்.

**கு**ங்கம்மாள் அதிகார சாட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு காவ்யாவைப் பம்பரமாக சுழல வைத்தாள்.

நாத்தனார் உமா தன் பங்குக்கு காவ்யாவை சக்கையாய் பிழிந்தாள். மைத்துனன் ஆனந்தும் அண்ணிக்கு தொந்தரவுகள் கொடுத்தான்.

"ஆமா... நானும் பார்க்கிறேன். நீ சீவி சிங்காரிச்சுக்கிட்டுப்

போறதைப் பார்த்தா வேலைக்குப் போறவ மாதிரி தெரியலையே? அந்த மாதவனை பார்க்கணும்னுதானே இப்படிப் போறே?" கங்கம்மாள் அவ்வப்போது இப்படித்தான் அனல் கங்குகளைக் கக்கினாள்.

காவ்யாவுக்கு உடம்பெல்லாம் தீப்பற்றியது போலிருக்கும்.

அவளது உடம்பு நாளுக்கு நாள் பலவீனமடைந்தது.

அன்றிரவு வழக்கம் போல் வசந்த் குடித்துவிட்டுத்தான் வந்திருந்தான். ஆனால், பத்து நாட்களாக அவனிடம் ஒரு மாற்றம் தெரிந்தது. சதா வார்த்தைகளால் இம்சை செய்து சந்தேகப் பார்வையால் துளைத்தெடுப்பவன்– இப்போது கனிவாய் பார்க்கத் தொடங்கினான்.

'எட்டு மாதங்களாய் குட்டக் குட்டக் குனிந்து பொறுமையாய் இருந்ததற்கு பலன் கிட்டப் போகிறதோ?'– காவ்யாவுக்குள் சின்னதாய் ஒரு எதிர்பார்ப்பு.

"குட்நைட் காவ்யா" இதமாய் முறுவலித்துவிட்டு, கட்டிலில் படுத்தவன் உடனே குறட்டைவிட ஆரம்பித்தான்.

வெகுநேரம் தூங்காமல் விழித்திருந்த காவ்யாவுக்கு வசந்தின் உளறல் அதிர்ச்சியைத் தந்தது.

"இல்ல... என்கிட்ட இருக்கிற குறையைக் காவ்யாவால கண்டுபிடிக்கவே முடியாத வார்த்தை ஜாலத்தாலே நான் சமாளிச்சுட்டேன். அந்த மொட்டைக் கடிதாசி வந்தது நல்லதாய்ப் போச்சு! அதை துருப்புச்சீட்டா வச்சு அவளை அடிமையாக்கிட்டேன்.

'உனக்கு தேவதை மாதிரி மனைவி வாய்ச்சிருக்கா... நீ அதிர்ஷ்டக்காரன்டா'ன்னு என் நண்பர்கள் சொல்றாங்க. அது வாஸ்தவம்தான். ஆனா, அத்தனை அழகு இருந்து எனக்கு என்ன பிரயோஜனம்னு ரொம்ப வேதனைப்பட்டேன். இப்ப அந்த அழகை வச்சு வாழ்க்கையை வளமாக்கப் போறேன். உமா கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்தப் போறேன்..."– அசுரன் போல் நகைத்தான்.



அந்த வார்த்தைகளைக் கேட்டதும்... தலையில் இடி இறங்கியது போலிருந்தது காவ்யாவுக்கு. அதிர்ச்சியில் அவளது நாடி நரம்புகள் தந்தியடிக்க ஆரம்பித்தன

## 20

உலகமே தட்டாமாலையாக சுழன்றது.

'என்ன சூழ்ச்சி நடக்கிறது? மொட்டைக் கடிதத்தை துருப்புச்சீட்டாக உபயோகிக்கிறாரா? 'வார்த்தை ஜாலத்தாலே சமாளிச்சுட்டேன்' என்றாரே... அதற்கு என்ன அர்த்தம்? 'அவளது அழகு இருந்து எனக்கு என்ன பிரயோஜனம்?' என்றாரே, கடவுளே! ஒருவேளை அப்படி இருக்குமா?

அப்படியானால், 'அழகை மூலதனமா வச்சு வாழ்வை வளமாக்குகிறேன் என்று சொன்னதற்கு என்ன அர்த்தம்? போதையில் ஏடாகூடமாக உளறிக் கொட்டுகிறாரா? ஊகூம்! இவர் பேசுவதைப் பார்த்தால்– அது சாதாரண உளறலாகப்படவில்லை.

திருமணமாகி ஒன்பது மாதங்களாகப் போகிறது. இதுவரை அவர் என்னிடம் கணவன் என்ற உரிமையை எடுத்துக்கொள்ளவில்லையே? இது நிஜம் என்றால்... இவர் இப்போது உளறியதும் உண்மையாகத்தானே இருக்கும்?

தன்னிடம் இருக்கும் மிகப்பெரிய குறையை மறைக்கத்தான் என் மீது அபாண்டத்தைச் சுமத்தி சித்திரவதை செய்து... குளிர்காய்கிறாரா?

அது என்ன குறை என்பதை தெரிந்துகொள்ள வேண்டுமே? அதன்பின்தான் நான் தலை நிமிர்ந்து நியாயம் கேட்க முடியும்! பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு அல்லவா?– கண்ணோரங்களில் கசிந்த நீரை... புறங்கையால் துடைத்துக்கொண்டு, நீண்ட கூந்தலை வாரிச் சுருட்டிக் கொண்டை இட்டுக்கொண்டாள்.

எழுந்து விளக்கை எரியவிட்டாள். கணவனை உற்றுப்

பார்த்தாள். 'இதைவிட்டால் வேறொரு சந்தர்ப்பம் வாய்க்காது' என்று தோன்ற... அவனது அலமாரியைக் குடைந்தாள். பீரோ முழுவதும் பார்வையால் அலசினாள்.

நம்பிக்கையை கைவிடாமல் கடைசியாக அவனது மேசை டிராயரைத் துழாவியபோது... அந்தக் கோப்பு அகப்பட்டது.

'இது என்ன? ஏதோ மருத்துவ அறிக்கை மாதிரி இருக்கே?' – அவசர அவசரமாய் அதில் பார்வையை ஓடவிட்டாள். பின் திகைத்து நின்றாள்.

'அய்யோ! இது என்ன கொடுமை? இப்படியொரு உண்மையை மறைத்து கல்யாணத்தை நடத்த... இவர்களுக்கு என்ன துணிச்சல் இருக்க வேண்டும்?

கடந்த முறை வீட்டிற்குப் போனபோதுகூட அம்மா ஆவலாய் விசாரித்தாளே? 'காவ்யா! ஏதாவது விசேஷமாடா?' என்றாளே! நான் மறுப்பாய் தலை அசைத்ததும்... 'காலாகாலத்துல ஒரு பேரக் குழந்தையை கண்ணுல காட்டேன் ராஜாத்தி' என்று ஏக்கமாய் கூறினாளே?

'உனக்கு குழந்தைன்னா உசுராச்சே காவ்யா?' என்று அம்மா கேட்டபோது... 'ஆமாம்மா! நம்ம கையில என்ன இருக்கு? எப்ப கிடைக்கும்னு பிராப்தம் இருக்கோ... அப்பத்தானே கிடைக்கும்' என்று சமாளித்தேனே?

'ஒரு பெண் தாய்மை அடையும்போதுதான் பிறவியின் முழு பலனை அடைகிறாள்' என்கிறார்களே? அது மிகப்பெரிய வரம் அல்லவா? நான் என்ன பாவம் செய்தேன்?

'அம்மா...! எனக்கு அடி மேல் அடியாக விழுகிறதே? மனதிற்குள்ளேயே புழுங்கிப் புழுங்கி நான் செத்துவிடுவேன் போலிருக்கிறதே?'– அந்தக் காகிதங்களை மெல்ல உருவி... தனது 'ஹேண்ட் பேக்'கில் திணித்தாள்.

பத்து நாட்களுக்கு முன்... 'எங்க புது முதலாளி பொறுப்பேத்துக்கப் போறாரு. ஆபீஸ்ல பெரிய விருந்து தர்றாரு. குடும்பத்தோட வந்து கலந்துக்கச் சொன்னாரு. நீ அம்சமா கிளம்பு" என்று 'பைக்'கில் கூட்டிச்சென்றான்.



முதலாளியிடம் அவளை அறிமுகப்படுத்தினான். 'காவ்யா! இவர்தான் எங்க பாஸ். மிஸ்டர் நரேந்திரன்சார். வணக்கம் தெரிவிச்சுக்கோ.'

அவன் விழுங்குவது போல் பார்த்துவிட்டு, கைகுலுக்க கரத்தை நீட்டினான்.

இவள் மவுனமாய் கைகுவித்துவிட்டு, பார்வையை தழைத்துக்கொண்டாள்.

அவன் தன்னையே அளவெடுத்ததை உணர்ந்தவளுக்கு தணலின் மேல் நிற்பதைப் போன்ற தவிப்புதான் ஏற்பட்டது.

அதற்கு மறுநாளிலிருந்துதான் கணவனிடம் மாறுதல் தென்பட்டது. அடிக்கடி புன்னகைத்தான்.

இதுவரை 'நீ சாப்பிட்டாச்சா?' என்று கேட்காமல் இருந்தவன்... இப்போது அக்கறையாய்... "சாப்பிட்டு வேலையைப் பாரேன் காவ்யா! உட்காரு... நீயும் எங்கக்கூடவே சாப்பிடேன்" என்று வற்புறுத்தினான்.

அனுசரணையான வார்த்தைகளை அதிசயமாய் கேட்கும்போது... அதுவரை கனன்ற மனதில் சில்லென்ற பாலை வார்த்தது போல் இதமாக இருந்தது நிஜம்!

'இப்போது இவர் உளறிக்கொட்டுவதைப் பார்ப்பதால்...? ஒருவேளை அப்படி இருக்குமோ? ஐயோ... இதென்ன அதர்மம்? இதற்கு மேலும் எனக்குத் தீங்கு செய்ய நினைத்தால்... தட்டிக் கேட்க வேண்டியதுதான். ஒரு சின்னப் புழுகூட தன்னை நசுக்குபவனை கடிக்கப் பார்க்குமே? இவர்களது அராஜகத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டாமா?

கடவுளே! நீதான் எனக்குப் பக்கத் துணையாக இருந்து அருள்புரியணும்.'

'ஹேண்ட் பேக்'கை பத்திரமாய் தன் பீரோவில் வைத்துப் பூட்டியவள், விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தாள். நெஞ்சை அடைத்த துன்ப உருண்டை அவளது கண்களில் இருந்து நீரை சொரிய வைத்தது.

வெகுநேரம் அழுதவள் தன்னை மறந்து ஒருவழியாகத்

தூங்கிப்போனாள்.

மேல் கூரையில் இருந்து ஊர்ந்து வந்து கால்மாட்டில் படத்தை விரித்துக்கொண்டு நின்ற பாம்பொன்று கொத்த வந்தபோது... காவ்யா வெடுக்கென்று காலை இழுத்துக்கொள்ள... பாம்பின் முகம்மாறி... வசந்த் நிற்பது போன்ற கனவு.

“ஐயோ... அம்மா!” அலறியபடி எழுந்து அமர்ந்தவள்... பயத்தில் சுற்றும் முற்றும் பார்த்தாள். குப்பென்று வியர்த்து தொப்பலாய் நனைந்தாள்.

மறுநாள் காலையில்... கால்களில் சக்கரத்தை மாட்டிக்கொள்ளாத குறையாக– பறந்து பறந்து வீட்டு வேலைகளை முடித்துவிட்டு தெருமுனையில் வந்து நின்ற ஆபீஸ் வேனில் ஏறி அலுவலகம் வந்தடைந்தாள்.

பெற்ற தாயிடமும் இதுவரை மறைத்தாகிவிட்டது. உற்ற நண்பன் மாதவனிடமும் மூச்சு விடவில்லை.

நேற்றிரவு கணவன் உளறிக் கொட்டிய வார்த்தைகள் அவளது இதயத்தை ரம்பமாய் அறுத்தன. மூச்சு முட்டுவது போலிருந்தது.

‘என்ன செய்யப் போகிறேன் நான்? அம்மாவிடம் சொல்லிவிடலாமா? அனைத்து விஷயங்களையும் கொட்டித் தீர்த்துவிட்டால் இனி அங்கு வாழமுடியாது. ஒரு வருடம் ஆவதற்குள் வாழாவெட்டியாய் பிறந்தகத்துக்குச் செல்ல வேண்டியதுதானா?

பவ்யாவின் எதிர்காலம் வேறு என்னை பயமுறுத்துகிறதே? சரி... என்னதான் நடக்கிறது என்று கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாமே!’ தனக்குள் தீர்மானித்துக்கொண்டவள்– மனதை அழுத்தியதை சிறு டைரியில் எழுத்தில் வடித்தாள்.

தன் வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருப்பது போல் போக்குக் காட்டிய மாதவன் அவ்வப்போது அவளையே நோட்டமிட்டான்.

அழுதழுது வீங்கிய முகம்– இமைகளையும், சிவந்து போயிருந்த கண்களையும் பார்த்து அவன் மிகவும் பரிதவித்துப்



போனான்.

காவ்யாவுக்கு இருப்பே கொள்ளவில்லை.

சர்வ ஜாக்கிரதையாக ‘ஹேண்ட் பேக்’கில் இருந்து மருத்துவ அறிக்கையை எடுத்து சிறு டைரிக்குள் மடித்து வைத்து– அதை பத்திரமாக மேசை டிராயரில் வைத்து மூடினாள்.

அவளது செல்போன் அலறியது.

திரையில் மின்னி மின்னிச் சிரித்த எண்களைப் பார்த்தாள். வசந்த்!

“ஹலோ” தயக்கத்துடன் பேசினாள்.

“காவ்யா... நான்தாம்மா பேசறேன்”– அவனது குரலில் ரகத்திற்கும் உற்சாகம் வழிந்தோடியது.

“சொல்லுங்க.”

“இன்னிக்கு நம்ம வீட்டுக்கு ரொம்ப முக்கியமான நபர் விருந்துக்கு வர்றாங்க. அவருக்கு நம்ம வீட்டுல இரவு விருந்து தந்து அசத்திடணும். அவர் மனசு வச்சா நம்மை எங்கேயோ உச்சத்திற்கு கொண்டு போய் விட்டுருவாரு காவ்யா! நீ ஆபீஸ்லே இருந்து மணைரைக்கு கிளம்பி வந்துடறியா? ‘பெர்மிஷன்’ போட்டுட்டு வந்துடு! நான் வந்து உன்னை ‘பிக்கப்’ பண்ணிக்கிறேன்.

ஆறரைக்குள்ளே ‘டின்னர்’ தயார் பண்ணி முடிச்சுடு. நீதான் மிஷத்துல பரபரன்னு காரியங்களை கவனிக்கிறவளாச்சே? ன்னோட நளபாகத்தைப் பார்த்துட்டு... அவர் அப்படியே அசந்துபோகப் போறாரு பாரேன். ஆங்... இன்னொரு ந்தோஷமான சேதி!

நம்ம உமாவுக்கு நல்ல வரன் ஒண்ணு தரகர் சொன்னாரு. னக்கும் அந்த இடம் பிடிச்சுப் போச்சு... சரி! அவளும் இன்னும் மாசத்துல பரீட்சை எழுதி முடிச்சுடுவா இல்லியா... உடனடியா ல்யாணத்தை வச்சுடணும். நமக்கும் பெரிய பாரம் இறங்கின ாதிரி இருக்கும். எல்லாம் நீ வந்த நேரம் காவ்யா... அம்மாவும் தைத்தான் சொன்னாங்கன்னா பார்த்துக்கோயேன்...”

‘என்ன நடிப்பு...? பசப்பான வார்த்தைகளைப் பிரயோகிப்பதில்

இல்லாடிதான்!'– தனக்குள் நொந்துகொண்டாள் காவ்யா.

அன்று மாலை, சொன்னது போல் வந்து நின்றான் வசந்த்.

தயக்கமாய் அவனுடன் 'பைக்'கில் சென்றாள் காவ்யா.

அலுவலகத்தைவிட்டு அவள் சென்றதும்... மாதவன் அந்த மேசை டிராயரைத் திறந்து– மெல்ல அந்த டைரியை எடுத்தான். அதைத் தூக்கும்போதே பொத்தென்று அந்த 'ரிப்போர்ட்' நழுவிக் கீழே விழுந்தது.

சட்டென்று குனிந்து எடுத்து வாசித்துப் பார்த்தவனின் முகம் ஏகத்திற்கும் இருண்டது. பதை பதைத்துப் போய் அவசரமாய் அந்த டைரியைப் புரட்டினான்.

தேவைப்பட்ட சாமான்களை வாங்கிக்கொண்டு கணவனுடன் வீட்டு வாசலில் வந்து இறங்கினாள் காவ்யா.

பரபரவென்று அவள் அடுக்களைக்குள் நுழைந்ததும்... கங்கம்மாள் முகம் வாடிப் போனவளாய் எட்டிப் பார்த்தாள்.

"எனக்கும் கார்த்தால இருந்து தலைவலி... தாங்க முடியலை. நீ வர்றவங்களை நல்லபடியா கவனிச்சுக்கோ. உமாவும், நானும் மாடி அறையில் இருக்கோம். அவ படிச்சுட்டிருப்பா. நான் கொஞ்சம் தைலத்தைத் தடவிக்கிட்டு தலை சாய்க்கிறேன். அவங்க வந்து போனதும் நாங்க வர்றோம்..."

பதிலுக்குக்கூட காத்திராமல் அம்மாவும், பொண்ணும் மாயமாய் மறைந்தார்கள்.

ஆறு மணிவாக்கில் வசந்த் எட்டிப் பார்த்தான்.

"பரவாயில்லையே... எல்லாம் ரெடியாயிடுச்சா? டைனிங் டேபிள்லே அழகா அடுக்கி வச்சிட்டு... நீ போய் குளிச்சுட்டு... எனக்குப் பிடிச்ச மயில் கழுத்து வண்ண சில்க் சேலையைக் கட்டிக்கிட்டு வா..."– உத்தரவிட்டான்.

குளியலை முடித்து சேலை கட்டி– கூந்தலை தளரப் பின்னி... பூச்சரத்தைச் சூடிக்கொண்டாள்.

நெற்றி வகிட்டில் குங்குமப் பொட்டிட்டு... பூஜையறையில் விளக்கேற்றி முடித்ததும்தான் தாமதம்...



வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

"வாங்க... வாங்க சார்... உள்ளே வாங்க... இது உங்க வீடு மாதிரி"– முகம் மலர வரவேற்றான் வசந்த்.

உள்ளே நுழைந்தவனைக் கண்ட காவ்யாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

வந்தவன் நரேந்திரன்!

"வா... வாங்க... வணக்கம்" திணறியபடி வரவேற்றாள்.

"காவ்யா! இவர் என்னோட எம்.டி. மட்டுமல்ல... நமக்கு தெய்வம் மாதிரி... சார் எனக்கு பதவி உயர்வு கொடுத்து தன்னோட பி.ஏ. ஆக்கிட்டாரு...

என்னோட 'சைடு பிசினஸ்'க்கு நிறைய முதலீடு பண்ணுறேன்னு சொல்லி இருக்காரு. நம்மை அவருக்கு ரொம்பவே பிடிச்சுப் போச்சு. உமாவை ஜாம் ஜாம்னு கல்யாணம் பண்ணிக் கொடுக்கச் சொல்லிட்டாரு.

எவ்ளோ பெரிய வி.ஐ.பி.? நம்ம வீடு தேடி வந்தது... நம்ம அதிர்ஷ்டம் காவ்யா! அவரை நல்ல முறையில் கவனிச்சு சந்தோஷப்படுத்த வேண்டியது உன் பொறுப்பு.

நீ சார்கிட்டே பேச்சு கொடுத்துக்கிட்டே பரிமாறத் தொடங்கு. நான் இதோ வந்து கலந்துக்கிறேன்..." என்று கூறிவிட்டு முன் அறையைவிட்டு வெளியேறினான்.

'எ... என்ன அர்த்தம் இதற்கு?'– காவ்யா திருதிருத்தாள்.

நரேந்திரன் கோணல் சிரிப்புடன் அவளை நெருங்கினான்.

'காவ்யா! உனக்கு ஆபத்து வந்துவிட்டது' உள்ளூர எச்சரிக்கை மணி பலமாக அடித்தது.

## 21

"எனக்கு விருந்து வைக்கணும்னு காத்திட்டிருக்கியா காவ்யா? நான் 'டேஸ்ட்' பண்ணலாமா? ரொம்ப ஆவலாக வந்திருக்கிறேன்..."– இருபொருள் பட அவன் பேசியதும்

அருவருப்பில் முகம் சுளித்தபடி... சட்டென்று நகரப் போனாள்.

"காவ்யா! இன்னுமா உனக்குப் புரியலை? நீ எனக்கு இணக்கமா நடந்துக்கிட்டா... உன் குடும்பம் ஓகோன்னு உசரத்துக்குப் போயிடும் தெரியுமா?"

"சீ! நான் அப்படிப்பட்ட பெண் இல்ல... புரிஞ்சுக்கோ. உன் எண்ணம் நிறைவேறாது. மரியாதையா வந்த வழியே போயிடு..நான் அடுத்தவர் மனைவி. ஞாபகம் இருக்கட்டும்"– கர்ஜித்தாள்.

"அடுத்தவன் மனைவிதான்... ஆனா, பெயரளவுக்குத்தான் நீ மனைவி! இன்னமும் கை படாத ரோஜான்னு எனக்குத் தெரியும். அளவுக்கு அதிகமா குடிச்சிட்டு... வசந்த் எல்லாத்தையும் உளறினான்.

அதைக் கேட்டதும் உன் மேல இருந்த ஆசை கூடுதலாயிடுச்சு. இப்பேர்ப்பட்டவன்கூட இன்னமும் வாழுறியே? அவனே என்னைக் கூட்டிட்டு வந்து விட்டிருக்கான். உனக்கு சந்தோஷத்தை நான் தர்றேன்டா செல்லம்... வா காவ்யா!" வெறி கொண்டவனைப் போல் நெருங்கி வந்தான்.

"ஐயோ! யாராச்சும் வாங்க... என்னைக் காப்பாத்துங்க... அத்தே! உமா! அத்தான்! ஆனந்த்! மாமா! ஐயோ... எல்லோரும் எங்கே போய் தொலைஞ்சீங்க? டேய் நில்லு! கிட்ட வந்தா உன் உயிர் உன்கிட்ட தங்காதுடா... ராஸ்கல்"– பயத்தில் டி.வி. மீது மோதிக்கொண்டாள். அங்கு அழகுக்காக வைத்திருந்த பித்தளைப் பூஜாடியை வாகாய் பற்றி– பலங்கொண்ட மட்டும் அவனது தலையில் ஓங்கி அடித்தாள். மண்டை பொத்துக்கொண்டு ரத்தம் வழிந்தது.

"ஆ... ஐயோ! பொண்ணா நீ... ராட்சசி"– தலையைப் பிடித்துக்கொண்டு அலறியதும்... எங்கிருந்தோ வசந்த் ஓடி வந்தான்.

"சார்... சார்... சாரி."

"சீ போடா... விட்டா கொலையே பண்ணிடுவா போலிருக்கு"–



தள்ளாடியபடி வெளியேறினான் நரேந்திரன். சத்தம் கேட்டு தங்கம்மாளும், உமாவும் இறங்கி வந்தனர்.

"காவ்...யா"– அதிர்ச்சி விலகாமல் பார்த்தான் வசந்த்.

"நீங்க ஒரு மனுஷனா? நான் உங்க மனைவி... ஒரு மொட்டைக் கடிதத்தைத் துருப்புச் சீட்டா பயன்படுத்தி என் மேல அபாண்டம் சுமத்துனீங்க... மாதவன் ஒரு ஜென்டில்மேன். அவனோட கால் தூசுக்குக்கூட நீங்க ஈடாக மாட்டீங்க.

வாழாவெட்டியா மகள் வந்துட்டாளான்னு எங்க அம்மா வருத்தப்படுவாங்கன்னு நான் பல்லைக் கடிச்சுக்கிட்டு இருந்தேன். கடைசியில என் மானத்துக்கே விலை பேசிட்டீங்களே? த்தூ...

நடமாடும் பிணமா, செக்குமாடா, பணங்காய்ச்சி மரமா, அடிமையா உணர்வுகள் செத்து வாழுறதைவிட... உங்க பாஷையில வாழாவெட்டியா இருக்கிறது எவ்ளோ மேல். எப்பேர்ப்பட்ட குறையை மூடி மறைச்சு இந்தக் கல்யாணத்தை நடத்தினீங்க... போதும்டா சாமி! குட்டை பார் எவர்"– காவ்யாவுக்கு எங்கிருந்தோ அசுர பலம்– தைரியம் வந்தது.

பேசிவிட்டுத் திரும்பியவளின் விழிகள் வியப்பால் விரிந்தன. அங்கே... அம்மா அபிராமி, கற்பகம், மாதவன், பவ்யா, சிவகுருநாதன் ஆகியோர் நின்றிருந்தனர்.

அந்த டைரியையும், ரிப்போர்ட்டையும் எடுத்துக்கொண்டு போய் அனைவரிடமும் காட்டிவிட்டான் மாதவன். அவர்கள் வந்து... சகலத்தையும் கேட்டார்கள்.

வசந்திற்கு ஜிவ்வென்று கோபம் தலைக்கேறியது. "உனக்கு என்னடி திடீர் வாய்க்கொழுப்பு?"– என்றபடி ஓங்கி அறைந்தான்.

நிலை தடுமாறி சரிந்து விழுந்தாள் காவ்யா.

"எழுந்திருடி... தாலி கட்டின புருஷனை மதிக்கலை... இந்த தாலிக்கு மதிப்பு கொடுக்கிறவளா இருந்தா... நான் சொல்றபடி ஆடி இருக்கணுமே...? எழுந்திரு"– குப்புற விழுந்தவளைத் தூக்க





முற்பட்டு தாலியைப் பற்றி வெறியோடு இழுத்தான்.

தாலி அறுந்து அவனது கையோடு வந்துவிட்டது.

“ஐயோ”– அலறினாள் காவ்யா. எழுவதற்குக் கூடத் திராணியற்று தொய்ந்து கிடந்தாள்.

“அடக் கடவுளே! பூ மாதிரி வளர்த்தேனே காவ்யா... நரக வேதனை அனுபவிச்சி இருக்கியே? இந்த அம்மாகிட்ட ஏன்டா மறைச்சே? வாழாவெட்டியா நீ வந்தா... கலங்கிடுவேன்னு நெனச்சியா? நான் அந்தக் காலத்து மனுஷிதான். ஆனா, பத்தாம் பசலி கிடையாது. இந்தக் கணினி யுகத்துல வாழுறவடி... பழம் பஞ்சாங்கமா இருக்கலாமா? இப்பவாவது தைரியம் வந்துச்சே?

கற்பகம்! பார்த்தியா? என் மகளோட கோலத்தை? விகல்பம் இல்லாம பழகின இந்த ரெண்டு புள்ளைங்களைப் பத்தி அபாண்டம் சுமத்தறாங்களே?”

பதறியபடி காவ்யாவின் அருகில் ஓடினாள்.

“டேய் மாதவா! அபிராமி உடம்புக்கு முடியாதவள்டா... காவ்யா ஒரு பூமாதிரி இருந்தா... இப்போ எப்படி கசக்கி எறிஞ்சிருக்காங்க பாருடா. இவ மருமகளா வரணும்னு நான் ரொம்ப காலமா ஏங்கினேன்டா...

காவ்யாவை கைத்தாங்கலாக நீ தூக்கு! வயசானவங்க நாங்க ரொம்ப காலம் இருக்கமாட்டோம். இனி அவளுக்கு எல்லாமே நீதான்! நல்ல நண்பர்கள், காதலர்களாக மாறலாம். தப்பில்லை... காவ்யா! அவங்க தம்பதியாக மாறும்போது அவங்களோட வாழ்க்கை சொர்க்கமாக இருக்கும்.

பெண்ணை கால்லே போட்டு கொத்தடிமையாக நசுக்கிறவங்க முன்னாடி வாழ்ந்து காட்டணும். டேய் மாதவா! இந்தப் பொறுக்கிப் பயல் இவளை விலக்கி வச்சுட்டா... அவ வாழாவெட்டியா? அதென்ன பட்டம்? அவ வாழணும். மாதவா! உன்கூடச் சேர்ந்து அவ வாழ்ந்து காட்டணும்.

இதுநாள் வரைக்கும் அபிராமிக்கு ஒரு நல்ல மகனா இருந்தே. இனிமே மூத்த மருமகனாவும் இருப்பா”– கண்களில் அனல்

பறக்கப் பொரிந்து தள்ளினாள் கற்பகம்.

"என்ன சொல்றே அபிராமி? நான் சொன்னது சரிதானே?"

"நூற்றுக்கு நூறு சரிதான் கற்பகம்! இது இருபத்தொன்றாம் நூற்றாண்டு... வேண்டாததை உதறிட்டு காலத்துக்கு தகுந்தபடி நாமளும் மாறிக்கணும். பெண்மை மதிக்கப்படணும்... போற்றப்படணும். அப்போதான் பூமி நிலைக்கும். நீ என் தெய்வம் கற்பகம். நீ சொன்னபடியே 'மெடிக்கல் ரிப்போர்ட்'டைக் காட்டி போலீஸ்லே புகார் தந்துடறோம்."

காவ்யாவை கைத்தாங்கலாகப் பற்றி எழுப்பி நிற்க வைத்து, அவளது கரத்தை எடுத்து தனது தோளில் போட்டபடி நடந்தான் மாதவன்.

"மா... மாதவா! நீ ஒரு ஜெம்! இங்கே வந்து வாழ்ந்து கஷ்டப்பட்ட பிறகு உன் மேல இன்னமும் மரியாதை கூடிப்போச்சு. உன் கால் தூசுக்கு இவங்க யாரும் ஈடாக மாட்டாங்க"– தழுதழுத்தாள்.

வசந்துக்கு செருப்பால் அடித்தது போலிருந்தது.

"இனி உன் கண்ணுல ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வரக்கூடாது. உன் மேல அனுதாபப்பட்டு நான் உன் கையைப் பிடிக்கலை... நிஜமாகவே நான் உன்னை நேசிக்கிறேன். இதைச் சொல்லத் தயங்கிட்டிருந்தேன். அதுக்குள்ளே விதி விளையாடி... நீ இவனுக்கு மனைவியாகி சித்திரவதை பட்டுட்டே. இப்போ சொல்றேன். ஐ லவ் யூ ஸோ மச் காவ்யா! இருண்டு கிடக்கிற எங்க வீட்டுக்கு நீ வந்து விளக்கேத்தணும்."

"சரின்னு சொல்லு... அப்பத்தான் நீ என் பொண்ணு. இவங்க முன்னாடியே சொல்லும்மா"– அபிராமி கண்கலங்க அதட்டினாள்.

"சரி மாதவா."

நீர் முட்டிய விழிகளோடு ஏறிட்டுப் பார்த்தவளை... உரிமையாய் தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டான் மாதவன்.

**(முற்றும்)**



# வலி



ஒரு மாட்டு வண்டி நிறைய சுமை ஏற்பட்டது. இரண்டு காளை மாடுகள் அதை இழுத்துக்கொண்டு புறப்பட்டன.

மலைப்பாதையில் வண்டி ஏறிக்கொண்டிருந்தது. மிகவும் சிரமப்பட்டு மாடுகள் இழுத்தன.

வண்டிச் சக்கர ஆணிகள் உரசி 'கிரிச், கிரிச்' என்று சத்தம் எழுந்தது.

இதைக்கேட்ட மாடுகளில் ஒன்று, "நாம் எவ்வளவோ சிரமப்பட்டு இழுக்கிறோம். ஏதேனும் குறை சொல்கிறோமா? இந்த சக்கர ஆணிகள் நம்மைப்போல் துன்பப்படுதா? இல்லை! பிறகு ஏன் அழுது அழுது புலம்புகின்றன?" என்றது.

– ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.



# இது எப்படி இருக்கு?

"எங்கே 'ஹெல்மெட்'?"

"லைசென்சு வாங்கும்போது வாங்கலாமேன்னு இருக்கேன் சார்!"

"என்னது... லைசென்சே இல்லையா? ஏன் 'லைசென்ஸ்' வாங்கலை?"

"வண்டி வாங்கும்போது வாங்கலாமேன்னு..."

"அப்போ வண்டி யாரோடது?"

"தெரியாது சார்!"

– மன்னார்குடி பிரபாகரன்